
இதழ் 236

# மண்

ஜேர்மனி / 2026

பங்குனி - சித்திரை / Mar - Apr




பங்குனி - 8 சர்வதேச மகளிர் தினத்தில் பாராட்டும் கௌரவமும் பெறுபவர்கள்

மண் சஞ்சிகையோடு இணைந்து, 35 ஆண்டுகளாகப் பயணம் செய்த வெள்ளிவிழா நாயகிகள்

எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள்,கல்வியாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள்.



மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவியால் கண்டி - பேராதனை தோட்டப்பகுதிகளில் நிவாரணப்பணிகள்.. 05.01.2026



மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவியால் மஸ்கேலியா தோட்டப்பகுதிகளில் நிவாரணப்பணிகள்.. 05.02.2026

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** mann .sivarajah@gmail.com

**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

## அனைவருக்கும் வணககம்!...

இன்றைய ஜே.வி.பி வேறு. அது நெகிழ்ச்சியும் உருமாற்றத்தையும் கொண்ட அநுரகுமார திசநாயக்கவின் முகத்தை உடையது. உறுதிப்பாடும் நிதானமும் கொண்ட ரில்வின் சில்வாவின் முகத்தைக் கொண்டது. இந்த இரண்டின் கலவையே தேசிய மக்கள் சக்தி. இன்றைய ஜே.வி.பியைப் புரிந்து கொள்ள முற்படுவோருக்கு இந்தக் கலவையின் நுட்பத்தையும் சிறப்பையும் தெரிந்து கொள்வது இலகுவாக இருக்கும்.

உள்நாட்டிலும் சரி, வெளியுலகிலும் சரி, மிகச் செல்வாக்கான நம்பிக்கைத் தோற்றமுடைய முகம் அநுரகுமார திசநாயக்கவினுடையது. ”மக்களின் நாயகன்” என்று சொல்லக் கூடிய இன்றைய தலைவர் அநுரகுமார திசநாயக்க. இதை யாரும் மறுக்க முடியாது. வெளியுறவுக் கொள்கை உட்பட எதையும் வெளிப்படையாக உரத்துச் சொல்லாத, இனவாதத்தை வெளிக்காட்டாத செல்வாக்கான இந்த முகத்தை வாய்ப்பாகப் பயன்படுத்திவருகிறார்.

அநுரகுமார செல்லும் வெளிநாட்டுப் பயணங்களை நோக்கினால் முதலில் ஓரிடத்துக்குச் செல்வார். அடுத்ததாக அவரைத் தொடர்ந்து ஏனைய அரசுப் பிரதிநிதிகள் அந்த இடங்களுக்குச் செல்வார்கள். அதற்குப் பிறகு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா செல்வார். உள்நாட்டிலும் இதுதான் நடக்கிறது. வெளிநாடுகளிலும் இதுவே நிகழ்கிறது. அனுராவின் கடந்த கால வெளிநாட்டுப் பயணங்களை நோக்கினால் இது விளங்கும்.

அநுரகுமார திசநாயக்க தன்னுடைய செல்வாக்கான அடையாளத்தைக் கொண்டு கடினமான பாதைகளை இலகுவாக்கிக் கொடுக்கிறார். அதைப் பயன்படுத்தி, ஏனையவர்கள் தங்களுடைய அடுத்த கட்டச் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள். ஆக ஜே.வி.பியின் அல்லது தேசிய மக்கள் சக்தியின் நம்பிக்கை நட்சத்திரமும் அரசியல் முதலீடும் அநுரகுமார திசநாயக்கவே. அதை அவரும் மிகச் சரியாகப் பேணிக்கொள்கிறார். மிகச் சாதாரணரைப் போன்ற ஒரு தோற்றத்தில் மிக வலிமையான மனிதராக, தலைவராக அநுர தொழிற்படுகிறார்.

அநுரகுமார திசநாயக்கவுக்கு துணை செய்வதைப்போல அல்லது தேசிய மக்கள் சக்தியின் பயணத்துக்கு வலுச்சேர்ப்பதைப்போல கூடவே பிரதமர் ஹரிணி அமரசூரியவும் ஏனைய சில அமைச்சர்களும் இருக்கிறார்கள். கடந்த ஓராண்டு ஆட்சிக் காலத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேச ரீதியாக வலுவான உறவைக் கட்டியெழுப்பியிருக்கிறது. நன்மதிப்பைப் பெற்றுள்ளது

இன்று நாட்டின் பல சாவால்களை முறியடித்து வெற்றிப் பாதையில் பயணிக்கிறார். அனுரா திஸநாயக்க. இதனால் அவரின் செல்வாக்கு

என்றுமில்லாவாறு உயர்ந்து வருகின்றது. நாட்டின் சகல இன, மத மக்களின் செல்வாக்கு மிக்க தலைவராகவே இருந்து வருவதுடன் வெளிநாடுகளின் நன்மதிப்பையும் பெற்று வருகிறார். அண்மைய கணிப்பின்படி அவரின் செல்வாக்கு எழுபது வீதமாக உயர்ந்திருப்பதாகத் தெரியவருகின்றது. நல்லது வாழ்த்துக்கள்!....

இருந்தும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைகள், காணாமல் போனவர்களின் சரியான தீர்வு, அரசியல் கைதிகளின் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலப்பரப்புகள் விடுப்பு, மாகாணசபைகளின் தேர்தல் போன்ற பல பிரச்சனைகளுக்கும் அனுரா அரசு விரைவாக தீர்வைப் பெற்றுத் தருமானால் தமிழ் மக்களின் அமோக செல்வாக்கையும் பெற்றுவிடுவார் என்பதுதான் யதார்த்தம். செய்வார் என நம்புவோம்!.. அனைத்து இன, மத மக்களும் ஒரே நாட்டுக்குள் சரி சமமாக வாழ அனுர அரசு நல்ல தீர்வைத்தரும் என நம்புவோம்!..

**ஆசிரியர் - 25.2.2026**

## மண் சஞ்சிகையின் அட்டைப்படத்தை அலங்கரிப்பவர்கள்!..

"மண்" கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையில் கடந்த 25, 30, 35 வருடங்களாக எழுதியவர்கள் எழுதிக்கொண்டிருப்பவர்கள், கல்வி கலை செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித நேயச் செயற்பாட்டாளர்கள் அனைவரும் சர்வதேச பெண்கள் தினமான பங்குனி 8ல் பாராட்டுப் பெறுகிறார்கள். இவர்களை வாழ்த்தி மகிழ்வடைகின்றோம்!.. மேலும் இவர்களின் கல்வி, கலை, எழுத்துப் பணிகள் சிறப்புற்று உடலாரோக்கியத்துடன் நீடுழி வாழ வாழ்த்தி மகிழ்கின்றோம்!.

**பிரதம ஆசிரியர் - மண் சஞ்சிகை**

01-திருமதி ஜெயா நடேசன்
02-கலைவாணி ஏகானந்தராசா
03-திருமதி கீதா பரமானந்தன்
04-திருமதி கெங்கா ஸ்ரான்லி
05-திருமதி விக்னா பாக்கியநாதன்
06-திருமதி வசந்த ஜெகதீசன்
07-திருமதி சுந்தராம்பாள்பாலச்சந்திரன்
08-திருமதி இராஜேஸ்வரி சிவராசா
09-திருமதி நகுலா சிவநாதன்
10திருமதி திரேஸ் மரியதாசன்
11-திருமதி சாந்தினி துரையரங்கன்
12-திருமதி மங்கையரசி சிவகிருஸ்ணா
13-திருமதி ராணி சம்பந்தர்
14-திருமதி கௌசி சிவபாலன்
15-செல்வி சாமினா சிவதாசன்
16-திருமதி சிபோ சிவகுமாரன்
17-திருமதி சர்வேஸ்வரி கதிரித்தம்பி
18-திருமதி பிரியா மூர்த்தி
19-திருமதி வேணி கிருபாகரன்
20-திருமதி சோபியா பாஸ்கரன்
21-திருமதி ஜெகதீஸ்வரி மகேந்திரம்
22-திருமதி மீனாசிவலிங்கம்(அமரர்)
23-திருமதி கலா மகேந்திரம்
24-திருமதி மீரா நித்தியானந்தன்
25-திருமதி இந்திரா மகாலிங்கம்
26-திருமதி இந்து தெய்வேந்திரம்
27-திருமதி மங்கை சிவராசன்
28-திருமதி மேரி விஜயரட்ணம்

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### தீவினை அகற்று..

இராமாயண காவியத்தின் ராவணன் தனக்கு உரிமை இல்லாத சீதையை அபகரித்ததினால் பட்ட துன்பங்கள் எத்தனை?.. பாராதத்தில் பாண்டவர்களின் ராஜ்யத்தை வஞ்சகமாகத் தனதாக்கிக் கொண்டதனால் கௌரவர்களின் கதி என்னவாயிற்று?.. இதே போல உயிர்ப் பிராணிகளை வதைத்தவர்கள் வருந்திய கதையெல்லாம் அறிவீர்கள். நம்மடையது அல்லாத பிறர்பொருளைத் திருடுதல், உயிர்ப்பிராணிகளைக் கொலை செய்தல் இவை எல்லாம் பாவமான செயல்கள். இவற்றைச் செய்தால் உன்னை ஊரும் உலகமும் வெறுத்து ஒதுக்கும். துன்பங்கள் தொடரும். கெட்ட செயல்களாகிய தீவினை செய்வோர் சந்தோஷமாக வாழமுடியாது. ஆகையால் பாவச் செயல்களான தீவினைகளைச் செய்யாதே என்றார் ஔவைப்பாட்டி.

### துன்பத்துக்கு இடம்கொடேல்..

ஒருவரது வாழ்க்கை இன்பமாக இருக்க வேண்டும். மனம் சஞ்சலமின்றி அமைதியாக இருக்குமானால் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.. உடல் நலம் ஒழுங்காக இருந்தால் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கக் கேட்பானேன். மனம் அமைதி இல்லாமல் போவானேன்.?.. ஏதாவது ஒரு பொருளை இழந்தால் உறவினர் யாராவது இறந்தால் வருத்தம், வேதனை ஏற்படுகின்றது. இது இயற்கைதான். ஆனால் இத்தகைய வேதனை வருத்தத்திலேயே நாம் ஆழ்ந்துவிடக்கூடாது.. விரைவிலேயே அந்தத் துக்கத்தை, வேதனையை மறந்துவிட வேண்டும். அப்படி இல்லாமல் வேதனைப்பட்டுக் கொண்டே இருந்தால் மனம் கெடும். வாழ்வும் பாழ்படும். ஆகவே மனவருத்தத்துக்குக் கொஞ்சமும் இடம் கொடுக்கக்கூடாது என்கிறார் நம் ஔவைப்பாட்டி.

# நல்நெறிபற்றி........

- வி நந்தகுமாரன் -

## சமாதானப் பாதையில், சந்தோஷம் நிறையும்.

சந்தோஷம் தராத செயல்களைச் செய்து, சங்கடப் படாதீர்கள்.
சமரச வாழ்வில் சந்தோஷம் நிறைந்த சமூகம் செழித்து வளர்கிறது.
சலனமற்ற சமுதாயத்தில் சகல சௌபாக்கியங்களும் சேர்கிறது.
சமாதான சம்சாரத்தில் சமூகங்களின் சந்தோஷம் சாத்தியமாகிறது.
சமநிலை பேணப்படாத திருமணங்களில் சந்தோஷம் சற்று தாமதமாகும்..
சமூகங்கள் சில விதிமுறைகளில் ஒட்டிவாழும் சூழ்நிலையில் செல்கிறது.
சகிப்புத்தன்மையற்ற சமூதாயத்தில் சந்தோஷம் சிறுகச்சிறுக சிதைவடைகிறது.


சந்தோஷம் உங்களிடம் உள்ளது அதை அனுபவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்
சமூக வாழ்வு சாதாரணமானதல்ல சாதனைகளைப் புரிந்து செல்ல வேண்டும்.
சமூக சிந்தனைகள் தூண்டப்படும்போது செழிப்புகள் செயல் வடிவமாகின்றது.
சமூதாயம் சிதைவுற்றுப்போகாமல் சிறார்கள் சீர்திருத்தம் பெறவேண்டும்.
சர்ச்சைகளைத் தோற்றுவிக்கும் சொற்களைத் தவிர்த்தலே சிறப்பாகும்.
சரிவரப் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் சிறப்பான சித்திகள் சேர்க்கும்.
சரியான நேரத்தில் சரியான இடத்தில் நிறைவேறும் கடமைகள் சிறப்புபெறும்
சமாதானம்செய்தல் சமூகத்தில் சொர்க்கத்தையும் சந்தோஷத்தையும் தரும்

சக்தியுள்ள அறிவு சரியான வழிமுறைகளைத் தந்து சீர்செய்கிறது
சர்வ வல்லமையுள்ள உலகம் மீது உண்மையான அன்பைச் செலுத்துங்கள்.
சாந்தமும் சமாதானமும் கஸ்டங்களை விலக்கி சாதனைகளைச் செய்யும்.
சாதனையும் வேதனையும் சமூகத்தின் நடைமுறைகளில்தான் பிறக்கிறது.
சாதாரண நேரங்களிலும் நெருக்கடி நேரங்களிலும் மனோதிடம் தேவை
சிந்தனை வரம்பிற்குள் நின்று வாழும்போது வாழ்க்கை சிறப்பாகிவிடும்.

சீதனத்தில் சிக்கித் தவிக்கும் வாழ்வு சிதைந்து சின்னாபின்னமாகும்
சுரண்டலும் சூழ்ச்சியும் சமுதாயச் சீரழிவுக்குள் சிக்கித் தவிக்கும்
சூழ்ச்சியும் வீழ்ச்சியும் வேதனைகளும் வாழ்வை வலுவிழக்கச் செய்யும்
செய்யும் தொழிலை நேசிக்கக் கற்றுக் கொள் தொழிலின் சிறப்புப் பெருகும்.
சொல்லும் செயலும் சீரானால் சொல்லோணாத் துயரை விரட்டலாம்
சோம்பேறிக்குப் பாடம் புகட்டுவதற்காகவே உலகில் எறும்பு ஊர்கிறது
சோம்பலை நீக்குபவர்கள் சோகம் நீக்கி சோலைப் பறவைகளாகிறார்கள்...

## மறைந்திருக்கும் படத்தைக் கண்டுபிடியுங்கள்...

இங்கே காணப்படும் படத்தில் புள்ளிகள் காணப்படும் இடங்களில் வர்ணம் தீட்டுங்கள். ஒரு அழகிய படம் ஒன்று உருவாகும்... அப்படத்தைக்காண பக்கங்களைப் புரட்டுங்கள் படம் தெரியவரும்...



## பொது அறிவு....



01- இரவு இல்லா நாடு - நோர்வே
02- தலைநகர் இல்லாத நாடு - நவுருதீவு
03- இராணுவம் இல்லாத நாடு - கோஸ்டரிக்கா
04- போர் செய்யா நாடு - சுவீஸ்லாந்து
05- சிறையில்லாத நாடு - வத்திகான் நகரம்
06- ஆறுகள் இல்லாத நாடு - சவுதிஅரேபியா
07- இரயில் போக்குவரத்து இல்லா நாடு - பூட்டான்
08- கொசுக்கள் இல்லா நாடு - ஐஸ்லாந்து
09- மரங்கள் மிகக்குறைவான நாடு - கத்தார்
10- பாம்புகள் இல்லாத நாடு - அயர்லாந்து





# முல்லாவின் கதை

## கீழே விழுந்த சட்டை...

ஒரு நாள் முல்லா தமது மாடியில் ஏதோ வேலையாக இருந்தார். கீழே சமையலறையில் அவர் மனைவி சமையல் செய்து கொண்டிருந்தார். மாடியிலிருந்த முல்லா திடீரெனக் கால் தவறிக் கீழே விழுந்து விட்டார். தடால் என்ற சப்தத்துடன் எதோ ஒன்று கீழே விழுந்த சப்தத்தைக் கேட்ட மனைவி திடுக்கிட்டு அது என்ன சப்தம் என்று கேட்டாள்.

கீழே விழுந்த முல்லா தன் உடம்பில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டி விட்டவாறு ஒன்றுமில்லை மாடியிலிருந்து என் சட்டை கீழே விழுந்து விட்டது என்றார். ஒரு சட்டை விழுந்து விட்டதனாலேயா அவ்வளவு பெரிய சத்தம் கேட்டது? என்று மனைவி ஆச்சரியத்துடன் கேட்டாள். சட்டைக்குள் நான் இருந்தேன் என்று கூறி முல்லா கமாளித்தார். அவர் மனைவிக்கு அழுவதா சிரிப்பதா என்றே தோன்றவில்லை.

..............................................................................................................................

## உலகில் வெற்றிபெற்ற பணக்காரர்கள் சொல்லும் 8 இரகசியங்கள்..

1- நேரத்தை மதிக்க வேண்டும்
2- தோல்வியைக்கண்டு பயப்படாமல் இருக்க வேண்டும்
3- தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும்
4- தேவையில்லாத செலவைத் தவிர்க்க வேண்டும்
5- பணத்தை வேலைசெய்ய வைக்க வேண்டும்
6- சரியான மனிதர்களுடன் பழகவேண்டும்
7- இலக்கு தெளிவாக இருக்க வேண்டும்
8- பொறுப்பும் விடாமுயற்சியும் வேண்டும்

# தமிழ் எழுத்துக்கள்

இந்தியாவில் ஆராய்ச்சி மூலம் தமிழ் எழுத்துக்கள் எப்படி வளர்ந்தன என்பதைப் பற்றி சில தகவல்கள் கிடைத்துள்ளன. பழங்காலத்தில், தமிழர்கள் ஐயாயிரம் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சித்திர எழுத்துக்கள் பயன்படுத்தினர் என்று அறியப்பட்டுள்ளது. அந்த எழுத்துக்கள் காலத்திற்கேற்ப மாறி வளர்ச்சி பெற்றன. பிராமி எழுத்துக்கள் முதலில் வட இந்தியாவில் தோன்றின. அவை பல வருட மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. தென்னிந்தியாவில் அதே நேரத்தில் தமிழ் எழுத்துக்களின் ஆரம்ப வடிவம் உருவாயிற்று. அந்த எழுத்துக்கள் கற்களில் எழுதப்பட்டன, வட்டமாக இருந்ததால் அவையை ”வட்டெழுத்துக்கள்” என்றனர்.

வட இந்தியா மற்றும் தென்னிந்திய எழுத்துக்கள் ஒரே அடிப்படையில் இருந்தாலும், இரண்டு வேறு வடிவங்களாக மாறிவிட்டன. வட இந்திய எழுத்துக்களின் ஒலி மாறியது, தென்னிந்தியாவில் வட்டெழுத்துக்கள் புதிய மாற்றம் பெற்றன. நேராக எழுதினால் ஓலை கிழிந்துவிடும், அதனால் வளைந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. சில ஒலிகள் தமிழில் இல்லாததால, அவ் ஒலிகள் வடமொழிகளில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டன. இதனால் ”கிரந்த எழுத்து” உருவானது.

இந்த எழுத்திலிருந்து தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகள் பிறந்தன. தமிழ் மொழி வளர வளர, எழுத்துக்களின் வடிவம் மாறினாலும், அவற்றின் ஒலி அதிகமாக மாறவில்லை. இன்றும் சில ஒலிகளுக்குத் தனியான எழுத்துக்கள் இல்லை, உதாரணமாக ”க” என்ற ஒரு எழுத்து பல வித ஒலிகளைக் குறிக்கிறது. பழைய தமிழ் எழுத்துக்கள் இன்றைய எழுத்துக்களுடன் ஒப்பிட்டால், வடிவத்தில் பெரிய வித்தியாசம் தெரியும். உதாரணத்திற்கு, திருவள்ளுவர் இன்று இருந்திருந்தால், புதிய தமிழில் எழுதப்பட்ட தனது திருக்குறளை அவர் படிக்க முடியாமல் இருக்கும்.

மேலும் பழைய காலத்தில் குறில் நெடில் எழுத்துக்கள் வேறுவிதமாகக் குறிக்கப்பட்டன. ”எ” குறில் எழுத்து எனத் தெரியபடுத்த, அதன் மேலே ஒரு புள்ளி வைத்தார்கள். புள்ளி இல்லாமல் இருந்தால் ”எ” நெடில் ஆகும். பின்னர் தமிழ் கற்ற ஒரு இத்தாலியர், வீரமாமுனிவர் என்று தன்பெயரை மாற்றி அழைத்து, சில தமிழ் எழுத்துக்களின் வடிவத்தை மாற்றினர்.காலத்திற்கு காலம் தமிழ் பல மாற்றங்கள் அடைந்து,இன்று இருக்கும் வடிவத்தை பெற்றது. உலகம் மாறுவது போல, தமிழ் மொழியின் எழுத்துகளின் மாற்றமும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

**செல்வி. நித்தியா ரவீந்திரன்.**

**எசன் தமிழ் பாடசாலை.**

# இதுவும் தான் தமிழ்!

அனைத்தையும் படிக்க ஒரு பிறவி போதாது..பெயர்களையாவது படித்து அறிவோம்..

1. தேவாரம்
2. திருவாசகம்
3. திருமந்திரம்
4. திருவருட்பா
5. திருப்பாவை
6. திருவெம்பாவை
7. திருவிசைப்பா
8. திருப்பல்லாண்டு
9. கந்தர் அனுபூதி
10. கந்த புராணம்
11. பெரிய புராணம்
12. நாச்சியார் திருமொழி
13. ஆழ்வார் பாசுரங்கள் போன்ற மிகச் சிறந்த பக்தி இலக்கியங்கள்..!

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. அகநானூறு
5. புறநானூறு
6. பதிற்றுப்பத்து
7 .பரிபாடல்
8. கலித்தொகை

என்னும் ”எட்டுத்தொகை” சங்க நூல்கள்.. !

1. திருமுருகாற்றுப்படை
2. சிறுபாணாற்றுப்படை .
3 பெரும்பாணாற்றுப்படை
4. பொருநராற்றுப்படை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக்காஞ்சி
7. நெடுநல்வாடை
8. குறிஞ்சிப் பாட்டு
9. பட்டினப்பாலை
10.மலைபடுகடாரம்

என்னும் ”பத்துப்பாட்டு” சங்க நூல்கள்....!

.

1 .திருக்குறள்
2. நாலடியார்
3. நான்மணிக்கடிகை
4. இன்னாநாற்பது
5 .இனியவை நாற்பது
6. கார் நாற்பது
7. களவழி நாற்பது
8. ஐந்திணை ஐம்பது
9. திணைமொழி ஐம்பது
10.ஐந்திணை எழுபது
11.திணைமாலை நூற்றைம்பது
12.திரிகடுகம்
13.ஆசாரக்கோவை
14.பழமொழி
15.சிறுபஞ்சமூலம்
16.முதுமொழிக் காஞ்சி
17.ஏலாதி

இன்னிணைக்கீழ்க்கணக்கு நீதி நூல்கள்...!

1. சிலப்பதிகாரம்
2 .மணிமேகலை
3 .சீவக சிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

போன்ற ஐம்பெருங்காப்பியங்கள்...

1. அகத்தியம்
2. தொல்காப்பியம்
3. புறப்பொருள்
4 வெண்பாமாலை
5 நன்னூல்
6 பன்னிரு பாட்டியல் போன்ற இலக்கண நூல்கள் மற்றும்
7 இறையனார் களவியல் உரை எனும் உரைநூல்..!

கம்பராமாயணம்-வழிநூல்.

1. முத்தொள்ளாயிரம்
2. முக்கூடற்பள்ளு
3. நந்திக்கலம் பகம்
4. கலிங்கத்துப்பரணி
5. மூவருலா போன்ற எண்ணற்ற சிற்றிலக்கிய வகைகள்...!

ஒரு மொழியின் மிகச்சிறந்த பண்பே செம்மொழிக்கான கீழ்க்கண்ட பதினோரு தகுதிகளைக் கொண்டிருப்பதுதான்..

1.தொன்மை
2.தனித்தன்மை(தூய்மைத் தன்மை)
3.பொதுமைப் பண்புகள்
4.நடுவுநிலைமை
5.தாய்மைத் தன்மை
6.கலை பண்பாட்டுத் தன்மை
7.தனித்து இயங்கும் தன்மை
8.இலக்கிய இலக்கண வளம்
9.கலை இலக்கியத் தன்மை
10.உயர் சிந்தனை
11.மொழிக் கோட்பாடு
இந்தப் பதினோரு பண்புகளையும் கொண்ட உலகின் மிக மூத்த மொழி என் தாய்மொழி தமிழ்..!

சமய குரவர்கள்
----------------------------

1. திருஞானசம்பந்தர்
2. திருநாவுக்கரசர்
3. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
4. மாணிக்கவாசகர்

சைவம் வளர்த்தோர்
-----------------------------------
1. சேக்கிழார்
2. திருமூலர்
3. அருணகிரிநாதர்
4. குமரகுருபரர்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எம் முன்னோர்கள் பேசிய இனிய மொழி எம் தாய்மொழி தமிழ்..!
இவ்வளவு சிறப்பு வாய்ந்த நம் மொழியை எவராலும் அழிக்க இயலாது.பெருமை கொள்வோம் தமிழரென்று....
தமிழனென்று சொல்லடா..!
தலை நிமிர்ந்து நில்லடா...!!

**ஆ.சுந்தரமூர்த்தி**
M.A.,M.L.
**சிறப்பு அரசு பொது வழக்கறிஞர்**
**– திருப்பத்தூர்.**

( இன்னும் கோடிக்கணக்கானவை தமிழில் கொட்டிக்கிடக்கின்றன நாம் கற்றது கையளவு கல்லாதது கடலளவே!....)

.....................................................................

## அறிந்துகொள்வோம்...

வலையொளி - Youtube

தேடல்பொறி - Google

முகநூல் - Facebook

புலனம் - WhatApp

படவரி - Instagram

கீச்சகம் - Twitter

காயலை - Skype

தொலையலை- Telegram

ஊடலை - Bluetooth

அளாவி - WeChat

பற்றியம் - Massenger

பகிரலை - Hotspot

அருகலை - Wifi




மேலே காணப்படும் வட்டத்தில் காணப்படும் எழுத்துக்களிலிருந்து மிக அதிகமான சொற்களைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய எசன் நகரைச் சேர்ந்த செல்வி சாமினா சிவதாசன் அவர்களுக்குப் பாராட்டுகள்..இவர் 59 சொற்களைக் கண்டுபிடித்துள்ளார்.

1. அது
2. அடி (அடித்தல்)
3. அடி (அளவு)
4. அடி (காலின் அடிப்பாகம்)
5. அடித்தல்
6. அடிதடி (சண்டை)
7. அடித்து
8. அடிபிடி (சண்டை)
9. அடிமுடி (தொடக்கமும் முடிவும்)
10. அல் (இரவு)
11. அவல்
12. அமுது
13. அமுல் (நடைமுறைப் படுத்துதல்)
14. அகல் (விட்டுவிலகு)
15. அகல் (விளக்கு)
16. அல்டி (Aldi Discounter)
17. அமல் (அதிகாரம்)
18. கல்
19. கடி (கடித்தல்)
20. கடித்தல்
21. கடி ( தோல் கடித்தல்)
22. தடி (சிறிய கம்பு)
23. தடித்தல் ( பூச்சி கடிப்பதனால் தோலில் ஏற்படும் சிறு வீக்கம்)
25. தகவல்
26. தமது
27 துடித்தல்
28. நதி
29. நடி (நடித்தல்)
30. நடித்தல்
31. நடித்த
32. நமது
33. நகல்
34. நவ
35. நத்து (சங்கு)
36. நொடி
37. நொ (துன்பம்)
38. மது
39. மத்து (தயிர் கடை கருவி)
40. மதி
41. மடி
42. மடித்து
43. முகடி (மூதேவி)
44. முடி (முடிவு)
45. முடி (தலைமயிர்)
46. முடித்த
47. முடித்தல்
48. முத்து
49. முத்தல்
50. முதல்
51. பிடி (பெண் யானை)
52. பிடி (கை பிடி)
53. பிடில் (ஓர் இசைக்கருவி)
54. பிடித்தல்
55. பிடித்து
56. பித்து (பைத்தியம்)
57. பித்தல்
58. வடித்தல்
59. வடி

## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 54

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | | | | 3 | 2 |
| | | | | | | | | |
| | | | 6 | 7 | 8 | | 9 | |
| | | | | | 1 | | | 5 |
| | | | | 2 | 6 | 9 | | 3 |
| 4 | | | 9 | 3 | | | | |
| | | | 1 | | | | | |
| | 5 | 6 | | | | | 1 | 8 |
| | 2 | | 7 | | 3 | 5 | | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 147
## ( பங்குனி - சித்திரை 2026 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-04 கல்விக் கூடம் இது.
14-16 பழங்களில் ஒன்று.
வ-இ
08-06 குடும்பத்தில் முதலானவள்.
11-09 துணிவகைகளில் ஒன்று..
கீ-மே
08-04 கடலின் கரையில் காணப்படும்.
13-09 இது அழிவதால் உலகில் மழை குறைகின்றது.
மே-கீ
01-09 பரதக்கலை சிறக்க இதுவும் முக்கியம்.
08-16 அறிவு புகட்டிய புகழ்பெற்ற பாட்டி

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## மனித சமூகத்தின் கூற்று..

- அடுத்தவன் வீட்டில் யாராவது இறந்தால் அது பேய்.. நம் வீட்டில் யாராவது இறந்தால் அது சாமி..

- அடுத்தவன் வீட்டில் கஷ்டங்கள் வந்தால் அது அவர்கள் செய்த பாவம். நம் வீட்டில் கஷ்டங்கள் வந்தால் அது கடவுளின் சோதனை.

இதுதான் மனித சமூகத்தின் கூற்று...

## வெற்றி.....

1 வருடம்

12 மாதங்கள்

365 நாட்கள்

8760 மணிகள்

525600 நிமிடங்கள்

31536000 நொடிகள்

உலகில் எத்தனை அதியங்கள் நடை பெறுகின்றன. ஆகவே ஒவ்வொரு நொடியையும் (வினாடி) பொன்போல பேணி வாழ்ந்தால் வாழ்வில் வெற்றி பெறலாம்...

## அனுபவம் என்பது...

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
“அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன்“ எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
“அனுபவம் என்பதே நான்தான்“ என்றான்!

## உங்களுக்குத் தெரியுமா?..

1- பின்லாந்து நாட்டில் சுமார் 1.88.000 ஏரிகள் காணப்படுகின்றன.

2- தென்னமெரிக்காவில் வடக்கு - தெற்காகப் பரவியிருக்கும்”ஆன்டிக்ஸ்”மலைத்தொடர்தான் உலகின் நீளமானது. 7.000 கி.மீட்டர் நீளமும் 200 முதல் 700 கி மீட்டர் அகலமுமாகும். இது வெனிசூலா, கொலம்பியா, ஈக்குவடோர், பேரு, பொலிவியா, சிலி, மற்றும் ஆஜர்ன்தீனா ஆகிய ஏழு நாடுகளில் பரவிக் கிடக்கின்றது. உலகின் உயரமான எரிமலையும் இங்குதான் உள்ளது.

## யாரிடம் எப்படிப் பேச வேண்டும்..

அம்மாவிடம் அன்பாகப் பேசுங்கள்
அப்பாவிடம் பண்பாகப் பேசுங்கள்

மனைவியிடம் மனதாரப் பேசுங்கள்

சகோதரனிடம் அளவாகப் பேசுங்கள்

சகோதரியிடம் பாசமாகப் பேசுங்கள்

குழந்தையிடம் செல்லமாகப் பேசுங்கள்

உறவினரிடம் பரிவாகப் பேசுங்கள்

நண்பர்களிடம் நட்பாகப் பேசுங்கள்

வாடிக்கையாளரிடம் நேர்மையாகப் பேசுங்கள்

வியாபாரியிடம் கராராகப் பேசுங்கள்

அறிவாளியிடம் பணிவாகப் பேசுங்கள்

எதிரியிடம் தைரியமாகப் பேசுங்கள்

கடவுளிடம் மவுனமாகப் பேசுங்கள்

மொத்தத்தில் பிறரிடம் மனம் புண்படாதவாறு உண்மையாகப் பேசுங்கள்

## வாழ்க்கைத் தத்துவம்..

அழிவைத் தருவது - ஆணவம்

ஆபத்தைத் தருவது - கோபம்

இருக்க வேண்டியது - பணிவு

இருக்கக்கூடாதது - பொறாமை

உயர்வுக்கு வழி - உழைப்பு

கண்கண்ட தெய்வம் - பெற்றோர்

செய்ய வேண்டியது - உதவி

செய்யக் கூடாதது - துரோகம்

நம்பக் கூடாதது - வதந்தி

நழுவ விடக்கூடாதது - வாய்ப்பு

நம்முடன் வருவது - புண்ணியம்

பிரியக் கூடாதது - நட்பு

மறக்கக் கூடாதது - நன்றி

மிக மிக நல்ல நாள் - இன்று

மிகப் பெரிய தேவை - அன்பு

மிகக் கொடிய நோய் - பேராசை

மிகச் சுலபமானது - குற்றம்காணல்

மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு

## பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும்?..

1- ஆண் பிள்ளைகளை செலவாளியாய் வளர்க்காதே..செலவாளி மகன் தன் குடும்பத்தைக் காக்கத் திணறுவான்.

2- பெண் பிள்ளைகளை செல்லமாய் வளர்க்காதே..செல்ல மகள் வாழ்வின் சிறு துயரத்தையும் தாங்க முடியாமல் துன்பப்படுவாள்.

மகனுக்குப் பணத்தின் அருமையையும் மகளுக்கு மன வலிமையையும் கற்றுக் கொடுங்கள்.. அதுதான அவர்களுக்கு நீங்கள் தரும் உண்மையான சொத்தாகும்...

# ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி!...

## உண்மையான விளக்கம்..

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி என்பது ஐந்து பெண்மக்களைப் பெறுவதைக் குறிப்பாகக் கூறுவார்கள். அது தவறானதாகும். அப்போ எது? உண்மையானது..

1- ஆடம்பரமாய் வாழும் தாய்

2- பொறுப்பில்லாமல் வாழும் தந்தை

3- ஒழுக்கமற்ற மனைவி அல்லது கணவன்

4- ஏமாற்றுவது, துரோகம் செய்யக்கூடிய உடன்பிறந்தோர்

5- சொல், பேச்சுக் கேளாத பிடிவாதமுள்ள பிள்ளைகள்

ஆகிய ஐந்தும் இருந்தால் அரசனே ஆனாலும் அவனது வாழ்க்கை அழிவை ஏற்படுத்தும் என்பதே உண்மையான விளக்கமாகும்.

---

# சில பழமொழிகளின் விளக்கம்...

## பாடுபட்டுக் குத்தினாலும் பதரில் அரிசி இருக்காது.

(பதர் என்பதே அரிசி இல்லாத நெல் தான். அதனால் என்ன தான் குத்தினாலும் அதில் அரிசி கிடைக்க வாய்ப்பில்லை. மனிதனின் பயனில்லாத முட்டாள்தனமான முயற்சி குறித்துச் சொல்லும் பழமொழி)

## கடைந்த மோரிலே குடைந்து வெண்ணைய் எடுப்பான்.

(தயிரில் வெண்ணெய் எடுத்த பிறகு தான் மோராகிறது. அந்த மோரிலேயே மீண்டும் வெண்ணெய் எடுக்கும் அளவு சாமர்த்தியம் வாய்ந்தவர்களைப் பற்றி இந்தப்பழமொழி சொல்கிறது.)

## வாங்குகிற கை அலுக்காது.

(வாங்கிக் கொண்டே இருப்பவர்களுக்கு அலுப்பே இருக்காது



.................................................................................................

**வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள்,**

**மனிதநேய செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும்**

**இனிதான சித்திரைத் திருநாள் வாழ்த்துகள்..**

# சிரி...சிரி...சிரிப்பு!...

(1) விமல்:- தலை மயிர் எல்லாம் கொட்டி வழுக்கையாகிவிட்டது.
ராகுல்:- கொஞ்சம் ஏமாந்தால் எல்லோரும் என் தலையில் ஏறி உட்காந்திட்டாங்கள்.
விமல்:- அப்புறம் என்னாச்சு?..
ராகுல்:- வழுக்கிக் கீழே விழுந்திட்டாங்கள்..

(2) சுந்தரி:- வர..வர..என்புருஷன் ரொம்ப மோசமடி..
நந்தினி:- ஏன் குடிச்சிட்டு வந்து ரொம்ப சண்டை போடுகிறாரா?..
சுந்தரி:- இல்லையடி..டாக்ட ர்கொடுக்கும் மருந்துக் குளிசையைக்கூட ஊறுகாய் இருந்தால்தான் தொட்டுக் குடிப்பேன் என அடம்பிடிக்கிறாரடி!..

(3) மகன்:- காகம் கத்தினால் சொந்தக்காரர் வருவர்களா?..
அப்பா:- ஆம்..
மகன்:- அப்படி என்றால் எப்ப திரும்பிப் போவார்கள்..
அப்பா:- உங்க அம்மா கத்தினால் போயிடுவாங்க?...

## மனைவியானவள் கணவனை அழைக்கும் பெயரும் காலமும்....

1910- சுவாமி - 1920 - பிரபு
1930- பிராண நாதா - 1940 - நாதா
1950- மணவாளா - 1960 - மணாளா
1970- அத்தா, அத்தான் - 1980 - மச்சான்
1990- மாமா - 2000 - என்னங்க
2005- ஏனுங்க - 2010 - ஏய்
2015- டேய் - 2020 - மச்சி

## மழைபெய்வதை அவரவர் பார்வையில்...

01- இரும்பு வியாபாரி - கனமாய் பெய்யுது
02- கரும்பு வியாபாரி - சக்கை போடு போடுது
03- பஞ்சு வியாபாரி - லேசாப் பெய்யுது
04- சலவைக்காரன் - வெளுத்து வாங்குது
05- நர்ஸ், தாதி - நோர்மலாகப் பெய்யுது
06- பொலிஸ்காரர் - அடி அடி என்று அடிக்குது
07- வேலைக்காரி - பிசு பிசு என்று பெய்யுது
08- யூஸ் கடைக்காரன் - புழிஞ்சு எடுக்கிறது
09- மதுபானக் கடைக்காரன் - சும்மா கும்முண்ணு பெய்கிறது
10- கோவில் பூசாரி - திவ்வியமா பெய்யுது
11- செருப்புக்கடைக்காரன் - செம்ம அடி அடிக்கிறது
12- இசைவாத்தியக்காரர் - கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது
13- மனைவி - செம அடி அடிக்குது.
14- கணவன் - வாங்கு வாங்கு என்று வாங்குது.

## உலகப்புகழ்பெற்ற சில கண்டுபிடிப்பாளர்கள்..

1- இன்டர்நெட் - (இணையம்) வின்டன் செர்.ஃப் ரூ ராபர்ட்கான் - Vinton Cerf & Robert Kahn ( அமெரிக்கா & ஜேர்மனி) - 1969 ம் ஆண்டு

2- அச்சு இயந்திரம் - ஜோகன்னஸ் கூடென்பெர்க் - Johannes Gutenberg ஜேர்மனி - 1440ம் ஆண்டு.

3- மின்சாரம் - பெஞ்சமின் பிராங்ளின் - Benjamin Franklin - அமெரிக்கா 1752ம் ஆண்டு

4- மொபைல்போன் (கைத்தொலைபேசி) - Martin Cooper - அமெரிக்கா 1973ம் ஆண்டு

## உங்களுக்குத் தெரியுமா?..

- உலகில் மரண தண்டனை இல்லாத நாடு - நியூசிலாந்து
- உலகில் தனக்கெனத் தாய்மொழி இல்லாத நாடு - சுவிட்சர்லாந்து
- உலகில்திரைப்படங்களுக்குத் தணிக்கை இல்லாதநாடு - பிரான்ஸ்
- உலகில் பத்திரிகைகள் வெளிவராத நாடு - திபெத்
- உலகில் பிச்சைக்காரர்கள் இல்லா நாடு - டென்மார்

## WATCH - கைக்கடிகாரம் - பொருள் தெரியுமா?..

நம் கையில் கட்டியிருக்கும் கைக்கடிகாரம் நம்மை ஒவ்வொரு நிமிடமும் நேர்மையாக நடக்கும்படி எச்சரிக்கை செய்கின்றது. அது நம் செயல்களையும் கண்காணிக்கின்றது. அதனால்தான் அதற்கு ஆங்கிலத்தில் WATCH (கண்காணிப்பு) என்று பெயர் வந்தது..

1- Watch your Words - உங்கள் வார்த்தைகளைப் பாருங்கள்.


2- Watch your Actions - உங்கள் செயல்களைப் பாருங்கள்.

3- Watch your Thoughts - உங்கள் எண்ணங்களைப் பாருங்கள்.

4- Watch your Character- உங்கள் குணத்தைப் பாருங்கள்.

5- Watch your Heart - உங்கள் இதயத்தைப் பாருங்கள்.

# குறளும் பொருளும்...



**பழைமை..**

801 - பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

802 - நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்.

803 - பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

804 - விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

805 - பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

806 - எல்லைக்க ணின்றா துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு.

807 - அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

808 - கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின்.

809 - கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு.

810 - விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

# குறளும் பொருளும்...

## பழகியவர் தன்மை...

801- பழைமை எனப்படுவது எது எனில் பழகியவர் உரிமையுடன் செய்வதைச் சிதையாமல் ஏற்கும் நட்பாகும்.

802- நட்பிற்கு உறுப்பாவது நண்பனின் உரிமைச் செயல், அவ்வுரிமைக்கு உடன்படுதல் சான்றோரின் கடமையாகும்.

803- தான் ஒப்புக்கொள்ளாத செயலை நண்பர் உரிமையோடு செய்தபின் உடன்படாவிட்டால் பழகிய நட்பு என்ன பயன் தரும்.

804- நண்பர் கேட்காமலே ஒன்றை உரிமையுடன் செய்தால் அச்செயலை விரும்பி உடன்பட்டிருப்பர் அறிஞர்.

805- நண்பர் வருந்தத்தக்க செயலைச் செய்தால் அறியாமையாலோ, உரிமையாலோ செய்தார் என்று உணரவேண்டும்.

806- நட்பின் வரம்பு கடவாமல் நின்றவர்கள் நண்பரால் கேடு வந்தபோதிலும் நட்பை விடமாட்டார்கள்.

807- அன்பின் வழிவந்த நண்பர்கள் தமக்கு அழிவுண்டாகும்படி நண்பன் துன்பம் செய்தாலும் நட்பிலிருந்து விலகமாட்டார்கள்.

808- நண்பரின் தவறை பிறர் சொன்னாலும் கேட்காத நட்புரிமை உடையவருக்கு அந்நண்பர் தவறு செய்வாரானால் அந்நாள் அவருக்குப் பயனுள்ள நாளாகும்.

809- உரிமை கெடாமல் பழைய தொடர்பை உடையவரது நட்பினை அவர்களின பிழையை நோக்கிக் கைவிடாதவர்களை உலகம் விரும்பும்.

810- பழகிய நண்பர் பிழை செய்தாராயினும் அவரிடம் தமது நட்பில் குறையாது இருப்பவர் பகைவராலும் விரும்பப்படுவர்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## இடம்..

கழுதையும் பட்டாம்பூச்சியும் உலாப்போயின. மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். ”இந்த இடத்தில் நான் இசைக்கச்சேரி வைப்பேன் இங்கே எனக்கு வரவேற்பு இருக்கும்” என்றது கழுதை. அது பாடத் தொடங்கியது. என்ன கொடுமை.. கழுதைக்கச்சேரி கல்வீச்சு கலாட்டா என்று ஆகியது. அடிபட்ட கழுதையும் பட்டாம் பூச்சியும் ஊரின் எல்லையில் சாய்ந்து கிடந்த ஒரு குச்சி வேலியின் அருகில் வந்து சேர்ந்தன. கழுதைக்கு ஒரே கொண்டாட்டம். ஓணான்கள் வரிசையாக அங்கே வேலியில் உட்கார்ந்து தலை ஆட்டிக்கொண்டிருந்தன. கழுதை மகிழ்ச்சியோடு பாடத்தொடங்கியது. என்ன ஆச்சரியம்...தலையை ஆட்டி எல்லோரும் கச்சேரியை ரசித்துக்கொண்டிருந்தார்கள். வியப்போடு அசைவற்றிருந்த பட்டாம்பூச்சியைப் பார்த்து ஒரு வண்டு ”ஒன்றும் வியப்படையாதே இங்கே அப்படித்தான்” என்று கூறியது. சுருக்கமாக அது சொன்னது...

**” ஓணான்களின் ஊரில் கழுதைகளும் வித்துவான்களே”**

## அலைவு..

ஆறு கடலில் ஓடிக்கலப்பதையும் அலை கரையைத்தேடி தழுவுவதையும் அன்றாடம் பார்த்துவந்த வானம்பாடி சிந்தனையில் ஆழ்ந்தது.”உலகம் புரிந்துகொள்ள முடியாத ஒன்றுதான்” என்றது வானம்பாடி. பிறகு அது பாடியது..

**”மண்ணில் இருக்கிற ஆற்றுக்கு மண்ணில் வெறுப்பு**
**கடலில் ஆசை கடலில் இருக்கிற அலைக்கு**
**கடலில் வெறுப்பு மண்ணில் ஆசை”...**

# குறுக்கெழுத்துப்போட்டி - 210
## (பங்குனி - சித்திரை 2026)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-07 வருடத்தில் இவர்களின் ஒரு தினம்
11-14 ஐரோப்பாவில் ஒரு நாடு.

31-32 சிலர் இது எழுதுவதில் வல்லவர்கள்.
37-39 ஆடு, கட்டிவைக்கும் இடம்.
43-47 உலக இயக்கத்துக்கு இதுவும் அத்தியாவசியம்.

வ-இ
11-08 மிகப்பெரும் கொடையாளி எனப் போற்றப்படுபவர்.
21-18 நம்நாட்டில் ஒரு பாவனைப் பொருள்.
25-22 மனிதவாழ்வுக்கு நல்ல போதனைகளைத் தந்தபெருமான்.
28-26 குடும்பத்தில் இவளுக்கு அப்பாமீது கடும் பாசம்.

கீ.மே
31-17 கூரான ஆயுதம் ஆக்கவும் அழிக்கவும் பயன்படும்.
37-16 தமிழரின் பாரம்பரிய நடனங்களில் ஒன்று.
43-22 கவிச்சக்கரவர்த்தி.
49-35 இலங்கையின் பிரதான நகரம்.

மே-கீ
01-22 இலங்கையில் வறண்ட தமிழ்ப் பிரதேசம்
05-26 நாட்களில் ஒன்று.
19-40 திருடன் ஒத்தசொல்
27-48 சிலரிடம் இந்த வளம் நிறைந்திருக்கும்.

## முற்றத்து நிலவு..

முற்றத்து நிலவில் மூதாதையர்
கற்றுத்தந்த அறிவுரைக்கதைகள்
இற்றைவரையும் காதில் கேட்குதே

சுற்றும் விண்வான வளவுக்குள்
பற்றி வரும் வான்மதிக்குள்
பாட்டி ஒருத்தி குந்தி இருந்து
பாக்கு உரலில் இடிப்பதாகச்
சொல்லி வாளித் தண்ணீருக்குள்
கண்ணாடியில் பிடித்த உதயநிலா

பற்றாத உயரத்தில் நின்றது
காட்டிய முற்ற வெளிச்சத்தில்
இடியப்பம் ,சொதி குழைத்து
ஊட்டி வளர்த்த மழலை
பொக்கை வாய் திறந்து
சிரித்து மகிழ்வூட்டுதே

வெற்றுச் சோற்றுப் பானை
சுரண்டிய அடிச்சோற்றில்
மிஞ்சிய சட்டிக் கறி ,மரவள்ளிக்
கிழங்கும் பிசைந்து
இந்தா பிடி
எனத் தந்ததும் இறுதி
உருண்டை
கடைக் குட்டிக்கே
என்று எனக்கே
தந்ததுமே அரைவயிறு நிறைந்தது
முழுதாய் வயிறு முட்டியதே

அம்மாவின் அன்போடும் அத்தனை
உறவுகளோடும் கூட்டாக இருந்து
உண்ட முற்றத்து நிலவு ஞாபகமே

**ராணி சம்பந்தர்**
**யேர்மனி**

## தன்னம்பிக்கை...

விஞ்ஞான விந்தையின் விழைவாலே
விரைவாய் விடியுது இந்த உலகம்
விரிந்தும் பரந்தும் இது கிடக்கையிலே
விரைந்து எதையும் செய்திடலாம்!...

மாறிவரும் உலகினை அறிந்து
மாற்றம் மாண்பாய் பல தேடி
நேர்மைத் திறமாய் வளர்ந்து
கூர்மை மதியாய் உயரலாம்!....

கற்றறிந்ததை கட்டுக் கோப்புடனே
பற்றோடு பங்களிக்கும் பக்குவத்திலே
நனி சேர நற்சாதனை படைத்து
புனித புகழ் புவியினில் பெற்றிடலாம்!...

பன்னூறாய் பகை வந்த போதும்
தன் முனைப்பு தழைத்தோங்கிடவே
எண்ண முனைப்பு எழிலாய் ஈடேறும்
தன்னம்பிக்கைதரமுயரும்உறுதியாய்!...

**இராஜேஸ்வரி சிவராசா**
**யேர்மனி**

## பெண்ணினப் பேறாய்!...

ஞாலம் நிறைந்த நறுமலர் புவியில்
காலம் நகர்வது கணினி யுகமாய்
வாழ்வின் பாகங்கள் தாங்கும் வேகம்
வரலாற்று நகர்வே சுட்டிடும் பாடம்
இயந்திர வாழ்வாய் எண்ணற்ற
துறையாய் காரியம்
ஆற்றிடும் கணினி வியூகமே
பெண்ணின வாழ்வும்
பெருமையின் பேறும்
கண்ணெணத் தகுமே
காரியச் செறிவில்
எண் திசையெங்கும் ஏறுமுகமாய்
எதிலும் தம்திறன் காட்டும் விதமாய்
பம்பரச் சுழற்சியில் பதவிகள் பலவாய்
பட்டங்கள் பெறுவதும்
சட்டங்கள் ஆள்வதும்
சரித்திரம் படைத்திடும்
மகளிர் மகுடமே
சரிநிகர் சமமெனும் சாதனை உலகமே
நிறைமதியாகி நித்திலம் சிறக்க
நிதமும் வாழ்வினை
செதுக்கிடும் செம்மையில்
பெண்ணினப் பேறே
பெருமையின் வாழ்வே
தாய்மைத் தாங்கும்
தைரியம் நிறைக்கும்
சேய்கள் வளர்ப்பில்
செதுக்கியே நிமிர்த்தும்
தகமை நிறைந்த தகுதிகள் பலவாய்
பெருமையில் உயர்த்தும்
பெண்ணின வாழ்வாய்
சுழன்றிடும் சுழற்சியில் சுற்றியே மோதி
நிரந்தர யுகத்தை நிதமாய் மாற்றிடும்
இயந்திர மனிதமே பெண்ணின வாழ்வு
இயக்கிடும் சக்தியே அவளின் பேறு
பாரினில் பலவாய் பயணிக்கும் பயணி
பண்பாட்டு விழுமியம் காத்திடும் நீதி
பாரே உனக்குள் பயணிக்கும் ஞானி!

**வசந்தா ஜெகதீசன்-யேர்மனி**

## பெண்ணே நீ....

பாரதியின் புதுமை பெண்ணல்லவா
நாளாந்தம் வீட்டுக்குள்
நலிந்து கிடக்க
உனக்கு இன்னும் ஆசையா
அடுப்பூதும் பெண்களுக்கு
அரச பணி எதற்காக
அகப்பை பிடிக்கும் பெண்களுக்கு
எழுதுகோல் எதற்காக
படுக்கையறை மங்கையர்க்கு
படிப்பறிவு தேவையா இப்படி பல
கேள்விகள் ஆண்களிடையே
உடல் வலுவில் குறையவில்லை
பெண்ணேதிடமுடனே பல
கலையும் கற்கிறாய்
உலகில் பெண் இல்லை என்றால்
மண்ணுலகில் எவருமில்லையே
தாயாக தாலாட்டி வளர்ப்பவர்
தன்னலம் கருதாது
தாயாகி அமுதூட்டும் பெண்ணே
ஆண் பெண்ணின் அரசனுமில்லை
பெண் ஆணுக்கு அடிமையுமில்லை
இறைவனது படைப்புனிலே
ஏற்றத்தாழ்வு எதுவுமில்லை
பெண்ணே நீ சிறை விடுத்து
வெளியே வாவெளியுலகில்
நீ உலாவ வேண்டும்
உன்னைப் பார்த்து
வெளியே வர பலர் பார்த்து நிற்பரே

**ஜெயா நடேசன் -யேர்மனி**



# ஜனநாயகன் விஜய்!..



இவன் எம்மிடமிருந்து எடுக்கின்ற அவசியம் இருக்காது என்னும்
நோக்கம் மக்களிடை புரிந்து கொள்ளப்பட்டால் - மண்ணின்
விடியலின் விதிக்கு ஆதவனே வந்து பூபாளம் பாடும் புதுமை பிறக்கும்
மின்மினிகளின் மிரட்டல்கள் கண் சிமிட்டக் காணாது கரைந்து போகும்..

மக்களே தெய்வங்கள் என மலரும் உலகம் கண்டவன் நீ விஜேய்
தமிழகத்தில் பாசநேசப் பரிநாமத்தில் சினிமாத் தலைவனின் தனையன்
இளமைகள் தம் இருப்பு எனத்தேடும் காருண்யத்தின் கடைப்புகலிடம்
அருமைகள் ஆராதிக்க உரிமையோடு வந்த உத்தம உடன் பிறப்பு...

ஆண்டுகள் பலவாய் துன்பத்தை மட்டும் கட்டிச் சுமக்கத் தந்தவர்கள்
படிப்புக்குப் பதிலாய் குடியை அரசு எனக் கொண்டாட்டம் கண்டவர்கள்என
சதி தெரியாத சந்ததிகளின் நம்பிக்கையை இலவசங்களால் மூடி
விடிவுக்கு விஞ்ஞானத் திருட்டுக்களால் தேர்தல் விஞ்ஞாபனம் செய்தவர்கள்...

களத்திலே நீ காலடி எடுத்து வைக்கும் போதே ஊழை ஒப்பாரிகள்
எலும்பு தின்னும் எச்சைகளின் வஞ்சக வாலாட்டுகள் - என
நெஞ்சில் உரமில்லாத நேர்மைச் சிதறல்கள் தேங்கி நிக்கிதே - தினம்
நதி போல ஓடவேண்டிய நீ குளம் போல தங்கிய விபரம் என்ன தோழா...

எதிரிமனம் கருகி ஏந்துவான் அவமானக் கருவி தம்பி
உதிரிக்கு அறிவால் விபரி அடங்குவான் தலைகவிழ்ந்து வெட்கி-நீ
சிந்தை விரித்து சிறகடித்து வந்த விந்தைப் புலமைகளின் விருது
கந்தை கட்டுவோரைக் கவனி காலத்தை வென்று காவியமாவாய்...

அரசியல் ஈவு இரக்க மற்ற முரண்பாடுகளின் முற்றுகை
இதைத் தெரியாமலேயே வா வாகைசூட வடிவம் எடுத்தாய்
முன் வைத்த காலைப் பின் வைப்பது என்பது ஆமைக்கே தெரியாது
ஆண்ட தமிழர் நமக்கு அது மீண்ட சொர்க்கம் மாண்ட போதும்..

**தமிழ்த்தென்றல் ப பசுபதிராசா - ஜெர்மனி**

# சர்வதேச மகளிர் தினம்

- இரா சம்பந்தன் -

சமவுரிமை சமத்துவக் கல்வி
ஆண்களுக்கு நிகராகப்
பெண்களும் பெற்றிடவே
உலகப் பரப்பினில்
உதித்தது மகளிர் தினம் !

தாய்மையெனும் தத்துவத்தால்
தரணியிலே தாமுயர்ந்த
பூவையரைப் போற்றிடும் தினமாய்
பொலிவுறுமே மார்ச் 8ஆம் நாள் !

தாயாய் , தாரமாய் , தங்கையாய்
ஆய்தமிழைக் கற்றவராய்
ஆளுமையுள்ள பெண்களாய்
அவனியெங்கும் பவனிவரும்
அரிவையரைப் போற்றிடுவோம் .

அடுப்பூதிய காலமது போகவே
வீட்டை மட்டுமல்ல
நாட்டையும் நலமுறவே
பரிபாலனம் செய்த
நங்கையரை நினைந்திடுவோம் .

கதிரவனின் கிரணங்களினால்
காசினி யொளிர்வதுபோல்
இவர்களின் கைவினையால்
இல்லங்கள் ஒளிர்ந்திடும் . . .

வாழபுலரும் காலையில் புன்னகைப்
பூக்களாய் வலம்வரும்
வஞ்சிய ரில்லாத மண்ணின்
வாழ்வுதான் இனிக்குமா ?

மனைகளை அலங்கரிக்கும்
இந்த மாதரிசி களினால்
குலங்கள் செழிப்புறக்
குவலயம் பயனுறும் .

கட்டிலுக்கு மட்டு மென்றே
கணித்தவர்கள் நாணிடவே
பல்துறையில் சாதனைகள்
படைத்தவராய் நடக்கின்றார் . . .

மண்ணின் விடுதலைக்காய்
மாவீரம் காட்டியவர்
மண்ணில் மட்டுமல்ல
விண்ணிலும் வியத்தகு சாதனைகள் !

பெண்ணியம் காத்துப்
பெருமையடைவோர் மத்தியிலே
கண்ணியமிலாச் செயல்களைக்
காலமெல்லாம் செய்பவர்களால்
பெண்களின் விழிகளில்
கண்ணீரின் திவலைகள் . . .

நூலிடை வருந்திடப்
பாலியல் வன்முறை
கூரிய நகங்கலால்
குதறிடும் ஓநாய்கள் !

இந்த மகளிர் தினத்தோடு
கண்ணுக்குத் தெரியாதக்
கயமைத் தனங்கள்
மண்ணுக்குள் மறைந்து செல்ல ,
மங்கையர் மகிழ்வுற வாழ்த்துவோம்!...

# முகவரியின் முதல்வரி...

படிக்கையிலே பலமொழிகளைப் பயில்வதில் தவறில்லை
பாரெங்கிலும் பறந்தாலும் பணிசெய்வதில் பிழையில்லை
துடிப்போடு இளமையிலே துள்ளித் திரிந்து கற்றதமிழே
தூரதேசம் சென்றாலும் தூக்கி நிறுத்தும் பொய்யில்லை
பிடிப்போடு கடல் தாண்டிப் பேராற்றலைத் தந்தமிழினைப்
பின்னாளில் மறந்தவுனது பேச்சினிலே அறமு மில்லை

கொடிமலராய்த் தேசமெல்லாம் குலுங்கும் தமிழைப்பாரயோ
கொஞ்சுகின்ற தென்றலோடு கூடிமகிழ்வதை காணாயோ
படிப்படியாகவே பல்லினத்தார் பேசுவதைக் கேட்கலையோ
பயின்றதனால் பைந்தமிழிழை பகிர்வதபைக் பார்க்லையோ
நடிப்பதைப்போல் நீயுமின்று நற்றமிழை மறைத்து நசிப்பது
நம்தாய்க்குச் செய்கின்ற நாசச்செயலென உணரலையோ

தாடிமீசை முண்டாசென தாத்தன்பாட்டன் தந்தமொழியிது
தரணியிலே கலாச்சாரம் பண்பாட்டில் வென்ற மொழியிது
நாடிவந்த அனைவருக்கும் நல்லறம் சொன்னமொழியிது
நலமாக மண்ணில்வாழ நலம்பயக்கும் கன்னல்மொழியிது
கூடிவரும் ஒழுக்கநெறியை குவலயத்தில் நட்டமொழியிது
குதூகலமும் அன்பும்நட்பும் குறையாது கொட்டும்மொழியிது

வாடிடாதசெம் மலர்போல் வண்ணத் தமிழிங்கு வாழுமடா
வரைகளாக நிமிர்ந்து நின்று வருமுலகினையு மாளுமடா
தேடிவருகின்ற உறவுகளுக்குத் தேனும்பாலும் ஊட்டுமடா
தென்பொதிகை தென்றல்வந்து தித்திப்பினை கூட்டுமடா
சூடிமகிழும் பொன்மகுடத்தில் சுடரொளியினைச் சூட்டுமடா
சுதந்திரமாய்ச் சுற்றுமுலகினில் சுற்றங்களைக் காட்டுமடா.!

**அம்பலவன்புவநேந்திரன்**




## மண் சஞ்சிகை இல235 இதழுக்கான அட்டைப்படக்கவிதை

பொழிந்திட்ட மேகத்தின் கரங்களந்தப்
பேரழிவை மண்ணில் இறக்கியதோ..
வழிந்திட்ட அணைகளின் பெருக்காலே
வாழ்விடமும் முற்றாய் மறைந்ததுவோ..
தெளிந்திடாத வானத்தின் தாளமுக்கம்
திக்கெட்டும் சிதறிடவே வெடித்ததுவோ..
அழிந்திட்ட தாயகமும் எழுகையிலே
ஆழமாய்த் ”திக்வா”வும் சிதைப்பதுவோ.?

களிப்பாய்ப் புத்தாண்டினை வரவேற்கும்
கனவுகள் கண்ணீரில் கரைந்ததுவோ..
பழிபாவங்கள் அறிந்திடாத பாலகரும்
பட்டினியால் உழன்றிங்கு மடிவதுவோ..
வெளிநாட்டு உறவுகளின் கரங்களுமே
வீதிகளைத் தூர்வெடுத்து உதவியதோ..
வழியற்ற வாழ்வினையும் மண்மூடியே
வாய்க்கரிசி இடுதல் வரமாயானதோ..?

எழிலாய் நிமிர்ந்திருந்த மலையகமும்
இடுகாடாய் நொடியினில் மாறியதோ..
குளிரினால் வாடிடும் கொடுமையோடு
குற்றுயிராய் பசிப்பிணியில் உழலுவதோ..
துளிதுளியாய் சேர்த்திட்ட”மண்”மகளால்
துயர்துடைக்கக் கைநீண்டு உதவியதோ..
ஒளியாகவே உதித்துவந்த தைமகளும்
உலகினில் உதிரிகளைக் காப்பாளோ..?

**-அம்பலவன்புவனேந்திரன்..**

# விதியினை மாற்று...

- கீத்தா பரமானந்தன் –யேர்மனி

விதியென எண்ணி முடங்கிட லாமோ
விரைந்துமே எழுந்து முன்னேறு!
மதியினைத் தீட்டி மாற்றத்தைக் காண
மனங்கொண்ட பாதையைத் தேடு!
சதிவலை அழித்துச் சாதனை ஆக்கச்
சடுதியாய் உழைப்பினைக் கூட்டு!
புதிரெனும் பாதையைப் புடமிட்டு நின்றே
புதுமையாம் உலகினை வெல்லு!




கடந்தவை யாவும் கடந்தவை யாக்கக்
கலைந்திடும் முகிலெனத் துயர்கள்!
திடமுடை நெஞ்சே திசைகளை வென்று
தீங்களின் ஒளியெனத் துலங்கும்!
விடமென அகற்று வீணர்கள் பேச்சை
விரிந்திடும் வானென உலகம்!
திடமுடை பெண்ணையாத் தினமெலாம் நிறுவி
திலகமாய் மின்னிடும் நீயும்!




தண்ணொளிச் சுடராய்த் தரணியைக் காக்கும்
தளர்விலாப் பிறவியாய்ப் பெண்ணுக்கு!
மண்ணினில் மகளிர் மகிமைகள் துலக்கி
மலர்வுறச் செய்திடல் கடமை!
எண்ணிய முடித்தே ஏந்திழை அவளும்
இலக்கினை எட்டிட வேண்டும்!
வண்ணங்கள் கொண்ட வானவில் ஆக
வாழ்வதும் தொடட்டும் இன்பம்!

.........................................................................................................................

# அவளுக்கென்றோர் மனம்!.... (சிறுகதை)

பறவைகளின் ஒலி பூட்டிய யன்னற் கம்பிகளைத் தாண்டி ஒலித்தது, இளவேனில் வருகையின் ஆரவாரம் ஆரம்பித்துவிட்டது. மனிதர்களைப்போலவே குளிருக்குள் முடங்கிக் கிடந்த பறவைகள் பாடத்தொடங்கிவிட்டன. அவைகளின் கீச்சுக்குரலை உற்றுக்கேட்கும்போது அவை ஏதோ ஒன்றை உருப்போடுவது போலவும் பேசுவது போலவும் இருக்கும். இதை நான் எப்போதுமே இரசிப்பேன். இன்றும் அவற்றின் ஆரவாரக்கொண்டாட்டத்தில் தூக்கம் கலைந்து விட்டது. இனிப்படுத்திருக்க ஏலாது.கையை நீட்டி கைத்தொலைபேசியை எடுத்து நேரம் பார்த்தேன் ,

நேரம் காலை ஐந்தரை மணி. கட்டிலை விட்டெழுந்து ,பூனைபோல் அடிமேல் அடிவைத்து அறையைவிட்டு வெளியேவந்து காலைக் கடமைகளை சத்தமின்றி முடித்துக் கீழே வந்தேன். எப்படியும் இன்றைக்கு போட்டிக்கான சிறுகதையை எழுதி முடித்துவிடவேண்டும். சித்திரைப் புத்தாண்டிற்காக ஒரு

நடத்தும் போட்டியிது. முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப் பணப் பரிசு என்றும் அறிவித்திருந்தார்கள்.

இந்த வாரமே அதற்கான இறுதித்திகதி என்பதால் இன்று எழுதி புடித்திவிடவேண்டும்.என் மனத்தில் இப்பரிசு கிடைத்தால் தாயகத்தில் ஆதர்வற்ற குழந்தைகள் , முதியோர்பராமரிப்பு நிலையங்களுக்கு உதவ வேண்டும் என்பது என் ஆசை. வீட்டில் இருந்து அவ்வப்போது இவர்களுக்கு உதவி செய்தாலும். இப்படி ஒருவழி மூலம் பணம் கிடைத்தால் இதை அவர்களுக்காய் அனுப்பவேண்டும் என என்மனத்தில் திட்டமிட்டிருந்தேன்.

எல்லோரும் தூங்கும் நேரத்திலே நான் எழுந்தால்தான் அமைதியா இந்த வேலையை முடிக்கலாம். இதை முடித்துவிட்டுப் பாட-சாலை போ கும் பிள்ளைகளினதும், வேலைக்குச்செல்லும் கணவன-தும் சாப்பட்டு வேலை களையும் முடித்துவிடலாம். அவர்கள் போனபின் மத்தியானச் சமையலும் விரைந்து முடித்தால் தான் நான் வேலைக்குச் சரியான நேரத்துக்குப் போகமுடியும். அதற்காக எப்போதும் இப்படி அதிகாலையில் எழுந்தாலே எனக்கான நேரத்தை ஒதுக்கமுடியும்.

மனதுள் கதைக்கான அத்திவாரத்தை கடந்தவாரமே உருப்போட்டு வைத்திருந்தாலும் , எல்லோரும் ஈஸ்ரர் விடுமுறையில் வீட்டில் நிற்பதால் , சிற்றுண்டிகள் செய்தல், விசேடசாப்பாடு, பின் அவர்களுடன் சேர்ந்து வெளி-யே போய்வருதல் என இருந்ததால் எழுதமுடியாமல் இருந்தது. இன்றைக்கு என் எண்ணத்தை நிறைவேற்றக் கணினியைத் திறந்து ஆரம்பிக்கையில், இருக்கையின் பின்னாலிருந்து சட்டையைப்பிடித்து இழுத்தது எங்கள் செல்லப் பூனைகுட்டி மணி, இனி இவர் விடமாட்டார் , அவருக்கான சாப்பாடு கொடுத்துவிட்டுத்தான் நான் இருக்க முடியும். எழுந்து மணியின் சாப்பட்டைப் போட்டுவிட்டு வந்து அமர்ந்து எழுதத் தொடங்கினேன்.

கதை ஆரம்பித்து இருபந்தி முடிக்கவில்லை , பக்கத்துக் கதிரையில் மகன் வந்தமர்ந்தான் . அம்மா எனக்குத்தூக்கம் போய்விட்டது , கனவு வந்து விழித்து விட்டேன். கனவைக் கேட்டால் சிரிப்பீங்கள் , என்றவாறு ஆரம்பித்தான். எழுதுவதை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்து அவன் கூறுவதைக் கவனித்தேன். இல்லாவிட்டால், அவனுக்கு முகம் சுருங்கிவிடும். பிள்ளைகள் இப்ப பெற்றோரோட பேசுவதில்லை என்பீர்கள் , ஆனா நாங்கள் பேசும் போது நீங்கள் உங்கடை வேலை பாப்பீங்கள் என்பான். தம்பி நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறன் எண்றாலும் முகத்தைப் பார்த்துக் கேட்காட்டி நான் ஏன் பேசவேண்டும் என்பான் . அதனால் அவனைப் பார்த்து அவனின் கதையைக் கேட்டு அவனோடு பேசிவிட்டு , அவனுக்குத் தே-நீர் போட்டுக் கொடுத்துவிட்டுப் , போ! போய்ப் பாடசாலை அலுவலைப் பார் , கொஞ்சநேரம் புத்தகத்தை எடுத்துப் படியென அவனை அனுபிவிட்டு , விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்தேன் .

கீழே பேச்சுக்குரல் கேட்டதென கணவனும் வந்தார். சரி இனிவைத்து விட்டு வேலையைப் பார்ப்பம். இவர்களை அனுப்பிவிட்டு , நான் வேலைக்கு வெளிக்கிடமுன் மிகுதியை எப்படியும் முடித்துவிட வேண்டுமென கணின-ியை மூடிவிட்டு, கணவனுக்குக் கோப்பிபோட்டுக்கொடுத்துவிட்டுக்,காலைச் சப்பாட்டுக்காக பாணும் , கோண்பிலேக்ஸும் எடுத்து, வத்துவிட்டு , எல்லோர் சாப்பாட்டுப் பெட்டிகளிலும் மதிய உணவையும் எடுத்து வைத்துவிட்டேன்.

அவர்கள் எல்லோரும் ஏழரைக்கு வெளியேறிய பின் மீண்டும் மதிய உணவுச் சமையல் . தொலைபேசி அழைப்பு, நேரம் ஓடியதே தெரியவில்லை. இனி நான்வேலைக்கு வெளிக்கிடத்தான் நேரம் சரியா இருக்கும். மாலை வந்து பார்ப்போம். வீட்டை பூட்டிவிட்டு கிளம்பினேன். வேலைத்தலத்தில் மற்றவர்கள் பேசியது எதுவும் மனதில் பதியாமல் கதையின் கருவே சுற்றிச் சுற்றிவந்தது.

பாடசாலைக் காலத்தில் இருந்தே மனதின் ஆசை ,கதை கவி தை, கட்டுரைகள் எழுதிப் பரிசு வாங்கவேண்டுமென்பது பெரும் அவா. அவன்! திருமணத்திற்கு முன் ஓரிரண்டு பரிசுகளையும் பெற்றிருக்கிறான். திருமண-மாகிப் புலப்பெயர்வு வாழ்கை ,குழந்தைகள், வேலை எனக்காலம் ஓடியது. இப்போது முகநூலின் வருகையால் எல்லாவற்றையும் அறியக்கூடியதாய் இருப்பதும் , பிள்ளைகள் வளர்ந்து தங்கள் காரியங்களைத் தாங்களே பார்ப்பதும் மீண்டும் தடைப்பட்டிருந்த ஆசை துளிவிட்டது, நேரமின்னை தான் விரட்டுகிறது. வேலை முடிந்து வீடு வந்து மீண்டும் இரவு உணவு உண்டபின் எல்லாவற்றையும் முடித்துக் கணினி முன் இருக்கையில் நேரம் ஒன்பது மணியைக் காட்டியது. சரி எப்படியும் பத்திற்குள் முடித்துவிடுவோம் என நினைத்தபடி விட்ட இடத்தில் இருந்து எழுத ஆரம்பிக்கிறேன்.

கணவர் சீமானின் அதிரடிப் பேச்சை கைத்தொலைபேசியில் சத்தமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். ”கொஞ்சம் சத்தத்தைக் குறைச்சுக் கேளுங்கோவன் என்றேன்” கணவர் பாலன் ஆரம்பிக்கிறார். ”ஏனப்பா இதுகளை பகலில செய்து முடிக்கக் கூடாதோ? இப்பிடி இரவில கண்ணைக் கூர்ந்து , கூர்ந்து கணினியில இருந்திட்டு, தலையிடிக்குது ,கண் குத்துது எண்டு சொல்லாம மூடிப்போட்டு பகலில பாரும்” என்றார் கரிசனையாய். பகலில் எங்கே அமைதியாக நேரம் கிடைக்குது, மனதில் சொல்லியபடி, கதையை வளர்க்காமல் இருந்தேன். இனித் தொடர்ந்து ஒருமணித்தியாலம் இதில இருக்க தொடர்ந்து சொல்லுவார் . அவருக்கு என் கண்ணும் ,தலையிடி மட்டுமே கவனத்தில். நான் நோய் எனக் கூறினால் , வீட்டில் நிம்மதி போகும் , அதனால் நான் நேரத்துக்கு உண்டு , உறங்கி ஆரோக்கியமாய் இருந்தால் போதும் என்பதே அவர் மனக் கணக்கு. எனக்கும் ஒரு மனம் அதிலும் ஆசைகள் அவை புரியப்படாத தேவையில்லாத, பக்கமாகவே அவர் மட்டில்.

சாப்பாடு , வேலை , நல்ல குடும்பம். ஓரளவு வசதியுடன் நிறைவாய்த் தொடரும்போது உமக்கென்ன பிரச்சனை? குறைஎன்பார்?எப்போது பெண்ணாப் பிறப்பெடுத்தேனோ அன்றே என் உணர்வுளும் அறியப்படாமலே புதைபட்டுவிட்டது. நான் அறியாப் பருவத்திலேயே என் அம்மாவின் அண்ணாவின் மகன் சுரேந்தர் தான் எனக்கு மாப்பிள்ளையென ,சொந்தம் விட்டுப் போகக்கூடாதென அம்மாவும் மாமாவும் உறுதியெடுத்திருந்தார்களாம். நான் வளர்ந்தபின் அறிந்துகொண்டேன் .மாமியும் அதைச் சொல்லிச் சொல்லி யெ கட்டுப்பாடுகளை அடுக்குவா. எனக்கு ஆத்திரமா வரும். அம்மா அப்பா போடாத கட்டுப்பாடு இவ போடுறா என்று. அப்பிடியே பேசிப்பேசி சுரேந்தரே வாழ்க்கைத் துணையென நம்பிக் கற்பனைகளை வளர்த்தேன்.

அதன்பின் மாமாவுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் சொத்துப்பங்கீட்டுப் பிரச்சனைக்களால் பேச்சுவார்த்தை இல்லாமல் போய்விட்டது .ஆனாலும் அம்மா அப்பா எனக்குத் திருமண வயது வந்ததும்.. **பக்கம் 49**

# மனதுக்கு இன்பம் தருவது சுற்றுலா!...

**பயணக்கட்டுரை தொடர்ச்சி திருமதி கலைவாணி ஏகானந்தராசா**

**- யேர்மனி -**






அவுஸ்திரேலியா-சிட்னியிலிருந்து நியூசிலாந்துக்கு மூன்று மணிநேரம் பயணித்து ஓக்லாண்ட் விமான நிலையம் சென்றடைந்தோம். விமான நிலையத்தில் மற்றைய நாடுகளை விட மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்படும். நீர் உணவு தாவரங்கள் விதைகள் பூக்கள் இறைச்சி மீன் வகைகள் மற்றும் துப்பாக்கிகள் இயந்திரங்கள் என்று பல தடைசெய்யப்பட்டவை. நாம் எடுத்துச்செல்லும் பொருட்களை நிரப்பிக்கொடுக்கும் படிவத்தில் (Declare ) பதியாமல் எடுத்துச்சென்றால் 10.000 டாலர்வரை தண்டனை செலுத்தும் வாய்ப்பு உண்டு. நாம் சாக்லேட்களும் உடைகளும் மட்டுமே எடுத்துச் சென்றமையால் மிக சுலபமாக விமான நிலையத்தைவிட்டு வெளியேறினோம்.

விமான நிலையத்தின் அழகை இங்கு குறிப்பிடவேண்டும். வாசல் நிலைகளும் தூன்களும் மிக அழகாக மரத்தினால் சிற்ப வேலைகளுடன் காட்சியளித்தன. நாட்டின் கலைவடிவமாக விளங்கும் சிங்கமுகங்கள் அழகான வடிவங்களில் நிறமூட்டப்பட்டு மனதை கவர்ந்தன. நியூசிலாந்தில் ஆங்கிலம்(English) மாவோரி(te reo Maori) மற்றும் சைகை மொழி(NZSL) ஆகிய மூன்றும் அரச மொழியாக இருப்பதனால் ஆங்கிலத்திலும் மவுரி(Maori) மொழியில் பேசும் அலுவலர்களை காணக்கூடியதாக இருந்தது.

கி பி 1250 -1300 களில் பொலினீசியர்கள் நியூசிலாந்தில் குடியேறி மவுரி கலாச்சாரத்தை பேணி வந்தனர். 1890 ல் பிரித்தானிய அரசும் மவுரியரும் வைத்த உடன்பாட்டில் நியூசிலாந்தை பிரித்தானிய குடியேற்ற நாடாக்கினர். நியூசிலாந்தின் தலைநகரம் வெலிங்ரன் ஆகும். ஆயினும் மக்கள் அதிகமாக வாழும் நகரம் ஆக்லாந்து ஆகும். ஆக்லாந்து பச்சை பசேலென்று காட்சியளித்தது. ஆக்லாந்தில் பொதுமக்களுக்கான போக்குவரத்து மிக சுலபமானதாகும். போக்குவரத்து நெரிசல் இல்லை. மார்கழி தை மாதங்கள் வெப்பமான சுகமான காலநிலையாக இருந்தது.





புகையிரத சேவை பஸ் சேவை கடல்வழி பயணம் மூன்றும் இணைவாகவே செயல்படுகின்றன. எந்தவழிப் பயணமானாலும் பணம் செலுத்திய அட்டையை பாவிக்கமுடியும். ஆக்லாந்துக்குள் ஒரே ஒரு பாதையில் மட்ரோ (Metro) ஓடிக்கொண்டிருப்பதால் மிகசுலபமாக பயணம் செய்ய முடிந்தது. (Downtown) நகரத்தின் நடுவே உள்ள பெரிய துறைமுகம் மிக அழகான கடலாக காட்சியளித்துக்கொண்டிருந்தது.

பிரமாண்டமான உல்லாசப்பயணிகள் கப்பல்கள் (Cruise) வந்து ஒரு சில நாட்கள் தங்கிப் போவதை காணக்கூடியதாக இருந்தது. அந்த துறைமுகத்திலிருந்து சிறிய பல தீவுகளுக்கு கப்பலில் சென்று திரும்பலாம். நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தீவுக்கு சென்றுவந்தோம். எல்லாத் தீவுகளும் கடற்கரையில் இருப்பதனால் நீச்சலடித்தோம் சிறிய காட்டுப்பகுதிக்குள் நடந்தோம்.

நியூசிலாந்து நாட்டில் ஒரு அதிசயம் என்னவெனில் அங்கு பாம்பு பூச்சிகள் விஷ ஜந்துக்களை காணவே முடியாது. திமிங்கிலம், டால்பின் மீன் இனங்களும் பறக்கமுடியாக பறவைகளான பென்குயின், கிவி நியூசிலாந்தில் மட்டுமே காணப்படும் பழமையான ஊர்வன இனமான ஓணான் வகையை சேர்ந்த பிடரிக்கோடன் (Tuatara) என்பன மட்டுமே நியூசிலாந்தின் முக்கிய உயிரினங்களாகும்.(Kiwi) கிவி பறவை வெட்கம் கொண்ட (Nocturnal) பிராணியாகும். இவற்றை தற்போது வெளியே எங்கும் காணமுடியாது.இந்த இனம் அழிந்து கொண்டு போவதால் கிவி பறவைகளை கண்ணாடி அறைகளில் செயற்கை காடுகளை உருவாக்கி (Kiwiconservation Centre) மக்கள் பார்வைக்காக வைத்திருக்கிறார்கள்.

நாம் அங்கே தான் கிவி பறவையை பார்த்தோம்.அடுத்து Rotorua என்னும் ஒரு வினோதமான இடத்துக்கு சென்றோம். Whakarewarewa Geothermal Valley tfh NuthNuth வெப்ப நீர் நிலப்பகுதி. மவுரி இனத்தவரின் கிராமம். வெப்பச் செயல்பாடுகள் கலாச்சாரம் நிறைந்த ஒருசுற்றுலாத் தலமாகும். புவி வெப்ப நீர் ஊற்றுகள் காணப்படும் பள்ளத்தாக்கு. 300 ஆண்டுகளாக இந்த நீர் கொதித்து எழும் காட்சியை காண்கிறார்கள்:7ல் இருந்து 30 மீற்றர் உயரம்வரை உயர்வதைகாணலாம். 1.5 கிலோ மீற்றர் தூரம்வரை நீர் கொதித்து கொப்பளித்து துள்ளுவதையும் ஆவி மேலெழும் காட்சியையும் கண்டு அதிசயித்தோம். புவி நீர் வெப்பநிலை 100 பாகை என அறிவிப்பு பலகையில் எழுதப்பட்டிருந்தது. இது போல சில கிலோ மீற்றர் தூரம் போனபோது அதிசயத்திலும் அதிசயமாக இருந்தது.

பாறைகளுக்குள் இருந்து (MudPool) கழிம்பு கொதித்தெழுவதையும் கெந்தக வாயு ( மஞ்சல்நிறத்தில்) வெளியேறுவதையும் காணமுடிந்தது. கொதித்தெழும் கழிம்பு குமிழ்களை பார்க்க ஆனந்தமாக இருந்தது. அங்கிருந்து சில கிலோ மீற்றர் தூரம் போனபோது பாறைகளிலிருந்து அருவியாக (Huka Falls) நீர்பாய்ந்து ஓடும் அழகை ரசித்தோம். இயற்க்கையின் அதிசயத்தை எப்படி சொல்வது?அடுத்து நாம் மவுரி இனத்தவரின் கிராம கலாச்சார கூடமான புவா (puia ) உள்ளே சென்றோம்.அவர்கள் சென்று தமது கலாச்சார நிகழ்வுகளை நடித்தும் ஆடியும் காட்டினார்கள்.





அத்துடன் அவர்களால் செய்யப்பட்ட கைவேலைப்பொருட்கள் நியூசிலாந்து தேசத்தின் சின்னமான வெள்ளி பேர்ன் ( Silver Fern) இலைக்கு ஒரு சரித்திரம் இருக்கிறது. அதாவதுமவுரிஇனத்தவர் காட்டுக்கு வேட்டையாடச் செல்லும்போதோ சண்டைக்குச் செல்லும்போதோ இந்த வகை இலைகளை கீழ்மேலாக பிரட்டிப் போட்டுக்கொண்டே செல்வார்களாம். இந்த இலைகளின் கீழ்ப்புறம் வெள்ளியாக இருப்பதால் இரவில் இவை நிலவு வெளிச்சத்தில் மினுமினுப்பாக மிளிரும். திரும்பி வருவதற்க்கு இவையே வழிகாட்டியாகும். புதிய வாழ்க்கைக்கு வழிகாட்டி என்பது இதன் அர்த்தமாக செல்லப்படுகிறது.

இறுதியாக ஓர் அழகான அதிசய முறிவாய் (ஆரசளையனை) கடற்கரைக்கு சென்றோம். மலைகளுக்கிடையே சுத்தமான நீலநிறகடற்கரை பாறைகளில் கூட்டம் கூட்டமாக பறவைகள் வந்தமரந்தன. அவை வெள்ளை நிறமாக தலையில் தங்கமுடி வைத்ததுபோல மஞ்சலாகவும்காணப்பட்டன. இவை் கானட் (புயடெநெவ) என்று அழைக்கப்படும் அவுஸ்திரேலிய பறவையாகும்.இவை இனப்பெருக்கம் செய்வதற்காகவே ஆவணி மாதத்திலிருந்து புரட்டாசி வரையில் (2000 கிலோ மீற்றர் தூரம்)கூட்டமாக பறந்து வருகின்றன. பாறைகளுக்கிடையே முட்டையிட்டு மார்கழி தை மாதத்தில் குஞ்சுகள் பொரித்து பங்குனியில்மீண்டும் அவுஸ்திரேலியாவுக்கு திரும்புகின்றன.

இவை கிட்டத்தட்ட 2000 சோடிகளுக்கு மேலாக வரு-வதை கணக்கிட்டுள்ளனர். நியூசிலாந்து நாட்டின் அழகை வர்ணிக்க ஒரு கட்டுரை போதாது. அத்தனை அழகான நாட்டில் எமது இலங்கை நாட்டவர் வெறும் 10.000 வரையில் வாழ்கிறார்கள். இந்து கோவில் கலாச்சாரம் என்பன பேணப்படுவது காண மகிழ்வாக இருந்தது. பெட்டிகள் பாவை-கள் உடைகள் மாலை காப்பு அணிகலன்கள்வீட்டுப்பாவனைப்பொருட்கள என அணைத்தையும் காண்பித்தனர் . மவுரி இனத்து பெண்கள் அளவான அழகான பெண்களாகவும்ஆன்கள் அதிக எடையுள்ள உயரமான பரந்த தேகத்துடனும் காணப்பட்டனர். அன்று மிக மகிழ்வான நாளாக அமைந்தது.

# சித்திரா....

## சர்வேஸ்வரி கதிர்த்தம்பி

**(சிறுகதை)**

**- யேர்மனி -**

தோல்வியினால் துவண்டவர் வாழ்வினையே அகில த்தில் மாற்றிடாத பதிவாக்கி வாழ்த்தி மகிழ்கின்றோம் அத்த கைய வாழ்வினில் மாய்ந்த வர்களை மீள்வாழ்விற்குள் கொண்டுவர எடுத்தாளும் முயற்சிக்கு உறுதுணையாக இருந்தவர்,வாழ்ந்தவர்....காலத்தால் அழிந்திடாத போற்றுதலுக்கு உரியவர்கள்...தோல்வியினால் பெற்ற அனுபவங்கள் கற்ற றிந்திட வைத்திடும் செயலூக்க நிமிடங்கள் என்றும் வைரப் படிக-ளாகவே மிளிரும். தனது மனதி-னில் உறுதியாக பதிந்துகொண்ட சித்திராதனக்குள்ளே பேசும்கதை யாக்கி சுமந்து கடந்து வந்துள்ள விடியல்களை தன்னை முன்னோக்கி நகர வைத்திடும் ஒரு உந்துசக்தியான கருவியா-கவே பயன்பட வைத் ததில் இன்றுதனக்கான அந்தஸ்தினை தானே அணைத்து மகிழ்ந்திருந்ததில் பெருமை கொண்டு வாழ்கிறாள்,

சிறுவயதினில்.தன் பெற்றோர், பேரன் பேத்தியாரோடு வாழ்ந்திருந்தபோது தாய்மொழி சமய கலாசார பண்புகளை எந்த விதத்தில் கண்ணுற்று மன-தில் பதியவைத்து காப்பாற்றி கடைப்பிடித்த விதமாகவே... இன்றுமாக எந்தவித மாற்றமும் இல்லாது வைராக்கியமாக வாழ்ந்து கொள்கிறாள். எதிர்காலத்திலும் சித்திரா இப்படித்தான் என்பதை எல்லோருமே அறிந்திட முடிந்தது.

வற்புறுத்தல்கள் குடும்பத்தவர்கள், உறவினர்கள், வெளிநாடு வந்தபின்பு பழகிய நட்பு உறவுகள் எவராலுமே மாற்ற முடியாத வைராக்கியம் தனது சுயவிருப்பாக்கியதில் எந்தவித சலனமற்ற வாழ்க்கையே சித்திராவுக்காக இறைவன் அமைத்தது என்பதிலே ஐயமே இல்லை.

மலேசியாவில் வேலை பார்த்துவிட்டு யாழ்வந்து கிரா-மசபையில் எழுதுவினையராக பணிமேற்கொண்டாலும் வீடு வந்ததும் தனது காணிகளில் கிடைக்கும் தென்னோலைகளை தலையில் சுமந்து வந்து கிணற்றடியில் நீரூற்றி ஊறவைத்து கிழித்து பாதியாக்கி கிடுகாக்கி வெய்யிலில் காயவைத்து பட்டடையில் அடுக்கியும்,வளவுகளின் வேலிகளின் தேவைக்கும், அன்றாட பால் தேவைக்காக பசுக்களை வளர்த்து, அவைகளுக்குத் தேவை-வயான பனையோலை கிழிப்பது, உளவாரம் பிடித்து புல்லுச் செருக்கும் அழகு பார்க்கும் அப்பாவின்(பேரன் பிரயாசை என்றுமே நினைவலைக-ளில் மோதி எழும்போது சித்திராவின் மனதிலும் வலிமை ஏற்றம் காணும்.

கொழும்பினில் அமெரிக்கன் கொம்பனியில் தந்தை வேலை செய்ததால் சிறுவயதில் பெற்றோருடன் கொழும்பில் வாழ்ந்திருந்தாலும்.கலை கலாசார பண்பாட்டினையும் சமய சம்பிரதாயங்களையும் பெற்றோரின் வழிகாட்டலினை கடைப் பிடித்திட மிக்க ஆர்வமாக பின்பற்றியதன் பேருவகை இன்றும் வலிமையோடுநகர்துவதில் ஆனந்தம் காணும்.

மோதி எழும்போது சித்திராவின் மனதிலும் வலிமை ஏற்றம் காணும். அமெரிக்கன் கொம்பனி ஒன்றினில் தந்தை கணக்காய்வாளராக பணியாற்றியதில் சிறுவயதில் பெற்றோருடன் கொழும்பில வாழ்ந்திருந்தபோதும், படிப்பின் நகர்வு கருதி யாழ்நகர் சென்று அப்பா பெத்தாச்சியுடன் வாழ்ந்ததில் பெரும் பாக்கியமாக சொல்லி மகிழ்வதால்... இவர்களுடன் வாழ்ந்த காலம் பொற்க்காலம்.

பேரப்பெற்றோர்களுடன் வாழ்ந்திருக்காதவர்கள் மனதில் கவலையும் வேதனையையும் உண்டாக்கிய நாட்களும் இருந்தன. இலக்கு, கொள்கை, முயற்சி, நேர்மை இதுவாகவே வாழ்ந்தால் என்றும் எவருக்கும் அஞ்சிடாது வாழ்ந்திருக்கலாம். தோல்வியும் வெற்றியும் என்றோ ஒருநாள் மனிதநேயத்துடன் வாழ்பவர்களும் அனுபவிப்பது வாழ்வியல் தீர்ப்பு.

சுந்தரம் என்ற அழகான பெயரோடு வாழ்ந்தாலும் "கிளாக்கர் அண்ணை","கிளாக்கர் அப்பா" என்ற பணியின் பண்புப் பெயராலேயே அன்பாக அழைக்கப்படும் போதெல்லாம் அப்பாவின்தூய வெள்ளை வேட்டியும் சால்வையும் அவ்வப்போது அணியும்மேலங்கி நசனலும் இன்றும் மனக்கண் நீங்கா தோற்றம்.நிகழ்காலத்தில் நிலைகொண்ட செயல் திறங்கள்தான். எதிர்காலத்தினை நிர்ணயிக்கும் என்பதினை அப்பாவிடம் கற்றுக்கொண்டதில்.... சித்திராவின் மனத்திடம் என்றும் சாய்ந்ததில்லை...

## கிராமத்து வாழ்க்கை ஏன் சிறந்தது?

கிராமத்து வாழ்க்கை என்பது ஆரோக்கியம் + அமைதி + தன்னிறைவு..

- தூய காற்று, சுத்தமான நீர் - நல்ல உடல்நலம்
- இயற்கை உணவு, வீட்டுத்தோட்டம் - நோய்கள் குறைவு
- மனஅழுத்தம் குறைவு, - மனநிம்மதி அதிகம்
- சமூக உறவு வலிமை - ஒருவருக்கொருவர் உதவி
- செலவு குறைவு, - வாழ்க்கை எளிமை
- பாரம்பரியம், பண்பாடு, - மதிப்புகள் பாதுகாப்பு
- குழந்தைகளுக்கு நல்ல வளர்ப்பு சூழல்
- நகரம் வசதி தரலாம்,
- கிராமம் வாழ்க்கை தருகிறது.



பசுமைப்புரட்சி = கிராமத்திலிருந்து தொடங்கும் எதிர்காலம்

# நாகரீகம் என்ற போர்வையில்?...

தன் தந்தையை பார்ப்பதற்கு வீட்டிற்கு சென்றபோது, மகளின் ஆடை சிறிது கவர்ச்சியாக இருந்துள்ளது. அதற்காக தன் மகளுக்கு எப்படி அறி-வுரை கூறியுள்ளார் என்பதை அவரின் மகள் வெளியிட்டுள்ளார்.

நானும், எனது தங்கை லைலாவும் தந்தையின் அறைக்குச் சென்றோம். வழக்கம்போல், தந்தை கதவிற்குப் பின்னால் ஒளிந்து கொண்டு எங்களை பயமுறுத்துவது போல் நின்றார். நாங்கள் உள்ளே சென்றவுடன், அவர் எங்களை உற்றுப் பார்த்தார்.

எங்களை அருகில் அமர்த்திக் கொண்டு, என் கண்களை நோக்கி நேராகப் பார்த்து, ”செல்ல மகளே... இந்த உலகில் மிக மதிப்பு மிக்கதாக இறைவன் படைத்த அனைத்தும் மறைக்கப் பட்டவையாகவும், இன்னும் பெறுவதற்கு மிகக் கடினமாகவும் தான் உள்ளது. வைரங்களை எங்கு எடுப்பாய்?.

பூமியின் ஆழமான பகுதியில் மறைக்கப்பட்டதாகவும், பாதுகாக்கப்பட்டதாகவும் தான் வைரங்கள் உள்ளன.முத்துக்களை எங்கு எடுப்பாய்?கடலின் ஆழமான பகுதியில் அழகான சிப்பிக்குள் மறைக்கப்பட்டதாகவும், பாதுகாக்கப்பட்டதாகவும் தான் முத்துக்கள் உள்ளன.

தங்கத்தை எங்கு எடுப்பாய்? சுரங்கத்தினுள்ளே, அடுக்கடுக்கான பாறைகளுக்குள்ளே மறைக்கப்பட்ட நிலையில், அதை எடுப்பத்தர்க்கு நீ மிகக் கடினமாக உழைக்க வேண்டும்.”

என்னை உற்று நோக்கியவராக, ”உன்னுடைய உடல் புனிதமானது.. வைரங்கள், முத்துக்களை விட நீ புனிதமானவள். உன் உடலை முறை யாக நீ மறைத்துக்கொள்ள வேண்டும்... பெண்களின் உடலமைப்பு என்பது இறைவன் தந்த பொக்கிஷம். பொக்கிஷங்களை பொத்திப் பாதுகாப்பதே அறிவார்ந்தவர் செயல்.

அதைவிடுத்து பொக்கிஷம் உள்ள வீட்டை திறந்து போட்டால் பொறுக்கிகளால் உங்கள் பொக்கிஷம் சூறையாடத்தான்படும். பொக்கிஷமாய் போற்றி வளர்த்த தாய்தந்தைக்கு அழகு என்ற போர்வையில் அசிங்கத்தை பரிசளிக்காதீர்கள். நாகரீகம் என்ற போர்வையில் நாய்களுக்கு எலும்புத்துண்டு போடாதீர்கள்....”

அன்பு மகள்களே இதற்கு மேல் ஓர் தந்தையால் உங்களுக்கு அறி வுரை சொல்லமுடியாது. புரிந்து நடந்துகொள்ளுங்கள்.

# "ஒத்து வரவில்லை என்றால் விவாகரத்து வாங்கி விடுங்கள்!..

இன்று இப்படிப் பேசுவது சர்வ சாதாரணமாகிவிட்டது இப்போது !மிகக் கொடூர சூழலில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு விவாகரத்து தேவையே அதில் மாற்று கருத்து இல்லை.

ஆனால் அன்பில் இசைந்து செல்ல வேண்டிய விஷயங்களுக்கு கூட ஈகோ பார்த்துக் கொண்டும், குடும்ப உறவுகளின் வற்புறுத்தலுக்கும் நண்பர்களின் தேவையற்ற ஆலோசனைகள் ஆகியவை இளம் வயதினர் அதிகம் விவாகரத்தை நாடி செல்ல காரணமாகி விடுகிறது. ஆணைச் சார்ந்து பெண் வாழும் சுழலும் இப்போது இல்லை. இது மிகப் பெரிய காரணம் எனலாம்."உனக்கு என்ன கை நிறைய சம்பாதிக்கிறாய். உன்னால் உன்னையும் உன் பிள்ளைகளையும் பார்த்துக் கொள்ள முடியும். யோசிக்காதே.தைரியமாய் முடிவெடு" என்று ஆலோசனைகள் அதிகம் கொடுத்தும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பணம் தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமே வாழ்க்கை இல்லை. அதையும் மீறி பல விஷயங்கள் இருக்கின்றன. உங்களுக்கு வேறொரு கணவன் கிடைக்கலாம்.அல்லது கணவனென்றால் வேறொரு மனைவி கிடைக்கலாம். ஆனால் உங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் அப்பாக்களோ அல்லது அம்மாக்களோ நிச்சயம் கிடைக்க மாட்டார்கள்.

பார்ன் சுவாலோ என்ற சின்னச் சிறு பறவையினம் இனப்பெருக்கத்திற்காக 8300 கி.மீ.,கடலின் மீது பயணம் செய்கிறது. அர்ஜென்டினாவில் இருந்து கலிபோர்னியாவுக்கு வந்து போக, பறந்து செல்லும் 16,600 கி.மீ., தூரத்தில் எங்கும் நிலப்பரப்போ, மலைப்பரப்போ கிடையாது!

அவை அர்ஜென்டினாவில் இருந்து புறப்படும்போது, சிறுகுச்சி ஒன்றை அலகில் கவ்விக் கொண்டு பறக்கின்றன. எப்பொழுதெல்லாம் அவற்றிற்குப் பசியும் களைப்பும் ஏற்படுகின்றதோ, அப்பொழுதெல்லாம் அவை கடல் பரப்பிற்கு தாழ்வாகப் பறந்து வந்து, அலகில் கவ்விய குச்சியை கடல் பரப்பின் மேல் போட்டு அதன் மீது நின்று கொண்டு இரை தேடிக் ஓய்வெடுத்து பறந்து வேறொரு நாட்டில் தன் இனத்தை விருத்தி செய்துக்கொண்டு அங்கிருந்து மீண்டும் கடலின் மேலே தன் குஞ்சுகளுடன் பயணம் செய்து தன் சொந்த நாட்டை அடையும்.

ஒரு நல்வாழ்வை தன் குஞ்சுகளுக்கு கொடுக்க ஒரு பறவை இவ்வளவு போராடுகிறது. பேரன்பு இருந்தால் மட்டுமே இந்த பயணம் சாத்தியம். சிறு சிறு விஷயத்திற்கும் சண்டையிட்டுக் கொண்டும், சகிப்புத் தன்மை அற்றும் அல்லது பிற ஈர்ப்பில் மனம் மயங்கியும் ஏன் இந்த வாழ்வை தொடருகிறோம் என்று கசப்புடனும் இருக்கும் தம்பதியினர் அனைவருமே இந்த பறவையின் பயணத்தில் கற்றுக் கொள்ள நிறையவே உள்ளது. தன் இனத்தை நல்லவிதமாக உருவாக்குவதில் இத்தனை போராட்டங்கள் ஒரு பறவையின் வாழ்விலேயே உண்டென்றால் மனித வாழ்வில் இதைக்காட்டிலும் அதிக போராட்டங்கள் இருக்கும்..சிந்திப்போம்!...

சிலர் பெண்களிடம் பெண்ணியம் பெண் விடுதலை என்று அதிகம் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் ஆணாதிக்கம் மிகுந்த ஆண்வர்க்கம் என்றால் அவள் மீண்டும் வாழ்வை பெற்றுக் கொள்ள காத்திருக்கும் வர்க்கமும் இதே ஆணாதிக்கம் மிகுந்த ஆண்வர்க்கம்தானே. மாற்றப் படவேண்டியது மனங்களே. எதையும் எதிர் கொள்ளும் தைரியம்தான்.

தன் கணவனிடமே தன் சுயத்தை நிரூபிக்க முடியாமல் தோல்வியுறும் பெண் வேறு ஒரு ஆணிடம் தன் சுதந்திரத்தை எப்படி மீட்டெடுப்பாள்?அதே போன்று ஒரு பெண்ணிடம் அன்பை பெற சக்தியற்ற ஒருவன் வேறொரு பெண்ணில் தன் அன்பை எப்படி பெற முடியும்?அனைவரிடமும் சிறு சிறு அளவில் அல்லது பெரிய அளவிலும் குறைகள் இருக்கலாம்.பேரன்பு கண் கொண்டு காணில் அனைத்தும் சாத்தியமே !

மேலைநாடுகள் போல் சுதந்திர வாழ்வு அல்லது வேறு துணை தேடிக்கொள்ளுதல் என்று இப்போது மேற்கோள் காட்டிக் கொண்டிருக்க இயலாது. குடும்பம் அமைப்பினை தொலைத்து வெளியில் தேடியவர்கள் இப்போது மகிழ்ச்சி என்பது அவரவர் குடும்பத்தில் மட்டுமே சாத்திய படும் என்ற உண்மையை உணர்ந்து “ஒரே பெற்றோர்“ என்ற வாழ்வை பிள்ளைகளுக்கு கொடுக்க துவங்கி இருக்கிறார்கள்.

அங்கு சில கீழ் தட்டு மக்களே விவாகாரத்துக்கள் இன்னும் அதிகமாக பெற்றுக் கொண்டிருக்கின்றனர் என்று கூறுகிறார்கள். இனம் காப்பதில்,துணையை தேர்வு செய்வதில் பிற உயிரினங்களுக்கு இருக்கும் தெளிவு நமக்கு இருக்கிறதா என்று சுய பரிசோதனை செய்துக் கொள்வோம் அறிவென்பது மகிழ்ச்சியை இருக்கும் இடத்திலேயே உருவாக்கிக் கொள்ளுதலிலும் அதற்கேற்ப மாற்றங்களை அழகாய் கொண்டு வருவதிலும் அடங்கும்தானே !

---

## வாழ்க்கை!..

எதுவும் இல்லாமல் பிறந்து!..
எல்லாம் வேண்டும் என அலைந்து!..
எதுவும் நிரந்தரமில்லை எனத் தெரிந்து!..
உயிரும் சொந்தமில்லை என உணர்ந்து!..

உலகைவிட்டு ஒருநாள் பறந்து செல்வதுதான் இந்த வாழ்க்கை. இந்தக் குறுகிய காலத்திற்குள் எத்தனை போட்டிகள் பொறாமைகள், சண்டைகள் சச்சரவுகள், ஆசைகள் அபத்தங்கள், பெருமைகள் சிறுமைகள், கற்றவன் கல்லாதவன், பணக்காரன் ஏழை, ஆண்டான் அடிமை, ஆண் பெண், கௌரவம், சாதி, சமயம், நிறம், இனம், பிரதேசம் , நாடு என எத்தனை வேறுபாடுகளுடன் மனிதன் அலைகிறான். சிறிது சிந்தித்தால் எல்லாம் பூச்சியம்தான்!...

# பொது அறிவு..

1- உலகின் பரப்பளவில் பெரிய நாடு - ரஷ்ஷியா
2- உலகின் மிகப்பெரிய கண்டம் - ஆசியா
3- உலகின் மிகப்பெரிய கடல் - பசுபிக் பெருங்கடல்
4- உலகின் மிகப்பெரிய சிகரம் - எவெரெஸ்ட்
5- உலகின் மிக நீளமான நதி - நைல்நதி
6- உலகின் மிகப்பெரிய தீவு - கிறீன்லாந்து
7- உலகின் மிகப்பெரிய ஏரி - கஸ்பியன் ஏரி
8- உலகின் மிக ஆழமான ஏரி - பைகால் ஏரி
9- உலகின் மிகப்பெரிய நன்நீர் ஏரி - சுப்பிரீயர் ஏரி
10- உலகின் மிக உயரமான நீர் வீழ்ச்சி - ஏஞ்சல் நீர்வீழ்ச்சி
11- உலகின் மிகப்பெரிய காடு - அமேசான் மழைக்காடு
12- உலகின் மிகப்பெரிய தீபகற்பம் - அரேபிய தீபகற்பம்
13- உலகின் மிகப்பெரிய வளைகுடா - மெக்ஸிக்கோ வளைகுடா
14- உலகின் மிகப்பெரிய விரிகுடா - வங்காளவிரிகுடா
15- உலகின் மிகப்பெரிய அணை - மூன்று ஜோர்ஜ் அணை
16- உலகில் மிக உயரமான கட்டிடம் - புர்ஜ் கலிஃபா

## யூரோ நாடும்-நாணயமும்..





1- அண்மையில் ( 2026 ஜனவரி -1 ) யூரோ நாணயத்தை ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய நாடு - பல்கேரியா
2- ஐரோப்பிய ஒன்றியத்தில் தற்போது அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் - 27
3- யூரோ நாணயம் (ஏற்றுக்கொண்டுள்ள) பணப்புழக்கத்திலுள்ள நாடுகளின் எண்ணிக்கை - 21
4- ஐரோப்பி ஒன்றியத்தில் இறுதியாக இணைந்துகொண்ட நாடு - குரோசியா (2013)

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்கிறன்.. இனிகோடை காலத்தில்பலபேர் தாய் நாட்டுக்குப் போகப் பல ஆயத்தங்களையும் செய்வீர்களென நினைக்கிறன். சிலர் இப்போதும் போய்க் கொண்டுதான் இருப்பியள் என எண்ணுகின்றான்

ஊருக்குச் சென்று அங்கு பந்தா காட்டி, தண்ணியடித்து கூழும் கும்மாளமும் அடிக்கலாமென்றும் தமது பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு கலியாணம் என தமது சாதி, சமயம் பார்த்துச் செய்து வைப்பதும்,10.20.30, 40, 50, 60, 70, 80 எனப்பிறந்தநாள் கொண்டாட்டங்கள் களைகட்டிவிடும்தானே.

நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணங்களை நல்லாய் அனுபவிக்கும் கூட்டத்தினர் மிக அதிகம் பேர்.

சரி..சரி..இனி விசயத்துக்கு வாறன்... நம் சொந்த நாட்டில் நடை பெறும் செய்திகளால் காதும் வெடிக்குது. பொறுக்கவும் முடியாமல் கிடக்குது. பல..பல.. விபத்துகள், போதை மருந்துப் பாவனைகள், கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் எனப் பட்டியல் நீண்டு செல்கின்றதுதான் கவலை இந்த மயிலனுக்கு.

நாட்டில நடக்கிற சங்கதிகளைப் பார்த்தால் தலைசுத்தும். பணம், காணி, கடத்தல், போதைக்குக் காசு, போதை விற்பனை அது

இது என்று கட்டுக்கடங்காத கொள்ளைகளும் கொலைகளும் கூடிவிட்டன. அதுவும்சொந்தங்கள் குடும்பங்களிலும் பெரிய குளறுபடிகள் தான். தாய், தகப்பனை ஏமாற்றும் பிள்ளைகள், சகோதரங்களுககிடையே ஏமாற்றும் கதைகள், ஊர் ஊறவு களிடம் சுத்துமாத்தும் அபகரிப்பும் கொள்ளையும், சொத்துக் குவிப்பும் அமளியாகத்தான் நடக்குது பாருங்கோ..

இந்தமுறை மயிலன் ஒரு விடயத்தை உங்களோடு பேசப்போறன் கண்டியளே..இதையும் கொஞ்சம் வாசித்துப்பாருங்கோ..என்னண்டாப் பாருங்கோ இந்த வெளிநாட்டுக் காசுகள் செய்கிற வேலையைப் பார்த்தால் எங்கபோய் தலையை முட்டுறதெண்டு தெரியலை பாருங்கோ..

ஒரு கோடிக்கு கார் வேண்டிக் கொடுத்த பிள்ளைகள், 1 கோடி செலவளித்து தனது பிள்ளைக்குச் சாமத்திச் சடங்கு செய்த அப்பன், கோயில் மேளக்காரருக்குப் 15 லட்டம் கொடுத்து மேளமடித்த அரைகுறைப் பணக்காரன், ஒரு லடசம் கொடுத்து மாம்பழம் வேண்டிய பக்தன் இப்படியானவர்களின் உண்மைச் சம்பவங்கள் இந்த மயிலனின் காதுக்கு எட்டியது பாருங்கோ அதை உங்களோடு பகிர்ந்து கொள்ளப் போறன் கொஞ்சம் வாசித்துப்பாருங்கோவன் ராசாக்கள்

சரி.தாம் பெற்ற பிள்ளைகள் ஐந்தும் ஐந்து கண்டங்களில்.. இந்த ஐந்து பிள்ளைகளும் தகப்பனுக்கு"செப்றைஸ் கிப்ற்" அதாவது தந்தையின் பிறந்தநாளுக்கு ஒரு கோடி ரூபாவுக்குப் புதியகாரை வேண்டிக் கொடுத்திருப்பது அந்த ஊரில் பெரும் பரபரப்பையும் வியப்பையும் ஏற்படுத்தியதாம் என்று என்ர நண்பன் ஒருவன் ஊரிலிருந்து எனக்கு ரெனிபோனில் தகவல் சொன்னான் பாருங்கோ.. நல்லதுதான் ஆனால் அந்தக்கார் பாவிப்பதில்லையாம் ஆறுமாதங்களுக்கு மேல் வீட்டு வளவில் மூடிப் பாதுகாக்கினமாம் பெற்றோர். அது மட்டுமல்லாமல் பெற்றோர் ஆஸ்பத்திரிக்கோ கொண்டாட்ட ங்களுக்கோ செல்வதென்றால் வாட கைக்குக் கார்பிடித்துக்காண்டுதான் போய் வருகிறனமாம். இதுதான் சங்கதி பாருங்கோ!..

அடுத்தது புலம்பெயர் நாட்டிலிருந்து ஊர் சென்ற ஒரு தம்பதி தமது தாய் தந்தை, மாமன் மாமி சகோதரங்கள் உறவுகள் ஊரவர்கள் சொந்தங்கள் பந்தங்கள் எல்லாரையும் சொல்லி அழைத்து ஒரு கோடி செலவில் சாமத்திக் கொண்டாட்டம் அமர்க்களமாகச் செய்து முடித்திருக்கிறார் இந்த வீராதி வீரன் குடும்பம். தன்ர ஊரில தான் செய்தமாதிரி ஒருவரும் கொண்டாட்டம் செய்யக்கூடாது என்ற விறுமாப்பு, ஆணவம், பெயர், புகழ் எல்லாம் தலைக்கேற இவ்வளவு செலவழித்திருக்கிறார் இந்த புலன் பெயர் வள்ளல்..கேரளாவிலிருந்து நடனக்கோஸ்டி, சென்னையிலிருந்து சினிமா குத்தாட்டக் கோஸ்டி, கொழும்பிலிருந்து யானை என வரவழைத்து அந்த பிஞ்சுப் பெண்ணை யானையில் ஏற்றி ஒழுங்கை, வீதி எல்லாம் ஊர்வலமாக ஏற்றித் திரிந்து ஆடம்பர மண்டபத்தில் மதுப்போத்தல்களில் தோய்ந்து இரவு பகலாக ஒரு கிழமை கொண்டாட்டம் களைகட்டி இரவுப்பாட்டியில் கைகலப்பில் முடிந்து திருவிழாக் கொண்டாடியிருக்கிறார் இந்தப் புலம் பெயர் தமிழன் பாருங்கோ.. அடுத்த புலம்பெயர் வித்துவான் ஒருவரின் செயலையும் கொஞ்சம் பாருங்கோ.. பெயர், புகழ், சாதியம், பணம், கௌரவம் என அலைந்து திரியும் புலம்பெயர் வீரனால் தாயகத்தின் மேளக்காரர்களுக்குத்தான் பெரும் பணக்கொண்டாட்டம் பாருங்கோ.. அதாவது தனது ஊர்க் கோவிலில் தான் செய்தமாதிரி ஒருவரும் செய்யக்கூடாது என்ற தற்புகழுக்காக ஒன்று இரண்டு மணித்தியாலத்தில் 15 லட்சம் ரூபாவைக் கொட்டிச் செலவழித்திருக்கிறார் இந்தப் புலம்பெயர் விண்ணன் பாருங்கோ.

அதாவது கோவில் திருவிழாவுக்கு பதினைந்து கூட்டம் மேளக்காரர்களை அழைத்து மேளம் அடி அடி என்று அடித்து நாதஸ்வரமும் ஊதித்தள்ள அங்கிருந்த மக்கள் சத்தம் தாங்கமுடியாமல் முக்கால் வாசிப்பேர் திருவிழா முடியமுன்னரே வீட்டுக்குப் போய்விட்டினம். மிச்சம் பத்துப் பதினைந்து குடும்பங்கள்தானாம் ரசித்தவையாம். ஆனால் இந்த மேள நாதஸ்வரக் கூட்டத்தினர் ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சமாம். பறுவாயில்லை ஓரிரண்டு மணித்தியரலத்தில் லட்சக்கணக்காக அள்ளிக் கொண்டு போனார்கள் இந்தக் கலைஞர்கள். பறவாயில்லை யாழ்ப்பாணத்தில் சமயமும் கலைகளும் வளருதோ இல்லையோ வெளிநாட்டுக்காரர்களால் இப்படி யான இசைக்கலைஞர்களுக்கு மாதம் கோடி கோடியாக வருமானமாம்..

சரி இன்னொரு விடயமும் இந்த மயிலனின் காதில் எட்டியது என்னென்றால் பாருங்கோ.. கோவில்த்திருவிழா ஒன்றில் ஒரு மாம்பழம் ஒரு லட்சத்துக் வேண்டிய ஒரு புலன் பெயர் அறிவாளியின் கதை அல்ல இது நிஜம் பாருங்கோ வெளிநாட்டிலிருந்து ஊருக்குப் போனவர், தமது ஊர்க்கோவில் திருவிழாவின் ஏலத்தில் ஒரு மாம்பழத்தை ஒரு லட்சம் ரூபா கொடுத்து வேண்டிச் சாதனை படைத்திருக்கிறார்.

இத்தனைக்கும் தனது தாய் தந்தை முதியோர் இல்லத்தில் பல வருடங்களாக வாழ்கிறார்களாம். அவர்களைப் பார்க்கப் பிள்ளைகள் ஒன்றும் இல்லை. எல்லாப் பிள்ளைகளும் வெளிநாடுகளில்.. வெளிநாட்டிலிருந்து வந்த இந்த மகன்தான் ஒரு லட்சத்துக்கு ஒரு மாம்பழத்தை வேண்டித் தனது பக்தியையும் பெயரையும் புகழையும் நிலைநாட்டியிருக்கிறார். சில வேளை இந்தச் செயல் உலக சாதனைப்புத்தகத்திலும் வரும் என இந்த மயிலன் எண்ணுகிறான்..

எல்லாம் பாருங்கோ சந்தணம் மெத்தின குணம்தான் பாருங்கோ.. ஊரிலையும் சொந்த பந்தங்களும் , பொதுமக்களும் எத்தனையோபேர் வறுமையிலும் கொடுமையிலும் அன்றாடம் உண்ண வழியில்லாமல் போராடிக்கொண்டு வாழ்வைக் களிக்கிறார்கள். எத்தனையோ சின்னஞ்சிறிசுகள் வறுமை காரணமாக பள்ளிக்கூடம் செல்லமுடியாமல் தத்தளிக்கிறார்கள்.

சில சிறிசுகள் தினமும் நாலு ஐந்து கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று பசி, பட்டினியோடு படிக்கிறார்கள், சில பிஞ்சுகள் வறுமைகாரணமாகக் கூலித்தொழிலுக்குப் போகிறார்கள். எத்தனை ஆயிரம் பேர் வேலைகள் இல்லாமல் வறுமையில் வாடுகிறார்கள்.

அடுத்தது மழை, வெள்ளம், மண்சரிவு, சூறாவளி போன்ற அனர்த்தங்களால் வாடுகிறார்கள். இதைவிடப் படு பயங்கரம் முன்னாள் போராளிகள் வறுமையின் பிடியால் தமது உடல் உறுப்புகளை (சிறுநீரகம்) விற்று தமது குடும்பங்களைக் காப்பாற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி அடுக்கிக்கொண்டு போனாலும் பல புலன் பெயர் மூத்த தமிழ்க்குடிகளுக்கு நல்ல யோசனை வராது பாருங்கோ. யார் எழுதினாலும் தொண்டை கிளியக் கத்தினாலும் கேட்கமாட்டினம் இந்தப் புலன் பெயர் மூத்த தமிழ்குடிகள். எல்லாம் வெளிநாட்டுக்காசு செய்கிற வேலைதான் பாருங்கோ.. காசு வேணும்தான்.. ஆனால் அந்தக் காசை எப்படிப் பயன்படுத்துகின்றோம் என்பதில்தான் பல அறியாமை, அகங்காரம் நம்மவர்கள் மத்தியில் இருந்துவருவது வேதனைதான் இந்த மயிலனுக்கு..

ஏதோ இந்த மயிலனுக்குப்பட்டதை சொல்லுறன். புலம்பெயர் மக்களே கொஞ்சம் சிந்தியுங்கோ. நல்லதை எண்ணுங்கோ நல்லதையே செய்யுங்கோ!..அப்ப அடுத்த முறை இன்னும் சில விடயங்களோடு இந்த மயிலன் வருவான்.. எல்லாரும் சுகமாய் இருங்கோ!...

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| பா | ட | சா | லை |
| ட் | மா | ம் | அ |
| டு | ட் | ப | வ் |
| கா | கொ | வ் | வை |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | க | ளி | ர் | தி | ன | ம் |
| ன் | ண | ர் | க | ங் | கே | ரி |
| னா | ம் | தி | ம் | க | ட | க |
| ரி | த | த் | பு | ள் | க | ம |
| ப | ர | க | தை | வ | ற் | டி |
| ம் | ப | ட் | டி | ன் | ப | ண் |
| க | டி | கா | ர | ம் | னை | க |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 8 | 4 | 5 | 9 | 7 | 3 | 2 |
| 9 | 4 | 7 | 3 | 1 | 2 | 8 | 5 | 6 |
| 5 | 3 | 2 | 6 | 7 | 8 | 1 | 9 | 4 |
| 2 | 9 | 3 | 8 | 4 | 1 | 6 | 7 | 5 |
| 8 | 7 | 1 | 5 | 2 | 6 | 9 | 4 | 3 |
| 4 | 6 | 5 | 9 | 3 | 7 | 2 | 8 | 1 |
| 3 | 8 | 9 | 1 | 6 | 5 | 4 | 2 | 7 |
| 7 | 5 | 6 | 2 | 9 | 4 | 3 | 1 | 8 |
| 1 | 2 | 4 | 7 | 8 | 3 | 5 | 6 | 9 |

# மௌனம் பேசிய கம்பீரம்---- (சிறுகதை)

மங்கை அரசி - யேர்மனி

ஜீப் வண்டியிலிருந்து துள்ளிக் குதித்து இறங்கினாள் ரேவதி. கம்பீரமான நடையுடன் அலுவலகத்துக்குள் நுழைந்தபோது, அங்கிருந்தவர்கள் அனைவரும் பூச்செண்டு கொடுத்து "Good Morning Madam" என்று சொல்லி வரவேற்றனர். போலீஸ் சீருடையில் அங்கு நின்ற அத்தனை ஆண்களுக்கும் தலைவியாக, உதவி காவல் கண்காணிப்பாளராக (ASP) உயர்ந்து நின்றாள் ரேவதி. பொறுப்பேற்ற முதல் நாள் என்பதால் அன்றைய அலுவல்களைக் கவனித்து முடித்துவிட்டு வெளியேவந்தாள். அலுவலகத்திற்கு வெளியே இருந்த வீதியை ஒருமுறை நோட்டமிட்டாள்.

அந்த வீதி, 14 வருடங்களுக்கு முன் இருந்த அதே அமைப்போடு அவள் மனக்கண்ணில் விரிந்தது. அவள் அந்தத் தெருவில் நடந்து திரிந்த காட்சிகள், வியாபாரம் செய்த காட்சிகள், அழுது புலம்பிய தருணங்கள் எல்லாம் கண்முன்னே வந்து நின்றன. அவளது பதினெட்டாம் வயதில், பல்கலைக்கழக நுழைவுக்கான பொதுப்பரீட்சை நடைபெற்ற சமயத்தில் ரேவதிக்குக் காதல் அரும்பியது. பரீட்சை முடிந்தவுடன் தன் காதலைப்பற்றிப் பெற்றோரிடம் அவள் கூறியபோது பெரும் எதிர்ப்பு கிளம்பியது.

”உனக்கு இன்னும் கல்யாண வயசு வரவில்லை, அவன் உனக்குத் தகுதியான ஆளும் இல்லை, அவனுக்கு ஒரு வேலை கூட இல்லை” எனப் பல காரணங்கள் கூறப்பட்டன. மிகவும் ஏழ்மையான குடும்பம் அவளுடையது. ”படிப்பு இருந்துவிட்டால் மட்டும் போதுமா?வேறு நல்ல இடத்தில் வரன் பார்த்துத் திருமணம் செய்து வைக்கின்றோம்,பொறுமையாய் இரு!” என்று வீட்டில் கறாராகச் சொல்லிவிட்டனர். முடிவில், ரேவதி காதலனுடன் வீட்டை விட்டு வெளியேறினாள். இருவரும் இரவு ரயிலில் ஏறிதலைநகரம் சென்றுவிட்டனர். விடிந்தபின்புதான் பிள்ளைகளைக் காணவில்லை என்று இரண்டு வீட்டுப் பெற்றோர்களும் தேடினர். முடிவில் இருவரும் சேர்ந்து ஓடிவிட்டனர் என்பதைப் புரிந்துகொண்டனர்.

நாளடைவில் இந்தச் சம்பவம் அனைவராலும் மறக்கப்பட்டது. இது நடந்து 14 மாதங்களுக்குப் பின், அந்த நினைவுகளை மீண்டும் கிளறும் விதமாக, ரேவதி மட்டும் ஒரு கைக்குழந்தையுடன் ஊருக்குத் தனியாக வந்து நின்றாள். ஏழ்மையான கோலத்தில் அவள் நின்ற காட்சி காண்போர் மனதையும் கலங்க வைப்பதாகவே இருந்தது. கணவனை இழந்து நின்ற அவளை ஏற்க யாரும் தயாராக இல்லை பெற்றோரின் மனமும் இரங்கவில்லை. அவள் தனிமையில் விடப்பட்டாள். அந்த நேரம், அவள் கணவரின் தூரத்துச் சொந்தமான வயதான பாட்டி ஒருத்தி, அவளைத் தன்னுடன் தங்க அனுமதித்தாள்.

அதில் அந்தப் பாட்டியின் சுயநலமும் கலந்திருந்தது. பாட்டியின் காலை நேர சிற்றுண்டி வியாபாரத்திற்காக இட்லி, தோசை சமைக்க முழு உதவியும் ரேவதி செய்தாள். அத்துடன் வீட்டு வேலைகள் முழுவதையும் அவளே பார்த்தாள். மாவு அரைப்பது, மறுநாளைக்குச் சாம்பார், சட்னி வைப்பது என அனைத்தையும் செய்தாள். இருந்த இடத்திலேயே அமர்ந்து வியாபாரத்தைப் பார்த்துக்கொண்டு

பணத்தை எண்ணுவது மட்டுமே பாட்டியின் வேலையாக இருந்தது. வீட்டு வேலைகள் முடிந்தபின், பாட்டியின் மூலமாக ஊர்க்காரர்களிடம் பால் வாங்கி, காய்ச்சி,உறைபோட்டுத் தயிராக்கி, மோர் கடைந்து வியாபாரமும் செய்து வந்தாள். வீதி வீதியாக மோர் விற்று வந்தாள். பல்வேறு அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்கள் அவளிடம் மோர் வாங்கினர். கோடை காலத்தில் வியாபாரம் சூடுபிடிக்கும்.

இன்று அவள் அதிகாரியாக நிற்கும் இதே போலீஸ் அலுவலகத்தில்கூட அன்று அவள் மோர் வியாபாரம் செய்திருக்கிறாள்."மேடம்,டீ வேணுமா?" என்ற குரல் கேட்டுத் திடீரென நிகழ்காலத்திற்கு வந்தாள் ரேவதி. திரும்பிப் பார்த்தவள், மீண்டும் அந்த வீதியை வெறித்துப் பார்த்தாள் அன்று மோர் விற்கும் ஆதரவற்ற பெண் இன்று ASP ரேவதி! மீண்டும் பழையநினைவுகள் அவளை ஆட்கொண்டன.

பாட்டி ஒருநாள் திடீரென இறந்துவிட, ரேவதி மீண்டும் தனிமைப்பட்டாள். என்ன செய்வது எனத் தெரியாமல் நின்றவளுக்கு எந்த வழியும் புலப்படவில்லை. பாட்டியின் ஈமைக்காரியங்கள் முடிந்ததும் ரேவதியை பெட்டிப் படுக்கையுடன் வீட்டை விட்டுப் போகும்படி பாட்டியின் பிள்ளைகள் கட்டளையிட்டனர். அந்த இருண்ட நேரத்தில தேவதூதனாக வந்த அந்த ஊர் கிராம சேவகர் அவளுக்கு ஆதரவுக் கரம் நீட்டினார்.

தபால்அலுவலகத்தில் போஸ்ட் மாஸ்டருக்கு உதவியா-ளராக ஒரு வேலையை வாங்கிக்கொடுத்தார். அந்த அலுவலகத்துக்குப் பின்னால் ஒரு சிறிய வீடு இருந்தது. அதில் தன் குழந்தையுடன் தங்கியபடி அலுவலக வேலையைப் பார்த்து வந்தாள் ஆதரவற்ற மூதாட்டி ஒருவர் அவளுக்குத் துணையாகவும் உதவியாகவும் வந்து சேர்ந்தார். "ஒரு கதவு அடைக்கப்பட்டால் மறு கதவு திறக்கும்" என்பதற்கான ஆதாரமாக அவள் வாழ்க்கை மாறியது. தபால் அலுவலக வேலையோடு சேர்த்து, அஞ்சல் வழ-ியில் (Distance Education) தன படிப்பைத் தொடர்ந்தவள், கடின உழைப்பால் பட்டதாரி ஆனாள்.

காவல்துறைத் தேர்வில் வெற்றி பெற்று, சப்-இன்ஸ்பெக்டராகப் பணியில் சேர்ந்தாள். அவளுடைய திறமையையும் வேகத்தையும் பாராட்டித் தொடர்ச்சியாகப் பதவி உயர்வுகள் கிடைத்தன. இன்ஸ்பெக்டர், சீனியர் இன்ஸ்பெக்டர் என உயர்ந்து இன்று உதவி காவல் கண்காணிப்பாளர் (ASP) அந்தஸ்தை அடைந்துள்ளாள். அவளது மகள் இப்போது ஒரு நல்ல கான்வென்ட் விடுதியில் தங்கிப் படித்து வருகிறாள். இன்று ரேவதி சமூகத்தில் கௌரவமான குடிமகள் மட்டுமல்ல் நாட்டின் சட்ட ஒழுங்கை நிலைநாட்டும் ஓர் அரசு அதிகாரி. காக்கி உடையில் கம்பீர நடைபோடும் காவல்துறைத் தலைவி!

அன்று அவளைத் தூக்கி எறிந்த உறவுகள், இன்று அவளை வரவேற்க ஆயத்தமாக இருக்கிறார்கள். "எப்போதும் லாப நட்டக் கணக்கு மட்டுமே பார்க்கும் இந்தச் சாமர்த்தியக்கார உறவுகள்,தங்களுக்குப் பாரம் வந்துவிடும் என்று எண்ணியபோது பட்டும் படாமல் விலகிஓடினார்கள். உறவு என்பது இரத்த சம்பந்தம் மட்டும்தானா? உண்மையான அன்புடன் ஆபத்தில் உதவுபவர்கள் அனைவருமே உறவுகள்தான்!" என அவள் மனம் கணக்குப் போட்டது. **61ம் பக்கம்.....**

# சுகாதாரக் குறிப்புகள்...

**மொழிபெயர்ப்பு......**




**செல்வி சாமினா சிவதாசன்**
Essen - Germany

மருத்துவக் குறப்புகள் மொழிபெயர்ப்பு

Um 22% kann das Risiko für einen Schlaganfall reduziert> wenn mindestens einmal pro Woche Zahnscheide verwendet wird.
- வாரத்தற்கு குறைந்தது ஒரு முறையாவது பல் இடைநூல் (Dental floss) பயன்படுத்தினால், பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை 22% வரை குறைக்க முடியும்.

45% aller Demenzfälle und 90% aller Schlaganfälle sind vermeidbar.
- மறதி நோயாளிகளில் 45% வைரயும், பக்கவாத நோயாளிகளில் 90% வைரயும் தவர்க்க முடியும்.

5% aller Menschen mit Alzheimer sind jünger als 65 Jahre. Rund zwei Drittel werden zu Hause von Angehörigen betreut.- அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 5% பேர் 65 வயதற்கு குறைவானவர்கள். அவர்களில் சுமார் மூன்றல் இரண்டு பேர் வீட்டிலேயே குடும்பத்தனரால் பராமரிக்கப்படுகன்றனர்.

8% ist das Demenzrisiko bei Diabetes wenn der HbA1CWert um 1% zunimmt.- நீரிழிவு நோயாளிகளில் HbA1c மதிப்பு 1% உயர்ந்தால், மறதி நோய் அபாயம் 8% வரை அதிகரிக்கிறது.

62% der Deutschen nehmen regelmäßig vorbeugende Vitamine und Mineralstoffpräparate ein.- ஜேர்மனியர்களில் 62% பேர் முன்னெச்சரிக்கை நோக்கல் விட்டமின் மற்றும் கனிமச் சேர்க்கைகள் வழக்கமாக பயன்படுத்துகன்றனர்.

8000 bis 20 000 Euro kosten die Behandlungen> die von privaten und einigen gesetzlichen Krankenkasse übernommen werden.- தனியார் மற்றும் சல அரசு சுகாதாரக் காப்பீடுகள் ஏற்றுக் கொள்கின்ற கிச்சைகள் 8,000 முதல் 20,000 யூரோ வைர செலவாகின்றன.
750 Patienten wurden im ZAP-X Gerät des ERCM bereits bestrahlt. Nirgendwo auf der Welt wurden mehr Menschen behandelt.- ERCM (European Radiosurgery Centre Munich) நிறுவனத்தன் ZAP-X கருவி யைப் பயன்படுத்த இதுவைர 750 நோயாளிகளுக்கு கதிர்வீச்சு சிகிச்சை செய்யப்பட்டது. உலகளவில் இதைவிட அதிகமானோர் வேறு எங்கும் சிகிச்சை பெறவில்லை.

36% der Europäer haben mentale Probleme> aber nur 7% holen sich therapeutische Hilfe.- ஐரோப்பியர்களில் 36% பேருக்கு மனநலப் பிரச்சைனகள் உள்ளன, ஆனால் அவர்களில் 7% பேர் மட்டுமே சிகிச்சை உதவியைப் பெறுகின்றனர்.

44% niedriger ist das Schlaganfallrisiko> wenn auf eine guteMundhygiene geachtet wird.-- ,நல்ல வாய்சுத்தத்தை பின்பற்றினால், பக்கவாதம் ஏற்படும் அபாயம் 44% வரை குறைவாக இருக்கும்.

53% der Deutschen vermeiden gesundheitsschädliche Substanzen wie zu viel Alkohol oder Nikotin.--,ஜேர்மனியர்களில் 53% பேர் உடல்நலத்தற்கு தீங்கு வைளவக்கும், அதிக மதுபானம் மற்றும் நேகாட்டின் போன்ற பொருட்களைத் தவிர்க்க முயற்சிக்கின்றனர்.

835 000 Menschen in Deutschland vertragen keine Gluten.--,ஜேர்மனியல் 835 000 பேர் பசையம் (Gluten) சகிக்க முடியாமல் இருக்கன்றனர்.

40Kg Brot hat jeder Käuferhaushalt in Deutschland 2024 durchschnittlich verzehrt.--,2024 ஆம் ஆண்டில், ஜெர்மனியல் ஒவ்வொரு குடும்பமும் சராசரியாக 40 Kg பாணை உட்கொண்டார்கள்.

72,4% der Deutschen ist das Tierwohl beim Kauf von Fleisch, Milch oder Eiern wichtig.--,ஜேர்மனியர்களில் 72,4% பேர் இறைச்சி, பால் அல்லது முட்டை போன்ற பொருட்களை வாங்கும் போது விலங்குகளின் நலனை முக்கியமாக கருதுகின்றனர்.

Rund 3,5Mio Menschen in Deutschland haben Asthma bronchiale. ஜேர்மனியல் சுமார் 3,5 மில்லியன் பேருக்கு ஆஸ்துமா (Asthma bronchiale) உள்ளது.

20% geringer kann das Schnarch Risiko bei Frauen ausfallen, wenn eine Hormonenersatztherapie machen.--,ஹார்மோன் சிகிச்சைக்கு உட்படும் பெண்களில் குறட்டை ஏற்படும் ஆபத்து 20% குறைவாக இருக்கலாம்.

35% der Deutschen treiben gar keinen Sport> weitere 34% nur 1 bis 2 mal pro Woche. Die WHO empfiehlt mindestens 150 Minuten moderate Bewegung pro Woche plus Krafttraining.

ஜேர்மனியர்களில் 35% பேர் ஒருபோதும் உடற்பயிற்சி செய்யவில்லை, மேலும் 34% பேர் வாரத்திற்கு 1-2 முறை மட்டுமே செய்கிறார்கள். உலக சுகாதார அமைப்பு (WHO) குறைந்தது வாரத்திற்கு 150 நிமிட நடுத்தர உடற்பயிற்சி மற்றும் சக்தியான பயிற்சி மேற்கொள்ள பரிந்துரைக்கிறது.

.

270 Millionen Tonnen betrug 2023 die EU-Getreideproduktion. - 2023 இல் ஐரோப்பய ஒன்றியத்தின் (EU) தானிய உற்பத்தி 270 மில்லியன் தொன்களாக இருந்தது.

2,23Millionen Deutsche kaufen aktuell glutenfreie Lebensmittel.-தற்போது ஜேர்மனியல் 2.23 மில்லியன் பேர் பச்சையம் இல்லாத உணவுப் பொருட்களை வாங்குகின்றனர்.

4391 Fälle von Turberkulose wurden 2024 in Deutschland registiert. Die Infektionszahlen sind hierzulande seit Jahren rückläufig.-2024 ஆம் ஆண்டில் ஜேர்மனியல் 4391 காச நோய்கள் பதிவு செய்யப்பட்டன. கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் தொற்றுநோய் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

.................................................................................................................................

# ஏலக்காய்..

ஏலக்காயில் உள்ள வெப்பமயமான விளைவு உடலில் இரத்த ஓட்டத்தை மேம்படுத்த பெரிதும் உதவி புரிகிறது மற்றும் உடலின் வெப்பத்தை வெளிப்புறத்திற்கு செலுத்துவதன் மூலம் வியர்வையை உண்டாக்கும் காரணியாகச் செயல்படுகிறது. மேலும் ஏலக்காயில் உள்ள ஆன்டி-ஆக்ஸ ிடன்ட்டுகள் இரத்த ஓட்டத்தை மேம்படுத்த உதவுகிறது மற்றும் இரத்தம் உறைவதைத் தடுத்து, இதய நோய், மூளை நோய் மற்றும் நரம்பியக்கச் சிதைவு நோய்களின் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.





தினமும் ஒரு ஏலக்காய் சாப்பிடுவதால் இத்தனை நன்மையா? இரத்த சர்க்கரை முதல் செரிமானம் வரை சமையலில் அதிகம் பயன்படுத்தப்படும் ஒரு மசாலா பொருள் தான் ஏலக்காய். இந்த ஏலக்காய் உணவிற்கு நல்ல மணத்தையும் சுவையையும் தருவதற்காக பயன்படுத்தப்படுகிறது. இது தவிர ஏலக்காய் ஏராளமான மருத்துவ பண்புகளைக் கொண்டது

இதனால் ஆயுர்வேதத்தில் பல ஆரோக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வளிக்க பயன்படுத்தப்படுகிறது. முக்கியமாக இந்த ஏலக்காய் செரிமான பிரச்சனைகளுக்கு உடனடி நிவாரணத்தை அளிக்கும். இப்படிப்பட்ட ஏலக்காயை காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் மென்று சாப்பிட்டால் உடலுக்கு ஏராளமான நன்மைகள் கிடைக்கும் என்பது தெரியுமா?

**செரிமானம்..** ஏலக்காயில் நறுமணமிக்க உட்பொருட்கள் அதிகம் உள்ளன. இவைசெரிமான நொதிகளின் செயல்பாட்டை தூண்டும்.எனவே வயிறு நிறைய

உணவை உட்கொண்ட பின்னரோ அல்லது எண்ணெயில் பொரித்த உண-வுகளை உட்கொண்ட பின்னரோ, செரிமான மண்டலத்தின் செயல்பாடு சிறப்பாக இருக்க, ஒரு ஏலக்காயை வாயில் போட்டு மென்று சாப்பிடுங்கள்.

**வாய் துர்நாற்றம்..**பாரம்பரியமாக வாய் துர்நாற்றத்திற்கு நம் முன்னோர்கள் பயன்படுத்திய ஒரு இயற்கை வழி தான் ஏலக்காயை வாயில் போட்டு மென்று சாப்பிடுவது. ஏலக்காயில் பாக்டீரியாக்களை எதிர்க்கும் பண்புகள் உள்ளன. இவை வாய் துர்நாற்றத்தை உண்டாக்கும் பாக்டீரியாக்களை குறைக்க உதவுகிறது. எனவே வாய் துர்நாற்ற பிரச்சனைகளை சந்திப்பவர்கள், இயற்கையாகவே அதை தடுக்க ஏலக்காயை வாயில் போட்டு மென்று சாப்பிடலாம்.

**இரத்த சர்க்கரை குறையும்..** ஏலக்காய் வாய்க்கு நல்ல புத்துணர்ச்சி அளிப்பதற்கு மற்றும் செரிமானத்தை சீராக்குவதற்கு மட்டுமின்றி, இரத்த சர்க்கரை அளவையும் கணிசமாக குறைக்க உதவும். ஆய்வு ஒன்றில், ஏலக்காயை அதிக கார்போஹைட்ரேட் நிறைந்த உணவுகளுடன் சேர்த்து எலிகளுக்கு கொடுத்து பரிசோதனை செய்ததில், இந்த உணவை உட்கொள்ளாத எலிகளுடன் ஒப்பிடுகையில் உணவை உட்கொண்ட எலிகளுக்கு இரத்த சர்க்கரை அளவை குறைந்திருப்பது தெ-ரிய வந்தது.

**நெஞ்செரிச்சல்...**ஏலக்காயில் காணப்படும் செரிமானத்தைத் தூண்டும் நொதி வயிற்று அமிலத்தன்மையை சமநிலைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பொதுவாக நெஞ்செரிச்சலானது அதிக காரமான உணவுகளை உட்கொள்ளும் போது ஏற்படும். இந்நிலையில் ஏலக்காயை வாயில் போட்டு மென்று அதன் சாற்றினை விழுங்கும் போது நெஞ்செரிச்சல் குறைவதைக் காணலாம். ஆனால் அளவுக்கு அதிகமாக நெஞ்செரிச்சலை சந்தித்தால், தாமதிக்காமல் உடனே மருத்துவரை அணுகுவதே நல்லது.

.....................................................................................................................................

**30ம் பக்கத் தொடர்ச்சி (சிறுகதை)**

,மாமாவிடம் உறவுக்காரர்கள் மூலம் பேசிப்பார்த்தர்கள். மாமா உறவை-யே முடித்துக் கொண்டோம் என்றாராம்.என்னைக் கேட்காமலேயே என் வாழ்க்கையை முடிவு செய்து, பேசிப்பேசிக் கனவுகளை வளர்த்தார்கள்.பின் பெரியவர்களாகவே புதைத்தார்கள். ஆரம்பிக்கும் போதும் என் உணர்வை , விருப்பத்தை, யாரும் பொருட்படுத்தவில்லை,அதே போல ,சுரேந்தரின் உருவத்தை நெஞ்சில் இருந்து அழித்து ,பாலனை மாப்பிள்ளையாகத் தெரிவாக்கியபோதும் யாரும் என்விருப்பத்தைப் பொருட்படுத்தவில்லை . எழுதப் படாத சட்டமாகவே எல்லாம் தொடர்கிறது .பெண்ணுக்கும் இதயம் இருக்கும்.அதில் உணர்வுகள் இருக்கும் என்பது அறியப்படாமலே அவளுக்கு நல்லது செய்கிறோம் எனத் தொடர்கிறார்கள். அவளுக்கென்றோர் மனம் இருப்பதும், அதிலும் தனிப்பட்ட உணர்வுகள் இருக்கும் என்பதும் எப்போது உணரப்படப்போகிறது?

**கீத்தா பரமானந்தன் - யேர்மனி**

## செரிமான பிரச்சனைகளை தீர்க்க உதவும் காய்கறிகள்.., என்னென்ன தெரியுமா?..

பொதுவாக குளிர்காலத்தில் சளி, இருமல், காய்ச்சல் போன்ற பிரச்சனைகளை தொடர்ந்து செரிமான பிரச்சனைககளும் ஏற்படும்.

ஏனெனில் குளிர்காலத்தில் உடலின் மெட்டபாலிசம் குறைவாகவும், நீரிழப்பும், மந்தத்தன்மை அதிகமாகவும் இருப்பதால், வயிற்று உப்புசம், மலச்சிக்கல், அஜீரண கோளாறு மற்றும் அசிடிட்டி போன்ற பிரச்சனைகளை சந்திக்க நேரிடும்.

இப்படி குளிர்காலத்தில் குடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்க நார்ச்சத்து அதிகம் நிறைந்த காய்கறிகளை அதிகம் உட்கொள்ள வேண்டும்.

அந்தவகையில், செரிமான பிரச்சனைகளை தீர்க்க உதவும் 5 காய்கறிகள் குறித்து பார்க்கலாம்.

**கேரட்-** கேரட்டில் டயட்டரி நார்ச்சத்துக்களும், கரையக்கூடிய நார்ச்சத்துக்களும் அதிகம் உள்ளதால், இது மலத்தை மென்மையாக்கும் மற்றும் குடலியக்கத்தை சீராக்கும்.

**பசலைக்கீரை-** இந்த கீரையில் நார்ச்சத்து, நீர்ச்சத்து மற்றும் மக்னீசியம் போன்றவை அதிகம் உள்ளன. இவை மலச்சிக்கலைத் தடுக்கும். மேலும் இதில் உள்ள ஊட்டச்சத்துக்கள் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

**சர்க்கரைவள்ளிக் கிழங்கு-** இதில் கரையக்கூடிய மற்றும் கரையாத நார்ச்சத்துக்கள் அதிகமாக உள்ளன. இவை குடலியக்கத்தை சீராக்குவதோடு, குடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும். மேலும், மலச்சிக்கலில் இருந்து விடுவிக்கும். பச்சை பட்டாணி- இதில் டயட்டரி நார்ச்சத்து வளமான அளவ-ில் உள்ளது. இதை உணவில் அதிகம் சேர்ப்பதன் மூலம், மலச்சிக்கல் தடுக்கப்படுவதோடு, நல்ல குடல் பாக்டீரியாக்களின் அளவுகளும் அதிகரிக்கும்.

**முட்டைக்கோஸ்-** முட்டைக்கோஸில் கரையக்கூடிய நார்ச்சத்து அதிகமாக உள்ளதால், இது செரிமான மண்டலத்தின் செயல்பாட்டை சிறப்பாக்கும்.

---

## செய்திக்குறிப்பு:-

1- அமெரிக்க ஜனாதிபதியின் முடிவால் உலக சுகாதார நிறுவனத்திலிருந்து (WHO) அந்தநாடு வெளியேறியுள்ளது.

2- இந்தியரில் பாம்புக்கடியால் வருடாவருடம் 58.000 பேர்வரை உயிரிழப்பு குளோபல் நியூஸ் தாபனம் அறிவித்துள்ளது.

# லக்ஸம்பேர்க் நாட்டில் பெண்கள்!..



ஆண்களை விட பெண்கள் அதிக சம்பளம் பெறும் ஒரே நாடு - எது தெரியுமா? உலக அளவில் பெண்கள், ஆண்கள் பெறும் வருமானத்தை விட சுமார் 20 சதவீதம் குறைவாகவே சம்பாதித்து வருகின்றனர்.

வருமானம் யூரோஸ்டாட் தரவுகள் கூறுவதன்படி, ஆண்களை விட பெண்கள் அதிக ஊதியம் பெறும் ஒரே நாடு லக்சம்பேர்க்தான். இது மகிழ்ச்சியான நாடுகளில் ஒன்றாகவும் இருந்து வருகிறது.

இங்கு பெண்கள் ஆண்களை விட சுமார் 0.7 சதவீதம் அதிகமாகவே சம்பாதிக்கிறார்கள். பாலின சமத்துவத்தை உறுதி செய்வதற்காக இந்த நாடு பல வலுவான சட்டங்களையும் தெளிவான விதிமுறைகளையும் கொண்டுள்ளது.

பெண்களுக்கு முதலிடம்..

எந்த நிறுவனம் தகுந்த காரணமின்றி ஆண் - பெண் ஊழியர்களுக்கு வேறு விதமாக சம்பளம் வழங்கினால், அதற்கு பெரிய அளவில் அபராதம் விதிக்கப்படும். இதனால் நிறுவனங்கள் பாலின வேறுபாடின்றி ஒரே வேலைக்கு ஒரே மாதிரி ஊதியம் வழங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

பெற்றோர் விடுப்பு மற்றும் குழந்தைகளை பராமரிக்கும் தொடர்பான அனைத்து நலன்களிலும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம உரிமைகளை வழங்கியுள்ளது.

ஆண்களும் குழந்தைகளை கவனிப்பதற்காக விடுப்பு எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளதால், பெண்கள் மட்டுமே குடும்பப் பொறுப்புக்காக வேலை-யை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை.

# மங்கையுராய் பிறந்திட நல்ல மாதவம் செய்திட வேண்டும்!

1789 ஆம் ஆண்டில் பிரெஞ்சுப் புரட்சியின் போது சமத்துவம், சுதந்திரத்துவம், வாக்குரிமை ஆகிய மூன்றையும் வலியுறுத்தி பாரிஸ் நகரில் பெண்கள் போராடத் தொடங்கியது தான் மகளிர் நாள் கொண்டாடப்படுவதற்கான தொடக்கம் ஆகும். அதன் பின் உலகம் முழுவதும் உள்ள மகளிர் தங்களின் கோரிக்கைக்காக குரல் கொடுத்த நிலையில் 1911 ஆம் ஆண்டில் தான் சர்வதேச மகளிர் நாளை ஐ.நா. அமைப்பு முறைப்படி அறிவித்தது. அதன்படியே மகளிர் தினம் மார்ச் மாதம் 8 ஆம் தேதி பின்பற்றப்பட்டு வருகிறது.

காலங்காலமாக பெண்களை உச்சத்தில் வைக்கிறேன் என்று அவர்களின் சுதந்திரத்தைப் பறித்துக்கொண்டு இருக்கிறது, நம் சமூகம்! சுருங்கச் சொல்ல வேண்டுமென்றால் தங்கம் என்று கூறி பெண்களை மதிப்பின் உச்சத்தில் வைத்து வைப்பார்கள் அதன்பிறகு அம்மதிப்பு குறையக்கூடாது என்பதற்காக அவர்களை அடக்க, ஒடுக்க முயற்சிகள் மேலெழும். மேலும், பெண்களின் நலனுக்காக மதிப்பிற்காக செய்கிறேன் என்று ஒரு பாதை யை இவ்வுலகம் பெண்களுக்கு வகுக்க, அப்பாதையானது பெண்களுக்கு அடிமைத்தனத்தையும் பாதை வகுத்தவர்களுக்கு மேன்மைத்தனத்தையும் அளிப்பதாகவே அமைந்துவிடுகிறது. சக உயிர் என்று நினைத்தாலே, இணையா ன உயிர் என்று நினைத்தாலே வாழ்வு சிறக்கும் என்பது ஆதிக்கருத்து.


மகளிர் தினம் என்பது வெறுமனே ஒரு சிறப்பான நாள் என்று கடந்துப் போகக்கூடிய நாள் இல்லை. இந்நாள், ஒவ்வொரு வருடமும் சென்ற வருடத்தில் இருந்த பெண்களின் நிலையில் தற்போது முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்றும் அடைந்திருந்தால் அடுத்த கட்டம் என்னவென்றும், அடையவில்லை என்றால் ஏன் அடையவில்லை என்பதை யோசித்து அதற்கேற்ப திட்டங்களை வகுக்க அனைவரையும் குறிப்பாக அரசை யோசிக்க செய்யக்கூடிய நாள். இன்றைய நாளில் மகளிரை போற்றுதல் எவ்வளவு நிகழ்கிறதோ அதே அளவு அவர்களை சக உயிராக மதித்தலும் நிகழ்தல் வேண்டும்.

................................................................................................................................................

**06 ம் பக்க விடை...**

**படத்தைக் கண்டுபிடியுங்கள்**

**போட்டி முடிவு..**





# இவர் யார் தெரியுமா?..

இவர்தான் இலங்கையின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் (Saroja Savithri Paulraj).

இவர் தமிழ்ப்பெண். சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாத்தறைத் தேர்தல் தொகுதியில் நின்று, 148,379 வாக்குகள் பெற்று, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் ஆனவர். எதற்கெடுத்தாலும் ஜேவிபி முன்பு இனவாதக் கட்சி. எப்படி மாறுவார்கள் என்று தேர்தல் காலங்களில் பிரச்சாரம் செய்பவர்கள் அப்போது இப்பெண்மணியையும் நினைத்துக்கொள்ளுங்கள்.

சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும், தெற்கு மாகாணத்திலுள்ள மாத்தறைப் பகுதியிலிருந்து, அதுவும் மகிந்த ராஜபக்சாவின் கோட்டையிலிருந்து தமிழ்பெண் ஒருவரைச் சிங்கள மக்கள் தம் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள் என்றால், அவரைப் பெண்கள் , குழந்தைகள் நலத்துறை அமைச்சராக தேசிய மக்கள் சக்தி ஆக்கியிருக்கின்றதென்றால், ஜேவிபி மட்டும் மாறவில்லை., சிங்கள மக்களும் மாறியிருக்கின்றார்கள். ஆனால் தோற்ற இனவாத அரசியல்வாதிகள் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு இனவாதத்தைத் தூண்டி, மீண்டும் ஆட்சிக்கட்டிலேறத் துடிக்கின்றார்கள். இந்நிலை மீண்டும் வந்தால் நாட்டு மக்கள் அனைவருக்கும் எதிர்காலம் நன்றாகவிருக்கப்போவதில்லை.

நாட்டு மக்கள் அனைவரும் இந்தப் புதிய மாற்றத்துக்கு ஊறு விளைவிக்காத வகையில் , தம் பிரச்சனைகளை ஆரோக்கியமானவழியில் தீர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். தமிழ்பெண் ஒருவரைத் தம் தேர்தல் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுத்த சிங்கள மக்களுக்கும், அவரை நிறுத்தியதுடன் அமைச்சர் பதவியையும் வழங்கிய தேசிய மக்கள் கட்சிக்கும் வாழ்த்துகள். இவரது தெரிவு இனவாதத்துக்கு எதிரான தெரிவு. இந்நிலை நாட்டில் தொடரட்டும். அதுவே நல்லது...





**6.2.2026ல் இலங்கைப் பிரதமர் ஹரிணியுடன்**

**சுவீஸ் நாட்டின் துணைத்தலைவர் பரா ரூமி**

# சுவிட்சர்லாந்து தேசிய கவுன்சிலின் இரண்டாவது துணைத் தலைவராக இலங்கைப் பெண்..

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட இலங்கையைப் சுவிட்சர்லாந்து தேசிய பேரவையின் 2ஆவது துணைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி அன்று கொழும்பில் பிறந்த இவர், தனது 6 ஆவது வயதில் பெற்றோருடன் சுவிட்சர்லாந்துக்கு குடிபெயர்ந்து, தாதியர் சேவையில் பட்டமும் பெற்றுள்ளார்.

2021 ஆம் ஆண்டு (Solothurn) மாநில கண்டோனுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். 2023 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் சுவிட்சர்லாந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவான முதல் இலங்கை வம்சாவளி நபர் என்ற பெருமையைப் பெற்றார்.

எனது புதிய பதவியில் தேசிய கவுன்சிலின் துணைத் தலைவராக நான் ஒவ்வொரு நாளும் புதிய அறிவுகளைப் பெறுகிறேன். ஜனாதிபதி இல்லாத நிலையில் 2 முறை கவுன்சிலை வழிநடத்த எனக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஒரு கடினமான மற்றும் பொறுப்பான பணி. இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது எனக் பரா ரூமி குறிப்பிட்டுள்ளார்.

34 வயதான ரூமி ஒரு செவிலியர் மற்றும் மருத்துவ நிபுணர் மற்றும் சமூக ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராக உள்ளார்.அவரது தந்தை முகமது ”ரூமி” மொஹிதீன் மற்றும் அவரது தாயார் ,ஸ்.ஃ.பியா ரூமி. ஆரம்பத்தில், அவர் கொழும்பில் உள்ள பிஷப் கல்லூரியில் கல்வி பயின்றார்.

1998 ஆம் ஆண்டு, 6 வயதில், அவர் தனது குடும்பத்துடன் சுவிட்சர்லாந்திற்கு குடிபெயர்ந்தார்.2021 முதல், ரூமி கிரென்சென் நகரத்திற்கான நகராட்சி கவுன்சிலராக இருந்து வருகிறார். அவர் இயற்கைமயமாக்கல் ஆணையத்தின் உறுப்பினராகவும், ஸ்பைடெக்ஸ் கிரென்சென் வாரிய உறுப்பினராகவும் உள்ளார்.

அறக்கட்டளையின் அறக்கட்டளை வாரியத்தின் உறுப்பினராகவும் அவர் பணியாற்றுகிறார். ரூமி சோலோதர்ன் மாகாணத்தின் SP குடியேறிகள் அமைப்பின் இணைத் தலைவராகவும் இருந்தார்.பாராளுமன்றத்தில் அவரது முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகள் சுகாதாரக் கொள்கை, சமூகக் கொள்கை, வெளியுறவுக் கொள்கை மற்றும் சம வாய்ப்புகள் ஆகியவை அடங்கும்.

டிசம்பர் 2025 இல், ரூமி தேசிய கவுன்சிலின் இரண்டாவது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், 2027 இல் அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால், 2028 இல் அவர் தேசிய கவுன்சிலின் தலைவராக ஆவதற்கு வழிவகுத்தார்.

..............................................................................................................................................



## இலங்கை வரலாற்றில் முதல் முறை பேருந்துகளில் பெண் நடத்துனர்கள்!...

இலங்கை போக்குவரத்து சபையின் (SLTB) வரலாற்றில் முதல் முறையாக நியமிக்கப்பட்ட பெண் நடத்துனர்கள் 10.02.2026 அன்று உத்தியோகப்பூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

பெண் நடத்துனர்கள் கொட்டாவை, மாகும்புர பன்முக போக்குவரத்து மையத்தில் (MMC) இருந்து தமது பணிகளை ஆரம்பித்தனர். அண்மையில் இலங்கை போக்குவரத்து சபையினால் 19 பெண்கள் நடத்துனர்களாக நியமிக்கப்பட்டனர்.

பெண்கள் இப்பதவிக்கு நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். போக்குவரத்துத் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும், பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுப் போக்குவரத்தில், குறிப்பாக பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் பரந்த முயற்சியின் ஒரு அங்கமாக இந்த நியமனங்கள் பார்க்கப்படுகின்றன.



# இலங்கையின் முதல்பெண் கணக்காய்வாளர்நாயகம்..

இலங்கையின் வரலாற்றில் முதல்ப்பெண் கணக்காய்வாளர் நாயகமாக சமுத்திகா ஜெயரத்னா அவர்கள் கடந்த 05.02.2026 அன்று பதவி ஏற்றுக்கொண்டார். இவர் இலங்கையின் 42வது கணக்காய்வாளர் நாயகம் ஆவார். இலங்கையில் இந்தப் பதவியை வகிக்கும் முதல்ப்பெண்மணி என்ற பெருமையைப் பெறுவதால் இந்த நியமனம் ஒரு வரலாறாகச் சரித்திரத்தில் பதியப்படுகின்றது.

இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் வணிகவியலில் இளங்கலை சிறப்புப் பட்டமும் மற்றும் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் பட்டங்களையும் பெற்றிருக்கின்றார். இலங்கை அரச கணக்காய்வாளர் நாயகமாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். இந்த நியமனத்தை அரசியமைப்புப் பேரவை ஒருமனதாக ஏற்றுக்கொண்டு அங்கீகாரம் வழங்கியுள்ளது. பதவி ஏற்றுள்ள முதல்ப் பெண்மணியை வாழ்த்துவோம்!...



# அவுஸ்திரேலியாவில் இலங்கைப் பெண்ணின் சாதனை..

அவுஸ்திரேலியாவில் அறிவியல் மற்றும் ஆராய்ச்சித்துறையில் ஈழத்தமிழர்களுக்குப் பெருமைசேர்த்த கலாநிதி மேகலா பாலமுரளி அவர்கள் ஒரு மைல்கல் சாதனை படைத்துள்ளார். 2013 முதல் சிட்னி பல்கலைக் கழகத்தில் பணியாற்றிவரும் இவர் நவீன தொழில் நுட்ப உலகின் பகுப்பாய்வு, கணனி, செயற்கை நுண்ணறிவு நுட்பங்களை திறம்பட நிர்வகிப்பது என்பதில் நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை ஆரம்பித்து கணனி அறிவியலில் இளங்கலைப் பட்டத்தையும் அவுஸ்திரேலியா நியூ சவுத் வேல்9 பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்தையும் நிறைவு செய்திருக்கிறார். இந்த உயரத்தை எட்டியுள்ள இவர் உலகெங்கும் வாழும் தமிழ்ச் சமூகத்துக்கு உலக அரங்கில் மிகப்பெரும் ஊக்கமளிக்கும் செய்தியாகும். கலாநிதி மேகலா அவர்கள் மேலும் சாதனைகள் படைக்கப் பாராட்டுகள்..



# இங்கிலாந்து வரலாற்றில் முதல் முறை பெண்ணுக்கு பேராயர் பதவி....

இங்கிலாந்து திருச்சபையை வழிநடத்தும் பொறுப்பான கேன்டர்பரி பேராயர் பதவி, வரலாற்றில் முதல் முறையாக ஒரு பெண்ணுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

1,400 ஆண்டுகளில் இந்தப் பதவிக்கு தகுதி பெற்ற முதல் பெண் 63 வயதான பிஷப் சாரா முலாலே (dame sarah mullally) ஆவார்.

பிரிட்டிஷ் மன்னருக்கு முடிசூட்டுவது போன்ற முக்கியமான கடமைகளைச் செய்யும் கேன்டர்பரி பேராயராக ஒரு பெண் நியமிக்கப்பட்டது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தருண-மாகக் கருதப்படுகிறது.

கேன்டர்பரி பேராயர் உலகளாவிய ஆங்கிலிகன் கத்தோலிக்கர்களின் ஆன்மீகத் தலைவராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஸ்பெயின் நாட்டின் இளவரசி அரியணை ஏறும் 20 வயது இளவரசி..

ஸ்பெயின் நாட்டில் இளவரசி லி-யோனர் தனது 20வது வயதில் நாட்டின் அரியணையில் அமரத் தயாராகி வருகிறார்..இவர் பதவி ஏற்கும்போது கடந்த 150 ஆண்டுகளின் பின் ஸ்பெயினின் முதல் பெண் ஆட்சியாளர் என்ற பெருமையைப் பெறவுள்ளார்.

இளவரசி லியோனர் தற்போதய மன்னர் 6ம் பிலிப் மற்றும் ராணி லெட்டினிசியா ஆகியோரின் மூத்த மகளாவர். வருங்கால ராணி யாக நாட்டின் முப்படைகளுக்கும் தலைமைதாங்கும் வகையில் 3 ஆண்டுகள் இராணுவப் பயிற்சியை மேற்கொண்டு வருகிறார்.

இளவரசி லியோனர் அட்லாண்டிக் கல்லூரியில் இளங்களைப் பட்டப்படிப்பை முடித்துள்ளார். அத்துடன் பல மொழிகளில் பேசும் திறன்கொண்டவர். இளவரசி ஸ்பெயின் நாட்டு மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கிறார்.

ஸ்பெயினை இறுதியாக ஆட்சிசெய்த பெண்மணி இஸபெல்லா1868ல் ஆட்சிபுரிந்திருக்கிறார்.

## கோடிகளில் புரளும் தென்னிந்திய திரைப்பட நடிகைகள்.. 31.12.2025ல்..

( இந்தியாவின் ”செலியரிட்டி-100”என்ற ஊடகத்தின் கணிப்பு )

01- நயன்தாரா
- 185 - 200 கோடி இந்திய ரூபா

02- அனுஷ்கா ஷெட்டி
- 120- 130

03- தமன்னா
- 100 - 110

04- சமந்தா
- 90 - 100

05- த்ரிஷா
- 80 - 85

06- ராஷ்மிகா
- 60 - 65

07- சாய்பல்லவி
- 45 - 50

## தென்னிந்திய தமிழ் சினிமா வில் தற்போது 74 க்கும் மேற்பட்ட சின்னத்திரை நாடகங்கள் வெளியாகி வருகின்றன. அவற்றின் கதை களைப் பார்த்தால்...

12- நாடகங்கள் மனைவி இருந்தும் மைத்துனி மீது ஆசைகொள்வது..

18- நாடகங்கள் மாமியாரைக் கொல்வதற்குச் சதிசெய்தல்

20- மனைவி இருந்தும் அடுத்தவன் பெண்டாட்டி மீது ஆசை கொள்வது.

24- நாடகங்கள் அடுத்தவன் குடும்பத்தைக் கெடுப்பது..

அனைத்தும் சமூகத்துக்குக் கேடு விளைவிப்பதாகும்.. இதைத்தான் விழுந்து..விழுந்து இரவு பகலாகப் பார்த்து ரசித்து நமது மனநிலை பாதிப்படைவது மாத்திரமல்ல.. வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றோம்...






## யாழ் பல்கலைக் கழக மாணவி -யின் புதிய சாதனை..

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 40வது வருட பட்டமளிப்பு விழாவில் மருத்துவ பீடத்தில் கல்வி கற்ற மாணவி நற்குணம் அபிராமி ஒரே நேரத்தில் 8 பதக்கங்களைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறார்.

யாழ் பல்கலைக் கழக வரலாற்றில் மருத்துவ பீடத்திலிருந்து ஒரு மாணவர் இப்பதக்கங்களை ஒரே நேரத்தில் பெறுவது அபூர்வம். இதுதான் முதல்த்தடவையாகும். செல்வி அபி ராமி கல்வியில் மேலும் உயர்ந்து பல சாதனைகளைப் படைக்க நாமும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இன்னொரு மாணவியும் முகாமைத்துவ வர்த்தகப் பிரிவில் 7 பதக்கங்களைப் பெற்றிருக்கிறார். சாதனைப் பெண் மணிகளை வாழ்த்துகின்றோம்!..



# கோடிக்கு மகா ராணி...

41 வயதான பாடகி ஸ்ரேயா கோஷலின் சொத்து மதிப்பு இவ்வளவா? ஸ்ரேயா கோஷல்இந்திய சினிமாவில் டாப் பின்னணி பாடகியாக திகழ்ந்து வரும் பாடகி ஸ்ரேயா கோஷல், ஒரு பாடலுக்கு பல கோடி சம்பளமாக பெற்று அதிக சம்பளம் வாங்கும் பாடகியாக திகழ்ந்து வருகிறார்.

சினிமா பாடல்கள் பாடுவதை தாண்டி இசைக் கச்சேரிகளில் அதிகம் பாடி வருகிறார். ஸ்ரேயா கோஷல் Live In Concert சென்னையில் நடத்தி முடித்து நல்ல வரவேற்பை பெற்றார். சொத்து மதிப்பு 41 வயதை எட்டியிருக்கும் ஸ்ரேயா கோஷல் ஒரு படத்திற்கு பல கோடி சம்பளமாக பெற்று வருகிறார். அப்படி சம்பாதித்து அவர் சேர்த்து வைத்து சொத்து மதிப்பு சுமார் ரூ. 185 கோடிக்கும் மேல் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. சாதாரணமாக ஒரு பாடலுக்கு மட்டுமே 25 லட்சம் சம்பளமாக பெற்று வருகிறாராம் ஸ்ரேயா கோஷல்....

# இந்தியாவின் முதல் பெண்கள்..

01- முதல் பிரதமர் - இந்திரா காந்தி
02- முதல் ஜனாதிபதி - பிரதீபா பட்டேல்
03- முதல் ஆளுநர் - சரோஜினி நாயுடு (உ.பி)
04- முதல் மத்திய அமைச்சர் - ராஜ்குமாரி அம்ரித் கௌர்
05- முதல் முதலமைச்சர் - சுசேதா கிருபாளினி (உ.பி)
06- முதல் பாராளுமன்ற சபாநாயகர் - மீரா குமாரி
07- முதல் ஐ.ஏ.எஸ் அதிகாரி - அன்னா ஜார்ஜ் மல்கோத்ரா
08- முதல் ஐ.பி.ஏஸ் அதிகாரி - கிரண்பேடி
09- முதல் வெளிநாட்டுத் தூதுவர் - விஜயலட்சுமி பண்டிட்
10- முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி - பாத்திமா பீவி
11- முதல் உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி - லீலா சேத்
12- முதல் மருத்துவர் - ஆனந்தபாய் ஜோஷி
13- முதல் துணைவேந்தர் - ஹன்சா மேத்தா
14- முதல் விமானப்படை பைலட் - அனிதா கௌர்
15- முதல் விண்வெளி வீரர் - கல்பனா சால்வா

# இங்கிலாந்தில் தொழிற்கட்சி வேட்பாளராகத் தெரிவான தமிழ்ப்பெண்மணி




2026 மே மாதம் இங்கிலாந்தின் - மெர்டன் அபே நகர சபையின் நடைபெறவுள்ள தேர்தலின் தொழிலாளர் கட்சியின் கவுன்ஸிலராகப் போட்டியிட இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இளம் பெண்மணி செல்வி ஷாஜகி ஜெயவீரசிங்கம் அவர்களை பிரதான கட்சியான தொழிற்கட்சி தெரிவு செய்துள்ளது.

இவர் லண்டன் குயீன்மேரி பல்கலைக் கழகத்தில் அரசியல், அறிவியல் மற்றும் வணிக மேலாண்மைத்தறையில் இளங்கலைப் பட்டம் பெற்றார். லண்டன் SOAS பல்கலைக் கழகத்தில் பொருளாதார கொள்கையில் முதுகலைப் பட்டததையும் பெற்றிருப்பதுடன் தற்போது நகர சிற்றி வங்கியின் நிதித்துறையில் பணிபுரிகின்றார்.

லண்டனில் வசித்துவரும் ஜெயக்கொடி -லலிதா தம்பதிகளின் மூத்த புதல்வியான இவரின் பெற்றோர் தென்மராட்சியின் கைதடி-நாவற்குழியைப் (வேலம்பராய்) பூர்வீகமாகக் கொண்டவராவர். கல்வி என்னும் ஆயுதத்தைக் கையில் எடுத்து விடாமுயற்சியால் தன்னைத்தானே செதுக்கி வெற்றி கண்டிருக்கிறார். தற்போது இங்கிலாந்தின் ஆட்சியிலிருக்கும் தொழிற்கட்சியின் ஒருகவுன்ஸிலர் வேட்பாளாராக சவுத் விம்பிள்டனில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளார். செல்வி வெற்றி பெற்று தமிழினத்துக்குப் புகழ் சேர்க்க வாழ்த்துவோம்!..

## வாசகர் கடிதம்..

235 வது இதழ் மிகவும் நன்றாக இருக்கின்றது. அதன் உள்ளடக்கம் மிகவும் அருமை , காரணம் நிறைய பயனுள்ளவிசயங்கள் அறிவில் சிந்தனைக்குரியது. நாட்டு நடப்புகள் இன்றைய உலகம் கணிணி போன்றவை பற்றி தெரிந்து கொள்ளமுடியுது. தெரிந்து இருக்க வேண்டியது, தவிர்க்க வேண்டியது போன்ற விஷயங்கள் உள்ளன. அப்போ நாமும் நினைத்துப் பார்க்கலாம். குறுக்கெழுத்துப்போட்டி,பழமொழி, கவிதைகள், விமரசனம் எனப் பல்சுவை விருந்தாக இருக்கிறது. அதனால் இந்த முறைபுதுப் பொலிவு பெற்றதோ? இப்படிஎமக்கு ரசனை, பயன் தரக்கூடிய விஷயங்கள் தாங்கி வரும் என்று புத்தகத்தை வாசித்தால் தெரியும். எனவே மண் சஞ்சிகையில் இன்னும் இன்னும் நிறைவான சுவாரஸியமான தகவலுடனும் நடக்கும் யதார்த்தத்தைஎதிர்பார்க்கலாம்.

**வாசகி கெங்கா ஸ்ரான்லி - யேர்மனி**

**சிறுகதை - 45ம் பக்கத் தொடர்ச்சி..**

ஆயினும்,தன்னைத் தேடிவந்த இரத்த உறவுகளிடம் அவள் மௌனமாகவே அன்பைக் காட்டினாள். கடந்த காலத்தின் உண்மைகளைப் பேசி யார் மனதையும் அவள் நோகடிக்க விரும்பவில்லை. மௌனமாகப் புன்னகைத்து நகர்ந்து செல்வதே மேல் என்று எண்ணினாள். வாழ்க்கையில் அவள் கற்றுக்கொண்ட பாடங்கள் அவளை அந்த அளவுக்குப் பக்குவப்படுத்தியிருந்தன.

நிலைநாட்டும் ஓர் அரசு அதிகாரி. காக்கி உடையில் கம்பீர நடைபோடும் காவல்துறைத் தலைவி! அன்று அவளைத் தூக்கி எறிந்த உறவுகள், இன்று அவளை வரவேற்க ஆயத்தமாக இருக்கிறார்கள். ”எப்போதும் லாப நட்டக் கணக்கு மட்டுமே பார்க்கும் இந்தச் சாமர்த்தியக்கார உறவுகள், தங்களுக்குப் பாரம் வந்துவிடும் என்று எண்ணியபோது பட்டும் படாமல் விலகி ஓடினார்கள். உறவு என்பது இரத்த சம்பந்தம் மட்டும்தானா?

உண்மையான அன்புடன் ஆபத்தில் உதவுபவர்கள் அனைவருமே உறவுகள்தான்!” என அவள் மனம் கணக்குப் போட்டது. ஆயினும்,தன்னைத் தேடிவந்த இரத்த உறவுகளிடம் அவள் மௌனமாகவே அன்பைக் காட்டினாள். கடந்த காலத்தின் உண்மைகளைப் பேசி யார் மனதையும் அவள் நோகடிக்க விரும்பவில்லை. மௌனமாகப் புன்னகைத்து நகர்ந்து செல்வதே மேல் என்று எண்ணினாள். வாழ்க்கையில் அவள் கற்றுக்கொண்ட பாடங்கள் அவளை அந்த அளவுக்குப் பக்குவப்படுத்தியிருந்தது!...

- முற்றும் -

## மகளிர்தின வாழ்த்துகள்!...







உங்கள் வெற்றியை பதியவும், கூட்டத்தில் தனித்து நிற்கவும், யாரிடமிருந்தும் அனுமதி கேட்கத் தேவையில்லை, நீங்கள் சிறந்தவர் என்று உங்களுக்கே தெரியும், மகளிர் தின வாழ்த்துகள் இந்த நாள் உங்களுக்கு நிறைய வாய்ப்புகளையும் பாராட்டுகளையும் தரட்டும். இனிய மகளிர் தின வாழ்த்துகள்! உங்கள் நம்பிக்கை பெருகட்டும், உங்கள் வசீகரம் மகிமையில் ஒளிரட்டும்! இனிய மகளிர் தின வாழ்த்துக்கள்!எப்போதும் வழித்துணையாக உடன் வரும் உங்அன்பை, அற்பணிப்பை இன்று நினைத்து பெருமை கொள்கிறோம், இனிய மகளிர் தின வாழ்த்துக்கள்!

இந்த மகளிர் தினத்தில், வலிமையான, இரக்கமுள்ள, கடின உழைப்பாளி என்ற வகையில் உங்கள் சிறந்த சாதனைகளைப் பாராட்ட நேரம் ஒதுக்க வேண்டியது என் கடமை. இனிய மகளிர் தின வாழ்த்துகள்! ஒரு பெண் திமிராக இருப்பதற்கு அவளின் ஒழுக்கமும், நேர்மையான அன்பான குண-முமே காரணம்! இனிய மகளிர் தின வாழ்த்துகள்!பெண்கள் மெழுகுவர்த்தி போன்றவர்கள் உருகவும் தெரியும், உருக்கவும் தெரியும்! இனிய மகளிர் தின வாழ்த்துகள் இந்த உலகில் நிபந்தனையற்ற அன்பையும், பாசத்தையும் பரப்பும் அனைத்து பெண்களுக்கும் மகளிர் தின வாழ்த்துகள் பெண்கள் இல்லாத உலகில் அன்பு நிலைத்திருப்பதில்லை! அன்பு இல்லா உலகில் மனிதன் வாழ்ந்திருப்பதில்லை!!!

# சிறீலங்காவில் டித்வா புயல், மழை, வெள்ளம், மண்சரிவு அனர்த்தம் - 2025

- 2004 சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட அனர்த்தத்தைவிட மிக மோசமான டித்வா புயல் எனக்கணிப்பிடப்பட்ட இந்த அனர்த்தத்தால் 95 வீதம் நாட்டின் உட்கட்டமைப்புகள் சேதமடைந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

- மலையகப் பகுதிகளில் 34 வீதமான காடுகள் மற்றும் இயற்கை வளச்சூழல் அழிந்துள்ளதாகச் சுற்றாடல் அமைச்சு தெரிவித்தது.

- Rebilding Srilanka இலங்கையின் மறுசீரமைப்பு நிதியத்திற்கு 47 வெளிநாடுகள் மற்றும் தனவந்தர்கள், பொதுமக்கள் அன்பளிப்பாக 8.5 பில்லியன் ரூபா கிடைத்ததாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

- அரச புள்ளி விபரங்களின்படி இந்த அனர்த்தங்களால் 649 பேர் பலி. 173 பேர் காணாமல் போயுள்ளனர். 2.199 குடும்பங்களைச் சேர்ந்த 6.680 பேர் தொடர்ந்தும் 85 தற்காலிக தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 48.350 குடும்பங்களைச் சேர்ந்த 1.65.884 பேர் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்து படிப்படியாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவருவதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்தது.

- பேரிடரின் வீடுகள் துப்பரவுப் பணிகளுக்காக 25.000-00 ரூபாவீதம் 4.34.375 வீடுகள் அடையாளம் காணப்பட்டு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. வீடுகள் பெரும் சேதம் ஏற்பட்ட 1.63.509 குடும்பங்களுக்குத் தலா 50.000-00 ரூபா வழங்கப்பட்டதாக அரச அறிக்கை அறிவித்தது.

- இந்தப் பேரிடரால் பல பாலங்கள் பாதிக்கப்பட்டது. மீழ்கட்டுமானப் பணிகளுக்காக இந்திய அரசு மேலும் 10 பாலங்களை வழங்கியுள்ளது.

- பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு திறைசேரியிலிருந்து 15.000-00 ரூபா, ஜனாதிபதி நிதியத்திலிருந்து 10.000-00 ரூபா மொத்தம் 25.000-00 ரூபா வழங்கப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். இதற்காக 192 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

- நாட்டில் ஏற்பட்ட இந்தப் பேரிடரால் தாய் தந்தையரை இழந்த 103 சிறுவர்கள் தற்போது அரச பராமரிப்பு இல்லங்களில் வாழ்கிறார்கள் என சிறுவர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

- இந்தப் பேரவலத்தின் நிவாரண உதவும் திட்டத்துக்கு யேர்மனி, அமெரிக்கா, பிரித்தானியா, யப்பான், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உட்படப் பல நாடுகள் மற்றும் சர்வதேச உதவி நிறுவனங்களின் உதவிகளாக 22.4 மில்லியன் டொலர் கிடைத்துள்ளது. இதனால் 25 மாவட்டங்களைச் சேர்ந்த 2.16.000 பேர் பயனடைந்துள்ளனர்.

- பேரனர்த்தத்தால் நாடு முழுவதும் 8 லட்சம் மாணவர்களின் கல்வி பாதிப்பு. 1.862 பாடசாலைகள் பெரும் சேதம். 1.382 பாடசாலைகளும் 2.720 முன்பள்ளிகளும் திருத்தப்பட வேண்டும். தற்போது தற்காலிகமான 500 வரையிலான பாடசாலைகளும் இயங்குகின்றன என கல்வி அமைச்சு அறிவித்தது.

18

- இந்தப் பெரும் அனர்த்தத்தினால் 1 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி வீழ்ச்சி. இதனால் சர்வதேச சந்தையில் இலங்கைத் தேயிலை விற்பனைக்கு இழப்பு. இதனால் நாட்டின் பொருளாதார வர்த்தகத்தில் வீழ்ச்சி.

- மழை வெள்ளம் மண் சரிவால் 20 வீதமான விவசாய நிலங்கள் அழிவுற்றதாகவும் இதனால் விவசாயப் பகுதி பெரும் நட்டத்தைச் சந்தித்திருப்பதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்தது.

- இதனால் பாதிக்கப்பட்ட ஆடு, மாடு, கோழிப் பண்ணைகளுக்கு 3.2 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கு உலக வங்கியின் உதவியாக 2.5 பில்லியன் ரூபா நிதி உதவி கிடைத்துள்ளது.

- நாட்டில் ஏற்பட்ட அனர்த்த உதவிகளுக்காக மியன்மார் நாடு 500 மெட்ரிக் தொன் அரிசியை நன்கொடையாக வழங்கியுள்ளது..

## இலங்கையின் சுகாதாரச் செய்திகள் சில..

- 23.01.2026- கடந்த ஆண்டில் (2025) 1.282 தொழுநோயளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள். இதில் 123பேர் 15 வயதிற்குட்பட்டவர்கள் என தொழுநோய் தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

- 25.01.2026 நாட்டின் சுகாதார மேம்பாட்டுக்காக 21 மாவட்டங்களில் 42 ஆரோக்கிய மேம்பாட்டு மையங்களை அரசு திறந்து வைத்துள்ளது.

- 27.01.2026- இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2025 ஜனவரியில் 4.970 பேர் அடையாளம். 2026 ஜனவரியில் 6.521 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில்தான் மிக அதிகமானோர் 1.627 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

- 29.01.2026- நாட்டிலுள்ள 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களில் 30 வீதம் பேருக்கு மனநலம் பாதிப்பு என அங்கொடை வைத்தியசாலை நிபுணர் தெரிவித்திருக்கிறார். பிள்ளைகளாலும் குடும்ப உறவுகளாலும் புறக்கணிப்பு வீதம் அதிகரிப்பால் வயோதிபர்கள் இந்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

- 31.01.2026- புகையிலை, மதுபானம் பாவனையால் வருடாந்தம் 22.000 பேர் உயிரிழப்பு. இந்த நோயாளிகளின் மருத்துவச் செலவாக வருடம் 22.500 கோடி ரூபா அரசுக்கு செலவாகின்றது என தேசிய சுகாதார சபை அறிவித்துள்ளது.

- 05-02-2026- இலங்கையில் புற்றுநோய் அதிகரிப்பு. நாளொன்றுக்கு 100 பேர்வரை அடையாளம். தினமும் சராசரியாக 40 பேர்வரை இறக்கிறார்கள் வருடாந்தம் 19.000 - 20.000 வரை இறக்கிறார்கள் என புற்றுநோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

- 08.02.2026- கடந்த ஆண்டில் 79 சிறுவர்கள் கர்ப்பம் தரித்திருக்கிறார்கள். 9 சிறுவர்கள் திருமணம் செய்திருக்கிறார்கள். சிறுவர்கள் தொடர்பாக 10.455 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சிறுவர் துன்புறுத்தல்கள் 545 முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகங்கள் 231 சம்பவங்களும் பதிவாகியிருப்பதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.



## உலகில் அதிக செல்வாக்கு மிக்க குடும்பம்...

மூன்றாம் சார்லஸ் மன்னர் தலைமையிலான பிரிட்டிஷ் அரச குடும்பம்தான் உலகின் தோராயமாக 16% நிலப்பரப்பைத் தன்வசம் வைத்திருக்கிறார்கள் இவர்களுக்கு பல ஆயிரம் ஏக்கர் பண்ணைகள் நிலங்கள்,காடுகள், நகரங்களில் பல்வேறு வீடுகள் அடங்கிய சொத்துக்கள் மற்றும் கடற்கரைகளும் உள்ளன. அனைத்தும் "தி கிரவுன் எஸ்டேட்" (The Crown Estate) என்ற நிறுவனத்தின் மூலம் உலகளவில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர, பிரிட்டிஸ் அரச குடும்பம் நேரடியாக 250,000 ஏக்கர் நிலத்தை இரண்டு "ராயல் டச்சிகள் மூலம் தனிப்பட்ட முறையில் வைத்திருக்கிறது. மொத்தம் 115,000 ஏக்கர் விவசாய நிலங்கள் மற்றும் காடுகள் உள்ளன. இதுதவிர சில்லறை விற்பனை நிலையங்கள்,

குடியிருப்புகள் மற்றும் அலுவலக இடங்கள் உள்ளிட்ட நகர்ப்புற நிலங்கள் உள்ளன. "டச்சி ஆ.ஃப் லான்காஸ்டர்" என்ற 18,000 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட தனியார் எஸ்டேட்டும் பிரிட்டிஸ் அரச குடும்பத்திற்கு உள்ளது. மத்திய லண்டனில் உள்ள இதன் மதிப்பு சுமார் 654 மில்லியன் பவுண்ட்.

இந்திய மதிப்பில் 7884 கோடியாகும். இது ஆண்டுக்கு சுமார் £20 மில்லியன் வருமானத்தை ஈட்டுகிறது. பிரிட்டிஷ் முடியாட்சியின் உலக-ளாவி ய சொத்துக்களின் ஒட்டுமொத்த மதிப்பு சுமார் $15.6 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.அடுத்தபடியாக, நில உரிமையில் சவுதி அரேபியாவின் மன்னர் அப்துல்லா இரண்டாம் இடத்தில் உள்ளார்.



## தமிழர் தாயகத்தில் ஒரேசூலில் பிறந்த ஐந்து குழந்தைகள்

மட்டக்களப்பில் தாயொருவர் ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகளை சென்ற மாதம் பெற்றடுத்துள்ளார்.அந்த ஐந்து குழந்தைகளும் ஆண் பிள்ளைகள் என தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு கிரான் குளத்தைச் சேர்ந்த தாயொருவரே இவ்வாறு ஐந்து குழந்தைகளையும் நேற்று திங்கட்கிழமை (26) பெற்றெடுத்துள்ளார். குழந்தைகளும் தாயும் நலமுடன் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

.....................................................................................................................................

## இலங்கைத் தகவல்கள்

இலங்கையில் காணப்படும் அரச பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை --10.047, - தேசியபாடசாலைகள் - 396 - மாகாண பாடசாலைகள் - 9.651- கல்வி வலயங்களின் எண்ணிக்கை - 100 - கோட்டக்கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கை - 312 - அதிகளவுபாடசாலைகள் கொண்ட மாகாணம்-மத்தியமாகாணம் (கண்டி)

.....................................................................................................................................

1- ஆசியாவில் முதன் முதல் குதிரை வண்டி மூலம் தபால் சேவையை ஆரம்பித்த நாடு - இலங்கை.
2- இலங்கையில் முதன் முதலாகத்தபால் முத்திரைவெளியிட்டஆண்டு 1857
3- பிரித்தானியர் திருகோணமலைத் துறைமுகத்தைகைப்பற்றியஆண்டு 1795
4- கண்டி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது எப்போது - 1815 மார்ச் 2
5- இலங்கையில் இறுதியாக இடம்பெற்ற குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு எடுக்கப்பட்ட ஆண்டு 15வது 2024ம் ஆண்டு.
6- 2024ம் ஆண்டு தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் மொத்தச் சனத்தொகை- 2.17.81.800
7- 2024ம் ஆண்டு சனத்தொகையில் ஆண்கள் 48.3% பெண்கள் 51.6%
8- 2024ம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின்படி அதிகூடிய சிங்களவர்கள் வாழும் இடம் அம்பாந்தோட்டை மாவட்டம்

# ஜேர்மனியில் அதிக ஊதியம் வழங்கும் பணிகள் எவை?

## 2026ஆம் ஆண்டு நிலவரப்படி, ஜேர்மனியில் அதிக ஊதியம் வழங்கு பணிகள் எவை என பார்க்கலாம்.

ஜேர்மனியில் அதிக ஊதியம் வழங்கும் பணிகளில் முதலிடம் பிடிப்பது, சட்டத்தரணி பணி ஆகும். சட்டத்தரணிகள், சராசரியாக ஆண்டொன்றிற்கு 80,000 யூரோக்கள் ஊதியம் பெறுகிறார்கள். ஒரு யூரோ என்பது, இலங்கை மதிப்பில் 365.54 ரூபாய் ஆகும். (10.02.2026ல்)

அடுத்தபடியாக, அதிக ஊதியம் பெறுவோர், வணிகம் மற்றும் மேலாண்மை துறையில் பணி செய்வோர். அவர்களுடைய சராசரி ஆண்டு வருமானம், 73,000 யூரோக்கள்.

மூன்றாவதாக அதிக ஊதியம் பெறுவோர், மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறையில் பணி செய்வோர். அவர்களுடைய சராசரி ஆண்டு வருமானம், 72,000 யூரோக்கள்.

அதைத்தொடர்ந்து அதிக ஊதியம் பெறுவோர், தகவல் தொழில்நுட்பத்துறையில் பணி செய்வோர். அவர்களுடைய சராசரி ஆண்டு வருமானம், 71,000 யூரோக்கள்.

தகவல் தொழில்நுட்பத்துறையினருக்கு அடுத்தபடியாக அதிக ஊதியம் பெறுவோர், பொறியாளர்கள். அவர்களுடைய சராசரி ஆண்டு வருமானம், 65,000 யூரோக்கள்.

பொறியாளர்களுக்கு அடுத்தபடியாக அதிக ஊதியம் பெறுவோர், கணிதத்துறையில் பணி செய்வோர். அவர்களுடைய சராசரி ஆண்டு வருமானம், 60,000 யூரோக்கள்.

கணிதத்துறையில் பணி செய்வோருக்கு அடுத்தபடியாக, இயற்கை அறி வியல் துறையினர் அதிக ஊதிய பெறுகிறார்கள். அவர்களுடைய சராசரி ஆண்டு வருமானம், 55,000 யூரோக்கள்.

அவர்களைத் தொடர்ந்து, கட்டிட வடிவமைப்புத்துறையில் பணி செய்வோர் அதிக ஊதியம் பெறுகிறார்கள். அவர்களுடைய சராசரி ஆண்டு வருமானம், 50,000 யூரோக்கள்.

# ஒரு பனை மரத்தின் கதை...

-கெங்கா ஸ்ரான்லி - யேர்மனி







பனை மரம் ஒரு கற்பக தரு, அதனுடைய பகுதிகள் அனைத்தும் மனிதா் பிரயோசனைப் படுத்துவர். தலையிலிருந்து வேர் வரையில் உள்ள அனைத்து பாகங்களும் தேவையானவை. குருத்தோலை தோரணம் கட்ட உதவுகின்றது. பனையோலை பச்சையாக மாட்டுக்கு உணவாகும். அதுவே காய்ந்து காவோலையானால் வீடு வேயவும், வேலி அடைக்கவும் பயன்படும்.

காவோலை மட்டை கருக்குமட்டை என்பார் வேலியடைக்க, விறகாக பயன்படுத்துவார். பனை ஈக்கு விளக்குமாறுசெய்ய உதவும் மற்றும் ஓலையி ல் பெட்டி , கடகம், பாய், இப்படி பல பொருட்கள் செய்ய உதவும். பனை மரத்தை சீவி சிலாகை எடுத்து வீட்டிற்கு சீலிங் அடிப்பார்கள். தீராந்தியும் வெட்டி வீட்டிற்கு வளை வைப்பார்கள். சீவிய சிராய்த் துண்டுகள் விறகாக வெட்டி எடுப்பார். பனையிலிருந்து நொங்கு எடுக்கலாம். பனம் பழம் எடுக்கலாம் பழ விதைகளைப் போட்டு பனங்கிழங்கு எடுக்கலாம். பனங்கொட்டையை காயவைத்து ஊமல் கொட்டை என்று எரிக்கப் பயன்படும். பனங்கிழங்கிலிருந்து புழுக்கொடியல், ஒடியல் மா என பல்வேறான வகைகளில் பயன்படும்.

பனையலிருந்து பதநீர் எடுப்பர், அதை கள் ஆகவும் செய்வர். தென்னையிலும் கள் எடுக்கலாம். இந்தக் கள் என்ற சொல் சங்க கால இலக்கியத்திலும் இருக்கிறது எனச் சொல்லப்படுகிறது. எனவே எவ்வளவு பயன் பெற்றாலும் அதை இந்த மனிதர் நன்றியுடன் பார்ப்பதில்லை. ஒருவரைப் பேசும் போது என்ன பனை மரம் மாதிரி வளர்ந்தது தான் மிச்சம் என்று பேசுவார்கள் அதன் மூலம் பெற்ற நன்மைகளை மறந்து, மற்றும் என்ன பனை மரம் போல் நேராக பேசாமல் நிற்கிறது. என்று சொல்லி கொண்டே இருப்பர். இதைக் கேட்ட பனையோ கவலைப் பட்டு நான் இவ்வளவு நன்மை செய்ய ஒரு பாராட்டு இல்லை நல்லதாகச் சொல்லலாமே! என அங்கலாய்க்கும்.

அதற்குத் தெரியாது மனிதர் ஒரு நாளும் திருப்தி அடைவதில்லை என்று அதனால் என்னவோ பாராட்டவும் மாட்டார்கள் இதை உணர்ந்த பனை மரம் நேராக தளராமல் நின்றது, தானாவது நேராக நிற்கிறேன் பார் என்று சொல்வதைப் போல....

# இந்தியப்பயணம்... ஆன்மீக யாத்திரை......

**-கெங்கா ஸ்ரான்லி - யேர்மனி**

இந்தியா போக வேண்டும் கோவில்களைத் தரிசிக்க வேண்டும். என்ற ஆவல் இருந்தது ஆனால் வசதி ஏற்பட வில்லை . ஒரு நாள் மகன் சொன்னார் தான் கூட்டிப் போவதாகச் சரி என்று சொல்லி அவரே பயணச்சீட்டு எடுத்து, அங்கேயும் ஒழுங்கு செய்தார். நாங்கள் இருவரும் யேர்மனி Koln ல் இருந்து Frankfurt க்கு சென்று, அபுதாபியில் இறங்கி 3 மணித்தியாலம் நின்று பின் சென்னை விமான நிலையத்தில் போய் இறங்கினோம்.

அங்கு மகன் ஒழுங்கு செய்தவர் வந்து, எங்களைக் கூட்டிச் சென்று Hotel ல் விட்டார் . நாம் அங்கு தங்கி விட்டு அடுத்த நாள் விமான மூலம் சீரடிக்கு சென்று விட்டோம். அங்கும் இவர்கள் ஒழுங்குசெய்த நபர் எங்களை அழைத்து சென்று Hotel ல் விட்டார் அங்கு reception ல் இருந்தவர் ஒரு தமிழர் அதனால் நல்லதாகப் போய் விட்டது. ஏனெனில் அங்கு இந்தி தான் பேசுவார்கள். நாங்கள் குளித்து உடை மாற்றிக் கொண்டு பாபா கோவிலுக்குச் சென்றோம் .

அங்கும் இந்தி மொழி தான் அப்போது அங்கு கோவிலின் பொறுப்பாளர் வந்தார் அவர் ஆங்கிலம் பேசுவார். அவருடன் மகன் கதைக்க அவர் சொன்னார் இப்பொழுது 8 மணிக்கு பூசை இருக்கிறது, நீங்கள் சீட்டு வாங்கி கொள்ளுங்கள் என்றார். அத்துடன் அடுத்த நாட்காலை தீப ஆர்த்தி இருக்கிறது. அதற்கும் ஒரு ஆளுக்கு 400 ரூபா என்று சொல்லி இரண்டு சீட்டுகள் வாங்கினோம். பின் அவரே எங்களை அழைத்துச் சென்று ஒருஅறையில் இருக்கச் சொன்னார். இப்போ ஒரு பூசை நடக்கிறது அதுமுடிய ஒருவர் வந்து எங்களை கூட்டிச் செல்வார். என்று சொல்லிச் சென்றார்.

எட்டு மணிக்கு இரவு அந்த பூசை அப்போ ஒருவர் வந்து எங்களுடன் இன்னும் வேறு ஆட்களும் இருந்தவர்கள் அவர்களையும் கூட்டிச் சென்றார். அங்கு பிரத்தியேகத் தரிசனம் எங்களுக்கு கிடைத்தது. பாபாவின் பாதச் சுவடுகள் தொட்டு வணங்க முடிந்தது, தரிசனம் முடித்தது அவர் எங்களை வெளியில் கூட்டி வந்து விட்டார்.

நாங்களும் வெளியில் வந்து ஒரு உணவகத்தில் இரவ சாப்பாடு சாப்பிட்டோம். பின் அறைக்குச் சென்றோம். அப்போது அந்தத் தமிழ் கதைக்கும் தம்பி சொன்னார் நீங்கள் எல்லா உணவகத்திலும் சாப்பிடாதீர்கள் என்று சொல்லிவிட்டு இரண்டு உணவகத்தின் பெயரைத் தந்தார், நாமும் நன்றி கூறிவிட்டு அறைக்குச் சென்று விட்டோம்.

# 54 லட்சத்தைத் தாண்டிய அன்பளிப்புகள்-2025ம் ஆண்டில்...

## (54.48.669-33 ரூபா)

### தாயக மக்களுக்கான மனிதநேய உதவிகள்..

### யேர்மனி - மண் சஞ்சிகையினரின் பெரும் கொடை..

யேர்மனியிலிருந்து கடந்த 36 வருடங்களாக வெளிவந்துகொண்டிருக்கும் ”மண்” கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சியையானது கலை, இலக்கிய எழுத்துப் பணிகளுடன் தாயகத்துக்கான மனிதநேயப் பணிகளையும் பல ஆண்டுகளாகத் செய்துவருவதை அனைவரும் அறிவீர்கள்..அந்த வகையி ல் 2025ம் ஆண்டு வாசகர்கள், எழுத்தாளர்கள், மனிதநேயம் மிக்கவர்கள், நலன்விரும்பிகள், மற்றும் நண்பர்களின் மனிதநேய உதவியாக ஐம்பத்தி நான்கு லட்சத்துக்கும் அதிகமான தொகையைத் ( 54.48.669-33 ) தாயகத்துக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம். ( விபரம் கீழே காணலாம் )

மாபெரும் மனிதநேய உதவிகளைப் புரிந்த அத்தனை நல்லுங்களையும் வாழ்த்தி நன்றிதெரிவிக்கின்றோம்.. அனைத்து நிதி உதவ-கிளும் சரி யான முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்றடைய பணியாற்றிய தாயகதின் இல்ல நிர்வாகிகள், பொதுச்சேவையாளர்கள், மதப் பணியாளர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் நன்றிகள்..தொடரும் எமது நற்பணிகளோடு அனைவரும் கரம்தந்து உதவுவீர்களென நம்புகின்றோம்.. எதிர்காலத்திலும் மனிதநேயப்பணிகளை மேற்கொள்ளுவோம். பேருதவிகள் தந்துதவும் அனைவருக்கும் வாழ்த்துகளும் பாராட்டுகளும்!..

### பணம் அனுப்பிய தொகைகளும் விபரங்களும்..

ரூபா-சதம்

04.76.289-44 - பல்கலைக் கழக மாணவர்களுக்கான கொடுப்பனவுகள்.

14.69.441-67 - இல்லங்களில் உதவிபெறும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் வறிய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்டது

18.16.218-26 - இல்லங்களில் உதவிபெறும் மாற்றுத் திறனாளிகள், வறிய குடும்பங்கள், பெண்கள் தலைமைத்துவ குடும்பங்கள், மற்றும் முதியோர் நலத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டது.

16.86.719-96 - 2025 புயல், மழைவெள்ளம், மண்சரிவு அனர்த்த நிவாரணப் பணிகளுக்காக இலங்கையின் 9 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது

**54.48.669-33-மொத்தமாக 2025ம் ஆண்டில் எம்மால் தாயகத்துக்கு அனுப்பப்பட்ட தொகை..**

## மாவட்டங்கள் அடிப்படையில்...

| | ரூபா - சதம் | யூரோ | |
|---|---|---|---|
| (1) | 23.41.222-31 | - 7.140-37 | - முல்லைத்தீவு |
| (2) | 1.50.000-00 | - 451-10 | - கிளிநொச்சி |
| (3) | 32.493-40 | - 100-00 | - யாழ்ப்பாணம் |
| (4) | 7.49.366-34 | - 2.250-74 | - மன்னார் |
| (5) | 6.45.191-49 | - 1.968-10 | - வவுனியா |
| (6) | 3.43.291-27 | - 997-12 | - மட்டக்களப்பு |
| (7) | 5.87.104-52 | - 1.702-59 | - திருகோணமலை |
| (8) | 5.00.000-00 | - 1.431-03 | - நுவரெலியா |
| (9) | 1.00.000-00 | - 283-16 | - கண்டி |
| | 54.48.669-33 | - 16.324-21 | |

**பகுப்பு:-**

முல்லைத்தீவு மாவட்டம்..

ரூபா -சதம் - யூரோ

10.96.847-95 - 3.379-28 - ஒளிரும் வாழ்வு இல்லம் - துணுக்காய்

3.47.277-41 - 1.055-59 - ஒளிரும் வாழ்வு இல்லம் - புதுக்குடியிருப்பு

9.07.096-95 - 2.705-50 - நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்

கிளிநொச்சி மாவட்டம்..

1.50.000-00 - 451-10 - விழிப்புலனற்றோர் இல்லம் - கிளிநொச்சி

யாழ்ப்பாண மாவட்டம்...

32.493-40 - 100-00 - இரட்சனையசேனை சிறுவர் இல்லம் - கைதடி

மன்னார் மாவட்டம்..

2.99.681-19 - 944-85 - சாந்தோம் முதியோர் இல்லம்- மன்னார்

2.49.685-15 - 735-06 - செபமாலை இல்லம் - தலைமன்னார்.

1.00.000-00 - 288-10 - ஹரிதாஸ் வாழ்வுதயம் அமைப்பு - மன்னார்

1.00.000-00 - 282-73 - பிரசைகள் குழு - மன்னார் மாவட்டம்

வவுனியா மாவட்டம்..

3.81.900-22 - 1.200-00 - அன்பகம் சிறுவர் இல்லம் - வவுனியா

2.63.291-27 - 768-10 - அட்சயம் அறக்கட்டளை - வவுனியா

மட்டக்களப்பு மாவட்டம்..

1.63.291-27 - 480-00 - திருஞானசம்பந்தர் குருகுலம் -மட்டக்களப்பு

1.80.000-00 - 517-72 - உதவும்கரங்கள் அமைப்பு - மட்டக்களப்பு

திருகோணமலை மாவட்டம்..

3.27.104-52 - 960-00 - சிறீசண்முகா பெண்கள் இல்லம்-திருகோணமலை

2.00.000.00 - 568-50 - இளைஞர் அமைப்பு - மூதூர்

60.000-00 - 174-09 - இளைஞர் அமைப்பு - திரியாய்- புல்மோட்டை

நுவரெலியா மாவட்டம்..

2.00.000-00 - 571-44 - வேவண்டன் தோட்டம் - நம்பொடை

2.00.000-00 - 572-71 - போகவந்தலாவை தோட்டம் - கொத்மலை

1.00.000-00 - 286-88 - புதியதிருச்சபை தேவாலயம் - ஹற்றன்

கண்டி மாவட்டம்..

1.00.000-00 - 283-16 - கலந்தன்னை தோட்டம் - கலஹா

.................................................................................................................................................

**54.48.669-33 - 16.324-21 - மொத்தம்**

**ரூபா-சதம் - யூரோ**

**ஆசிரியர் - மண் சஞ்சிகை - யேர்மனி - 02.02.2026**











# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1-3 திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு

உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலினிசா (பி.தி 10.04.2014)
செல்வகுமார் சதுமிகா (பி.தி 12.11.2010)
றொனி டிலக்சனா

(பி.தி 28.10.2015)

.............................................................................................................................

4-5 திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - ரமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- மகேஸ்வரன் அர்ச்சனா(பி.தி 19.05.2009)

.............................................................................................................................

6- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சுரேஸ்குமார் மனோறஞ்சனி (30.08.2004)

.............................................................................................................................

7- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சிவகுமார் சிரோமி (பி தி 30.08.2014)

.............................................................................................................................

8-9 திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
அமுதசுரபி அறக்கட்டளை - வவுனியா
உதவி பெறுவோர்..செல்வி சிற்பவானந்தராசா டேன்சிகா பிதி 22.07.2004 செல்வன் வில்வராசா றதீபன் பிதி 04.10.2003

10- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா

உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 ) ..

.................................................................................................................................

11- Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)

.................................................................................................................................

12- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

.................................................................................................................................

13 திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம் - தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - சுரேஸ் சுஜந்தினி (பிதி 23.10.2013)

.................................................................................................................................

14- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நல்லரெட்ணம் துர்க்கா பிதி 25.11.2003

.................................................................................................................................

15- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நிசாந்தன் லதுமிக்கா பிதி 23.02.2015

.................................................................................................................................

16- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg - 480-00 யூரோ
ஞானசம்பந்தர் குருகுலம் - மட்டக்களப்பு
உதவி பெறுபவர் சத்தியசீலன் சாயிரிதன் பிதி 07.06.2010

.................................................................................................................................

17- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim - 2.400-00யூரோ
நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்(1200-00 +1200-00)
உதவி பெறுபவர் இல்லப் பிள்ளைகள் அனைவரும்

-----------------------------------------------------------------------------------------------------------------.

**பொறுப்பெடுத்தவர்கள் 14 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)**

**உதவி பெறுவோர் 16 பிள்ளைகள் + மாங்குளம் நல்லாயன் சிறுவர் இல்லம் (தாயகம் - சிறீலங்கா)**

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-01-2026 + 86-50

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

03. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

05. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு-

06- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

08- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg+120-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

09- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim+600-00
(நல்லாயன் சிறுவர் இல்லம் கல்வி மேம்பாட்டு மாதாந்த உதவி)

------------------

+ 1.300-00+1.300-00

---------------

+ 1.386-50

10- திருமதி இந்திரா மகாலிங்கம் - Werne + 100-00
(தந்தையாரின் நினைவு உதவி)

11- திரு கிறிஸ்ரி அமலதாஸ் - London + 1.110-00
(பிள்ளைகளின் அன்பளிப்பு))

-----------------------------------------------

+ 1.210-00 + 1.210-00

-------------

+ 2.596-50

முற்பக்கப்படி + 2.596-50

**அனுப்பியது...**

ரூபா யூரோ

1) ஒளிரும் இல்லம்"மல்லாவி-துணுக்காய்- 4.00.000-00 -1.105-58
(அமல் - London)

2) நல்லாயன் சிறுவர் இல்லம் -மாங்குளம்-2.15.584-98 - 600-00
(16.02.2026 மேரி + மங்கை கல்வி நிதி உதவி)

3) சாந்தோம் முதியோர் இல்லம் - மன்னார்- 33.763-42- 100-00
(5.2.2026 இந்திரா மகாலிங்கம் தந்தையார் நினைவு)

4) அன்பகம் சிறுவர் இல்லம் வவுனியா - 2.52.062-98- 700-00
(23.10.25 வருடாந்த நிதி உதவி)

---------------.
- 2.505-58- 2.505-58

-----------------
+ 90-92

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.01.2026 - 31.01.2026 - 19-59
01.02.2026 - 28.02.2026 - 18-19.................................... - 37-78

-----------------------
28.02.2026 மீதி கையிருப்பு + 53-14
-------------

**மாதாமாதம், வருடாவருடம் தாயகத்தின் ஆதரவற்ற சிறுவர்கள், மாற்றுத் திறனாளிகள், வறிய மாணவர்களின் உணவு, உடை, கல்வி போன்ற நடவடிக்கைகளுக்கு நிதி உதவி புரிந்துவரும் அன்பு நல்லுள்ளங்கள் அனைவருக்கும் நன்றி கலந்த பாராட்டுகள். உங்கள் மனிதநேய உதவிகள் மேலும் சிறக்க வாழ்த்துக்கள்!..**

**- ஆசிரியர் -**

# அமுதசுரபி

## இந்திராணி மேழிக்குமரன் அறக்கட்டளை நிதியம்

## INDRANI MEZHIKUMARAN TRUST FUND

(AMUTHASURABI)

57/59, 3ம் ஒழுங்கை, வெளிக்குளம், வவுனியா, இலங்கை.
57/59, 3rd LANE, VELIKULAM, VAVUNIYA, SRI LANKA.

பதிவு இல: VA/LA/T/RE.816 தொ.பே.இல +94 77 4248267


15.01.2026

மண் சஞ்சிகை

ஆசிரியர்.வ.சிவராஜா அவர்கள்

டியுஸ்பேர்க்

ஜேர்மனி

பணம் அன்பளிப்பு செய்தமைக்காக நன்றிகள்…

அன்புடையீர்! வணக்கம்.

இலங்கையில் ஏற்பட்ட ரித்வா புயல், வெள்ளப் பாதிப்புகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகவும், ஆதரவற்ற வறுமைக் கோட்டுக்கீழுள்ள வருமானமற்றவர்களுக்கு பொங்கல் பொதி வழங்குவதற்காகவும் 02.12.2025 இல் ஒரு இலட்சம் இலங்கை ரூபாய்கள் அனுப்பி வைத்துள்ளீர்கள்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தக்கதருணத்தில் நீங்கள் அனுப்பிய பண உதவி என்பது பேருதவியாகும். நாம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு கேட்டுக் கொண்டதற்கிணங்க உடனடியாக நீங்கள் அனுப்பிய பண உதவி காலத்தினால் செய்த உதவி ஞாலத்தின் மாணப்பெரிது.

அதுபோல பொங்கல் பொதிகளுக்காக அனுப்பிய பணமும் எமது மக்களுக்கு பெரிதும் உதவியாக இருந்தது. இதனை நீங்கள் வருடாவருடம் உதவி வருகிறீர்கள் என்பதனை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

இவ்வுதவிகளுக்காக உங்களுடன் கைகோர்த்த மண் சஞ்சிகை வாசகர்களுக்கும், ஆதரவாளர்கள், அபிமானிகள், நண்பர்கள் அனைவருக்கும், மண்சஞ்சிகை ஆசிரியர் வ.சிவராஜா அவர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

முனைவர்.மேழிக்குமரன்

தலைவர்

அமுதசுரபி அறக்கட்டளை

13.01.2026

திரு. வைரமுத்து சிவராசா,
பிரதம ஆசிரியர்,
'மண்' கல்வி, கலை, இலக்கிய, சமூகச் சஞ்சிகை,
யேர்மனி.

அன்புடையீர்! வணக்கம்!

**அனர்த்தத்தால் இடர்பட்ட மக்களுக்கான பொங்கல் உதவிப்பணம் கிடைக்கப்பெற்றமையும், நன்றி கூறலும்**

மேற்படி விடயம் தொடர்பாகத் தங்களுக்கு அறியத்தருவது யாதெனில், திருகோணமலை: திரியாய்க் கிராமத்தைச் சேர்ந்த அண்மைய வெள்ள இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் 30 குடும்பங்களுக்கான பொங்கல் பொருட்கள் உள்ளடங்கிய பொதி வழங்குவதற்கான உதவியை திரு.பொ.சிறிஜீவகன் (தலைவர், யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்) அவர்களினூடாகக் கோரியிருந்தேன். அதற்கமைய அக்கோரிக்கையை ஏற்றுத் தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட இலங்கை ரூபாய் 60,000/- பெறுமதியான பணம் 08.01.2025 அன்று எமக்குக் கிடைக்கப்பெற்றது என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வுதவியை நல்கிய தங்களுக்கும், தங்கள் 'மண்' சஞ்சிகை வாசகர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும், அதனை ஏற்பாடு செய்து தந்த திரு.சிறிஜீவகன் அவர்களுக்கும் எமது கிராம மக்கள் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். நீங்கள் அனுப்பிய நிதி முழுவதும் எமது மக்களுக்கே போய்ச்சேர்ந்துள்ளது என்பதையும் நம்பிக்கையுடனும், மகிழ்வன்புடன் கூறிக்கொள்கின்றேன். அப்பொங்கல் பொதிகள் திரியாய் கண்ணகி அம்மன் தேவஸ்தானத்தில் வைத்து 13.01.2026 அன்று ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ கௌதமன் குருக்கள் மற்றும் திரியாய்க் கிராம சமூக செயற்பாட்டாளர் திரு.க.ரவிச்சந்திரன், ஆலய நிர்வாகத் தலைவர் வி. முருகையா அவர்களால் 30 குடும்பங்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன. இப்பொங்கல் பொதிக் கொள்வனவுகளுக்கான கண்கறிக்கைகள், சிட்டைகள் என்பனவும் தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவிக்கின்றேன்.

எனவே இடர்மிகு காலத்தில் வரும் பொங்கல் பண்டிகை நாளில் எம் கிராம மக்களின் வீடுகளில் மகிழ்வை ஏற்படுத்திய தங்களுக்கும் 'மண் சஞ்சிகை' குழுமத்தினருக்கும், வாசகர்களுக்கும் மிகுந்த நன்றியையும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

முருகையா சதீஸ்,
எழுத்தாளர், விரிவுரையாளர், சமூக செயற்பாட்டாளர்.
வட்டாரம் 06, கட்டுக்குளம்.
திரியாய், திருகோணமலை.

**பிரதி:** திரு.சிறிஜீவகன், தலைவர், யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம், யேர்மனி.

# கங்குவேலி கிராம அபிவிருத்தி சங்கம்
# කංකුවේලි ග්‍රාම සංවර්ධන සමිතිය
# KANGUVELI RURAL DEVELOPMENT SOCIETY

கங்குவேலி, மூதூர். Regd No : EP/DRD/TC-11/218C/1014 KANGUVELI, MUTUR.

திரு. வைரமுத்து திவ்யராஜா,
பிரதம ஆசிரியர்,
"மண்" கல்வி, கலை, இலக்கிய சமூக சஞ்சிகை,
ஜேர்மனி.

Date : 2025.12.23

ஐயா !

நன்றி நவிலல்

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது கிராம மக்களுக்கு 230 பாய்களையும், 70 தலையணைகளையும் வழங்கி இவ் இடர்காலத்தில் இவ் உதவியை செய்து தந்தமைக்காக எமது கிராம பொதுமக்கள் சார்பாகவும் கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

S.PARITHARAN
President
Rural Development Society
Kanguveli, Muthur
Regd No. EP/DRD/TC-11/218C/1014

[illegible]

Scanned with CamScanner

# பிரஜைகள் குழு, மன்னார் மாவட்டம்
## CITIZENS' COMMITTEE MANNAR DISTRICT

MCC
MANNAR CITIZENS' COMMITTEE

Tel & Fax No: 023 2222038
*E-mail: mncitcom1@gmail.com*

No: 26,
Thalvupadu Road.
Eluthoor, Mannar,
Sri Lanka.

Date : 07.01.2026

மண் சஞ்சிகை

ஜேர்மனி

அன்பும் பாசமும் நிறைந்த ஊடக உறவுகளுக்கு எங்கள் அனைவரின் இனிய மகிழ்ச்சியும், இறை ஆசீரும், நிறை புத்தாண்டு வாழ்த்துக்களும், செபங்களும்.

கடந்த வருடம் கடைசிப் பகுதியில் (மார்கழி மாதம்) எமது நாட்டில் ஏற்பட்ட மிகப் பயங்கர புயலினாலும், வெள்ளப் பெருக்கினாலும் எங்கள் மக்கள் சந்தித்த அழிவுகளும், இழப்புகளும் நீங்கள் அறிந்தவையே. உடனே எங்கள் மக்களின் துன்பங்களை பகிர்ந்து கொள்ள நீங்கள் அனைவரும் பல்வேறு விதங்களில் உதவிக் கரம் நீட்டினீர்கள் நீங்கள் எங்கள் மேல் கொண்ட பாசத்திற்கும் அன்புக்கும், உரிமைக்கும் நாங்கள் நன்றி கூறி நிற்கின்றோம்.

மன்னார் பிரஜைகள் குழு வழியாக 100,000.00 பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை முருங்கன் செம்மண்தீவு மக்களுக்கு வழங்க உதவி செய்தீர்கள். இந்த உங்கள் தாராள மனதையும் எங்கள் வலிகளை பகிர்ந்து கொண்டதற்கும் நன்றிகள் பல.

உங்கள் ஊடகப் பணிகள் மென்மேலும் சிறக்க, வளர வாழ்த்துகின்றோம், இறைவனிடம் வேண்டுகின்றோம்.

நன்றி





# Tennis-Australian - Open-2026

## அவுஸ்திரேலியா பகிரங்க ரெனிஸ் போட்டி - 2026

வெற்றிபெற்ற ஸ்பெயின் நாட்டு வீரனும் கஸகஸ்தான் நாட்டு வீராங்கனையும்..

விளையாட்டு உலகில் ரெனிஸ் விளையாட்டும் நூறாண்டுகள் கடந்த முக்கியமான விளையாட்டாகக் கருதப்படுகின்றது. முன்னைய காலங்களில் பணக்காரர்களின் விளையாட்டாகக் கருதப்பட்டது. காலமாற்றத்தால் படிப்படியாக மாற்றமடைந்து பின்னர் சாதாரண குடிமகனும் விளையாடக்கூடிய விளையாட்டாக மாறி பல ஆண்டுகளாகிவிட்டன.உலக நாடுகளில் இந்த விளையாட்டு பிரபலம் பெற்று விளங்கும் வேளை.Autralian Open, French Open, Wimbledon, US Open இந்த நான்கு போட்டிகளும்தான் GrandSlam என்று அழைக்கப்படும். இப்போட்டிகளுக்குத்தான் அதிகதொகை பணப்பரிசும் அதிக புள்ளிகளும் வழங்கப்படுகின்றன.

இந்த வருடத்தின் முதல் போட்டியாக (Autralian Open) அவுஸ்திரேலியா பகிரங்க ரெனிஸ்போட்டி 18.01.2026 - 01.02.2026 வரை நடைபெற்று முடிந்தது. இதில் ஆண்கள் பிரிவில் ஸ்பெயின் நாட்டு வீரன் கார்லோஸ் அல்கராஸ், பெண்கள் பிரிவில் கஸகஸ்தான் நாட்டு வீராங்கனை எலினா றபேக்கினாவும் வெற்றி பெற்றனர்.

ஆண்கள் இறுதிப்போட்டியில் உலக தரவரிசையில் 4 இடத்தில் இருந்தவருமான சேர்பியநாட்டு வீரன் ((Novak Djokovic) நொவாக் டிஜோகவிச்சும் உலக தரவரி சையில் 1 இடத்தில் இருந்தவருமான ஸ்பெயின் வீரன் (Carlos Alcaraz) கார்-லோஸ் அல்கராஸ் கடுமையாக (5மணி 27 நிமிடங்கள்) மோதிக்கொண்டதில் 2-6, 6-2, 6-2, 7-5 என்ற செட்கணக்கில் ஸ்பெயின் வீரன் வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தையும் பணப்பரிசாக 41.50.000 அவுஸ்திரேலிய டொ லர்களையும் அள்ளிச் சென்றார். தோல்வியடைந்தவருக்கு 21.50.000 அவுஸ்திரேலிய டெ-ாலரும் வழங்கப்பட்டது.

பெண்கள் பிரிவில் தற்போதய உலக தரவரிசையில் 1ம் இடத்தில் இருப்பவரும் பெலறுஸ் ( Belarus) நாட்டைச் சேர்ந்தவருமான அர்ஜான சபலெங்காவும் (Aryna Sabalenka) தற்போது உலக தரவரிசையில் 5வது இடத்திலிருப்பவரும் ( Kasachatan) கஸகஸ்தான் நாட்டு வீராங்கனையான எலினா றபேக்கினாவும் (Elena Rybakina) விறுவிறுப்பாக மோதிக்கொண்டதில் 4-6, 6-4, 4-6 என்ற செட்கணக்கில் எலினா றபேகினா வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தையும் பணப்பரிசான 41.50.000 அவுஸ்திரேலிய டொலர்களையும் அள்ளிச் சென்றார். தோல்வியடைந்தவருக்கு 21.50.000 அவுஸ்திரேலிய டொ லரும் வழங்கப்பட்டது.





மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவியால் நுவரெலியா- லெவண்ட் தோட்டப்பகுதிகளில் நிவாரணப்பணிகள்.. 25.01.2026









மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவியால் வவுனியா அட்சயம் உதவும் அமைப்பினரின் நிவாரணப்பணிகள்.. 15.01.2026





மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவியால் மன்னார் - சாந்தோம் முதியோர் இல்லத்தில் தைப்பொங்கல் விழா 15.01.2026








மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவியால் மட்டக்களப்பில் தைப்பொங்கல் பொதிகள் அன்பளிப்பு நிகழ்வு 12.01.2026

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 236




பங்குனி - 8
அனைத்துலகப் பெண்களுக்கும் இனிய பெண்கள் தின
நல் வாழ்த்துகள்!... - 2026

| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| --- | --- | --- |
| | ஏனைய நாடுகள் | 25€ |